# தமிழன்
THAMILAN தமிலன்

Follow us:

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 269 பிலவ வருடம், ஆனி மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை
(05.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்கஹ்தா பிறை - 23, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## நக்கல் நமசிவாயம்

கொரோனா முடிஞ்சா பிறகுதான் மாகாண சபைத் தேர்தல வைப்பினமாம்.. அப்போ இப்போதைக்கு வைக்க மாட்டினம்போல..



## மிருகக்காட்சிச்சாலை சிங்கத்திற்கு கொரோனா அல்பா திரிபு



02»

# ஜூலை 19 வரை பயணக்கட்டுப்பாடு

### விசேட சுற்றறிக்கை சுகாதார அமைச்சால் வெளியீடு

### கொரோனா பரவல் அச்சம் தொடர்வதால் நடவடிக்கை

• யோ.தர்மராஜ்

கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணக்கட்டுப்பாடு தொடர்ந்து அமுலில் இருக்குமென சுகாதார அமைச்சு விசேட சுற்றறிக்கையை நேற்று வெளியிட்டுள்ளது.

இதன்படி, இன்றுமுதல் ஜூலை 19ஆம் திகதிவரை கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடையானது, இன்றுமுதல் 14 நாட்களுக்கு அமுலிலிருக்கும். கொவிட் தொற்று நிலைமைக்கமைய பயணக்கட்டுப்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்தில் ஆசன எண்ணிக்கையில் 50 வீதமும் மேல் மாகாணத்தில் ஆசன எண்ணிக்கையில் 30 வீதமும் பயணிகளை ஏற்றிச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களில் ஆசன எண்ணிக்கைகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்கு குறைந்த பணியாளர்கள் குழுவைக்கொண்டு சேவை வழங்கவேண்டும். முடிந்தவரை வீடுகளிலிருந்து சேவையாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சேவைக்கு அழைப்போரை அந்நிறுவன பிரதானியால் தீர்மானிக்க முடியும். முடிந்தவரை வீட்டிலிருந்து சேவையாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 02»




கொழும்பு டேம் வீதியில் நிவாரணப் பொருட்களை பெற்றுச்செல்லும் இந்தத் தாயாரை நோக்குகையில் நாட்டின் பொருளாதார சுமையும், கவலையும் தெரிகிறது. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# மலையக தோட்டத் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிசெய்யுங்கள்

### சர்வதேச தொழில் ஸ்தாபனத்திடம் இராதா எம்.பி. கோரிக்கை



• க.கிஷாந்தன்

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிசெய்யும் விடயத்தில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் தலையீடு அவசியமெனக் கோரி கடிதம் அனுப்பியுள்ளதாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். 02»

# இயலாமையை மறைக்க போலி குற்றச்சாட்டுகள்

### தயாசிறியை கடுமையாக விமர்சிக்கிறார் ரோஹித

• யோ.தர்மராஜ்

இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்டோர் தங்களுடைய இயலாமையை மூடி மறைக்க போலியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள். ஒன்றிணைந்து பயணிக்கவேண்டுமாக இருந்தால் தங்களுடைய கூட்டுப்பொறுப்பை முறையாக அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளை பிரிக்கும்போது, தேசிய உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலேயே அமைச்சுகள் வழங்கப்பட்டன. இதனால், தேசிய ரீதியில் உள்நாட்டு உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

எனினும், அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்ட சிலர் தங்களுடைய இயலாமையினால் இன்று பல்வேறு விமர்சனங்களை முன்வைக்கின்றனர். குறிப்பாக, இராஜாங்க அமைச்சரான தயாசிறி ஜயசேகர, அமைச்சுப் பதவி குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார். ஆனால், கடந்த ஆட்சியில் அமைச்சரவை அமைச்சராக இருந்த அவர், விளையாட்டுக்காகவும் மக்களுக்காகவும் என்ன... 02»

# நாட்டில் 19 பேருக்கு டெல்ட்டா வைரஸ்

• நா. தினுஷா

நாட்டில் வேகமாகப் பரவும் டெல்ட்டா வைரஸ் தொற்றுடன் நாட்டில் இதுவரை 19 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில் ஒருவர் வெளிநாட்டுப் பிரஜை என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த ஐவர் முதன்முதலாக டெல்ட்டா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

ஏனைய 14 பேரும் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது இனங்காணப்பட்ட நோயாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளை பேணியோரிடம் பரிசோதனைகள்... 02»

# சர்வாதிகார நோக்கங்களுக்காக ஜனநாயக போராளிகளை தண்டிப்பதை நிறுத்துக!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆவேசம்

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்யாரத்ன மற்றும் அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் நாமல் கருணாரத்ன உள்ளிட்ட 5 பேரை கைதுசெய்ய முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த சர்வாதிகார, பாசிச வேலைத்திட்டத்திற்கு... 02»

# ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதிக்கு தடையில்லை

### திறைசேரி செயலர் அறிவிப்பு



• நா. தினுஷா

ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதிக்கு அரசு தடை விதித்திருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகளை திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல நிராகரித்துள்ளார்.

தொலைக்காட்சி , கைத்தொலைபேசிகள் மற்றும் தொழில்நுட்ப இலத்திரனியல் உபகரணங்களை இலங்கைக்குள் கொண்டுவர அரசு தடை விதித்துள்ளதாக வெளிவந்திருக்கும் செய்திகளை மறுத்து 'தமிழன்' செய்திகளிடம் கருத்து வெளியிட்ட ஆட்டிகல, அப்படி... 02»

# தொடர் போராட்டத்தில் மருத்துவ ஊழியர்கள்

• யோ.தர்மராஜ்

சுகாதாரத்துறை எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கோரி, நிறைவுகாண் மருத்துவ ஊழியர்கள் இன்றுமுதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

ஏற்கனவே பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்ட போதிலும் தீர்வு கிடைக்காததால் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்ததாக நிறைவுகாண் மருத்துவ... 02»

# எரிபொருள் பவுஸரில் கஞ்சா கடத்தல்!

### மீரிகமையில் மூவர் கைது



எரிபொருளை கொண்டுசெல்வதாகக் கூறி கஞ்சாவை கடத்திய எரிபொருள் தாங்கி ஒன்றின் சாரதியும், உதவியாளர்கள் இருவரும் மீரிகம பொலிஸ் விசேட குழுவொன்றினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு – கண்டி பிரதான வீதியில், வேவல்தெனிய பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை குறித்த தாங்கியுடன் சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாங்கியை சோதனையிட்டபோது அதனுள் இருந்து ஒரு கிலோ 250 கிராம் நிறையுடைய கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக மீரிகம பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கம்பஹா, ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் போக்குவரத்து சேவை நிறுவனமொன்றுக்கு உரித்தான... 02»

# வற்றாப்பளை அம்மனுக்கான நேர்த்தியை நிறைவேற்றினார் அமைச்சர் பவித்ரா

### கொரோனாவிலிருந்து மீள நேர்ந்தாரென தகவல்



சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி குடும்ப உறுப்பினர்கள் சகிதம் நேற்று முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார். அந்த சமயத்தில் அங்கு செல்ல ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. 02»

# இலங்கை பயணிகளுக்கு எமிரேட்ஸ் விமான நிறுவனம் தற்காலிக தடை

• நா. தினுஷா


இலங்கை பயணிகள் எமிரேட்ஸ் விமானத்தில் செல்வதை தற்காலிகமாக இடைநிறுத்த எமிரேட்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி இலங்கை, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகளை ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு அழைத்துச்செல்லும் நடவடிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிவரை இடைநிறுத்த எமிரேட்ஸ் விமான சேவை தீர்மானித்துள்ளது.

அத்துடன், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேற்படி நாடுகளுக்குச் சென்றிருந்த எந்தவொரு பயணியும், ஐக்கிய அரபு இராச்சியத்துக்குப் பிரவேசிக்க எதிர்வரும் 15ஆம் திகதிவரை அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை, ஜூலை 05, 2021 த

# மனிதக் கடத்தல் தொடர்பில் இலங்கை தொடர்ந்தும் அமெரிக்க கண்காணிப்பில்!



மனிதக் கடத்தல் தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையில், இலங்கையின் பெயரும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இந்த அறிக்கை வெளியானது.

“இலங்கை அரசு கடத்தலை ஒழிப்பதற்கான குறைந்தபட்ச தரங்களை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும், அவ்வாறு செய்ய குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த முயற்சிகளில் அரச அனாதை இல்லத்தில் குழந்தைகளின் பாலியல் சுரண்டல் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரித்தலும் அடங்கும்'' என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல் தடுப்புப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு செயற்பாட்டில் சர்வதேச அமைப்புகளுடன் அரசாங்கம் தொடர்ந்து பணியாற்றி வருவதாக அறிக்கை தெரிவித்துள்ளது.

இருப்பினும், முந்தைய அறிக்கையிடல் காலத்துடன் ஒப்பிடும்போது ஒட்டுமொத்தமான வளர்ச்சியை இலங்கை அரசாங்கம் நிரூபிக்கவில்லை.

இலங்கையானது தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக அடுக்கு 2 கண்காணிப்புப் பட்டியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.







கண்டியில் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர் கெட்டம்பே, அஸ்கிரி மற்றும் மல்வத்து விகாரைகளுக்கு சென்று மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்றனர்.

# இராணுவ வைத்தியசாலைகளில் இன்றுமுதல் கொவிட் தடுப்பூசி

நாட்டில் தெரிவுசெய்யப்பட்ட சில இராணுவ வைத்தியசாலைகளில் இன்றுமுதல் கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்பூசி வளங்களை துரிதப்படுத்தும் நோக்கில் இந்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

## மிருகக்காட்சிச்சாலை...

கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ள தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையின் தோர் என்ற சிங்கத்திற்கு இங்கிலாந்தின் கொரோனா அல்பா திரிபு இருப்பது உறுதியாகியுள்ளது.

எவ்வாறாயினும் மிருகக்காட்சிச்சாலையில் ஏனைய மிருகங்களை தொற்றிலிருந்து பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## எரிபொருள்...

இந்தத் தாங்கி ஊர்தியை பயன்படுத்தி, நீண்டகாலமாக இவ்வாறு கஞ்சா கடத்தப்பட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## நாட்டில்...

முன்னெடுக்கப்படுவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

டெல்ட்டா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளோரை அடையாளம் காண்பதற்காக எழுமாற்றாக பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் கூறியுள்ளார்.

## மலையக...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

" மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுத்து விட்டோம் என மார்தட்டிய குழு இன்று காணாமல்போயுள்ளது. ஆயிரம் ரூபா விவகாரத்தின் பின்னர் தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் நிர்வாகத்தால் நசுக்கப்படுகின்றனர். தொழில் சுமைகள் அதிகரிக்கப்பட்டு, வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தோட்டப்பகுதிகளில் தொழிலாளர்கள் இன்று போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித நிபந்தனைகளுமின்றி, முன்பு செய்த வேலையின் அளவுக்கே நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைப்பதை உறுதிப்படுத்தப்பட வேண்டும், வேலைச் சுமை அதிகரிக்கப்படக்கூடாது, அவர்களின் தொழில்சார் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு அவசியம் என்பது உட்பட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து தொழில் ஆணையாளருக்கு நாம் கடிதம் எழுதினோம். தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைப்பு வழங்குமாறு கம்பனிகளிடமும் கோரினோம். இரு தரப்புகளுமே எமது கோரிக்கைகளுக்கு செவிமடுக்கவில்லை.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் இனியும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்குமா என தெரியவில்லை. எனவே, அரசு, கம்பனிகள் இணைந்து தீர்வுகளை வழங்கவேண்டும், இதற்கான தலையீடுகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியாக கடிதம் அனுப்பியுள்ளோம். தேயிலை ஏற்றுமதி என்பது சர்வதேசத்துடன் தொடர்புபட்ட விடயமாகும். இது விடயத்தில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும்" - என்றார்.

## ஆடம்பர...

எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லையென தெரிவித்தார்.

ஆடம்பரப் பொருட்களை இறக்குமதிசெய்வதை தடைசெய்வதற்கு அல்லது இறக்குமதிக்கு கடுமையான கட்டுப்பாடு விதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

வீட்டுப்பாவனை மின் உபகரணங்கள், கைபேசிகள், வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள் அல்லாத வகைகளுக்கும் அடங்கும் பொருட்களுக்காக இறக்குமதித் தடை விதிக்கப்படவுள்ளதாக அவற்றில் சொல்லப்பட்டது.

இந்தத் தகவல்களையே திறைசேரி செயலாளர் ஆட்டிகல நிராகரித்துள்ளார்.

## வற்றாப்பளை..

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடொன்றை மேற்கொள்வதற்காக தனிப்பட்ட விஜயமாக நேற்றுக்காலை 11 மணியளவில் ஆலயத்துக்கு வந்து சுகாதார அமைச்சர் சிறப்பு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இந்நிலையில், செய்தி அறிக்கையிடலுக்காக சென்ற ஊடகவியலாளர்களிடம் பொலிஸார் ஊடாக வேண்டுகோள் விடுத்த அமைச்சர், குறித்த தனது பயணம் தனிப்பட்ட பயணம் என்றும் ஆகையால் இந்த இடத்தில் செய்தி சேகரிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

அண்மையில் கொவிட்-19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டிருந்த அமைச்சர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த நேர்த்திக் கடனை தீர்க்கும் முகமாக ஆலய வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வருகை தந்ததாக அறிய முடிகின்றது.

இதனைத் தொடர்ந்து குறித்த இடத்தில் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக நின்ற நிலையில் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலயத்தின் பின்வாசல் வழியாக அமைச்சர் வாகனத்தில் ஏறி புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அமைச்சரின் வருகையை முன்னிட்டு ஆலய முன்பகுதியில் இராணுவத்தினரால் இளைப்பாறும் பந்தல் அமைக்கப்பட்டு சிற்றுண்டிகள் தயார்ப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இறுதியில் அந்த இடத்துக்குக்கூட அமைச்சர் வருகை தரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இயலாமையை...

செய்துள்ளார் என்பதை வெளியிடுங்கள்.

தங்களுடைய இயலாமையை மூடிமறைக்க தேவையற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டாம். ஏனைய அமைச்சர்கள் தங்களுடைய கடமைகளை முறையாக முன்னெடுத்துச் செல்லும்போது, தயாசிறி ஜயசேகரவிற்கு என்ன பிரச்சினையுள்ளது என்பதில் எங்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. பத்திக் உள்ளிட்ட ஆடை உற்பத்தியில் அவர் என்ன செய்துள்ளார் என்பதை ஆராயவேண்டியுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுகதந்திரக் கட்சியும் ஓர் ஆசனத்தை பெற்றுக்கொள்ளுமாக இருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சகோதரர்களாவர்.

ஆகவே, அரசாங்கத்திற்குள் இருப்பதாயின் பிரச்சினைகளை அரசாங்கத்திற்குள் பேசுங்கள். வெளியில் பேச வேண்டாம். குறிப்பாக, அமைச்சரவை அமைச்சு கிடைக்காததால் ஏற்பட்ட நோயினாலேயே இவ்வாறு பேசுகின்றனர். ஒன்றிணைந்து பயணிக்க வேண்டுமாக இருந்தால் தங்களுடைய கூட்டுப்பொறுப்பை முறையாக நிறைவேற்றுங்கள் - என்றார்.

## ஜூலை 19 வரை...

நிறுவனங்களில் ஒன்றுகூடலின்போது அத்தியாவசிய தேவையெனில் 10 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செயலமர்வு, கருத்தரங்குகளில் அத்தியாவசிய தேவையெனில் 25 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வங்கிகள், நிதி நிறுவனங்கள், அடகுக் கடைகள் திறப்பதற்கு அனுமதி. எனினும், 10 பேருக்கு அதிகமாக ஒரேநேரத்தில் அழைப்பதற்கு அனுமதியில்லை. மேலும், குறைந்த பணியாட்கள் குழுவைக்கொண்டு சேவையாற்ற வேண்டும்.

விவசாய மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்கள் திறப்பதற்கு அனுமதி. எனினும், 25 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திறந்தவெளி வர்த்தக மற்றும் வாராந்த சந்தைகள் என்பன உள்ளூராட்சி மன்றங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் சுகாதார விதிமுறைகளுக்கமைய திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதார மத்திய நிலையத்தை மொத்த விற்பனைக்காக திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனுமதிபெற்ற நடமாடும் விற்பனை வாகனங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக மற்றும் கடைகள் என்பன அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளுக்கு அமைய திறப்பதற்கு அனுமதி. எனினும், ஒரு நேரத்தில் 3 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பேக்கரி போன்றன திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், ஒரேநேரத்தில் 3 பேருக்கு மாத்திரமே அனுமதிக்கப் பட்டுள்ளது.

சுப்பர் மார்க்கட் திறப்பதற்கு அனுமதி. எனினும், இடவசதியில் 25 வீதமானோர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

சந்தை கட்டிட தொகுதியை திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், தேவையற்ற ஒன்றுகூடல்களுக்கு அனுமதியில்லை.

மோட்டார் வாகன திருத்த நிலையங்கள், ரயர் கடைகள், வாகன சேவைகள் போன்றவற்றை திறப்பதற்கு அனுமதி. எனினும், மக்கள் ஒன்றுகூடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆடைத் தொழிற்சாலை உள்ளிட்ட முக்கிய தொழிற்சாலைகளில் கடுமையான சுகாதார விதிமுறைகளுடன் சேவையை முன்னெடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

சலூன்கள் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், ஒரேநேரத்தில் ஒருவருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆடை விற்பனை நிலையங்களை திறப்பதற்கு அனுமதி. எனினும், இடவசதியில் 25 வீதமானோருக்கு மாத்திரமே அனுமதி.

கட்டிட நிர்மாணங்களில் தங்கியிருந்து பணிபுரிவோரைக்கொண்டு சேவையாற்றுவதற்கு அனுமதி.

நீதிமன்றங்கள் அத்தியாவசிய மற்றும் அவசர தேவைகளுக்கு திறக்க அனுமதி. 50 வீதமானோருக்கு அனுமதி. மேல் மாகாணத்தில் 35 வீதமானோருக்கு அனுமதி.

சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள், சிறைச்சாலைகளில் உறவினர்கள் பார்வையிடுவதற்கு அனுமதி.

கல்வி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் பரீட்சைகள் தவிர்ந்து ஏனையவற்றிற்கு அனுமதி.

சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கமைய தனிநபர் பயிற்சிகளுக்கு அனுமதி. எனினும், குழு விளையாட்டுக்கு அனுமதியில்லை.

திருமணங்களுக்கு அனுமதியில்லை. மணமகன், மணமகள் உள்ளிட்டு 10 பேருடன் பதிவு திருமணத்திற்கு அனுமதி.

கொரோனா மரணங்கள் தவிர்ந்த மரணங்கள் 24 மணித்தியாலத்திற்குள் இறுதிக்கிரியைகள் நிறைவுசெய்ய வேண்டும். எனினும் 15 பேருக்கு மாத்திரமே அனுமதி.

மத வழிபாட்டுத் தலங்களுக்கு அனுமதியில்லை.

இசை நிகழ்ச்சிகள், கொண்டாடங்களுக்கு அனுமதியில்லை.

உணவு விநியோகத்திற்கு அனுமதி.

கூட்டுறவு நிறுவனங்களை திறப்பதற்கு அனுமதி.

பார்கள் திறப்பதற்கு அனுமதியில்லை.

கெசினோ மற்றும் இரவு களியாட்டங்களுக்கு அனுமதியில்லை.

ஹோட்டல்கள் மற்றும் ரெஸ்ட்டுரண்ட்கள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## தொடர் போராட்டத்தில்...

ஊழியர்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் நேற்று தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத்துறை எதிர்நோக்கும் பொதுவான சிக்கல்களை முன்வைத்து ஆரம்பித்த பணிப்பகிஷ்கரிப்பிற்கு உரிய தீர்வை வழங்காத காரணத்தினால் இன்றும் (நேற்று) குறித்த பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. எனினும், இன்னும் உரிய தீர்வு வழங்காது, சுகாதார அமைச்சு மாத்திரம் பதில் வழங்குவதால் ஏதேனும் பிரயோசனம் இருக்கின்றதா என்பதை கருத்திற்கொண்டு தீர்வு கிடைக்கும்வரை நாளை (இன்று) முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்கவுள்ளோம்.

நாடு முகங்கொடுத்துள்ள துர்ப்பாக்கிய நிலையிலும் நாங்கள் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுப்பது கவலைக்குரிய விடயம். ஆனால், சுகாதார அமைச்சு எங்களுக்கு நாளுக்குள் புதுப் புது பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றமையினாலேயே இவ்வாறு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட வேண்டியுள்ளது. ஆகவே, பொதுமக்கள் எங்கள் மீது குற்றம் சுமத்த வேண்டாம்.

கொவிட் தொற்று நிலைமையில் சுகாதார அமைச்சினால் புதுப்புது பிரச்சினைகளை ஏற்படுத்துவதே எங்கள் கோரிக்கையில் முக்கிய கோரிக்கையாகவுள்ளது. இந்த பணிப்பகிஷ்கரிப்பு நாளை (இன்று) முதல் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இதில் அனைத்து ஆய்வுகூட நிபுணர்கள் உள்ளிட்ட வைத்தியர்களும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம், குடும்பநல வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட 10 தொழிற்சங்கங்களும் இணைந்துகொள்ளவுள்ளனர்.

குறிப்பாக, கடந்த நாட்களில் முன்னெடுக்கப்பட்ட தாதியர்களின் பணிப்பகிஷ்கரிப்பின்போது, சுகாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதியும் உரிய தீர்வுகளை வழங்கினர். இதனால், தாதியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியளித்துள்ளது. ஆனால், தாதியர்களுக்கு தீர்வு வழங்கப்படும்போது, ஏனைய சுகாதார சேவைகள் தொடர்பான விடயங்கள் முற்றிலும் மறக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வேண்டுகோளுக்கமையவே அனைத்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தக் கோரிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சு மாத்திரம் முடிவெடுக்க முடியாது. அமைச்சரவையே இது குறித்து முடிவெடுக்க வேண்டும். எங்களுடைய பிரச்சினைகள் குறித்து எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வை வழங்குங்கள். இல்லையேல் தொடர்ந்து பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுப்போம். எனினும், பணிப்பகிஷ்கரிப்பு தொடர்கின்றபோதிலும், வைத்தியசாலைகளின் அத்தியாவசிய சேவைகள் முன்னெடுக்கப்படும். ஆனால், அதனை தொடர்ந்து முன்னெடுக்கவும் முடியாது - என்றார்.

## சர்வாதிகார...

ஐக்கிய மக்கள் சக்தியாக கடுமையான எதிர்ப்பையும் வெறுப்பையும் நாங்கள் வெளிப்படுத்துகிறோம் - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த அரசாங்கத்தின் தொடக்கத்திலிருந்தே, மக்கள் நலனுக்காக உழைப்பதற்குப் பதிலாக அவர்களின் தனிப்பட்ட அதிகாரவெறியுடன் செயற்பட்டு, மக்களின் வாழ்க்கையை துன்புறுத்துவதயே செய்துவந்தனர், அதேபோல் ஜனநாயகத்தின் போர்க்களத்தில் போராடும் போராளிகளை தண்டிப்பதுமே அவர்களின் வேலையாக இருந்துவருகிறது.

நாள்தோறும் மக்களின் ஏமாற்றங்களை மரபுரிமையாக கொண்டுள்ள இந்த அரசாங்கத்திற்கு எதிராக நாடு முழுவதிலும் உள்ள மக்கள் ஏற்கனவே அணிதிரண்டு வருகின்றனர், அதைத் தாங்கமுடியாத அரசாங்கம் இப்போது அதன் கொள்கையாக அடக்குமுறை, அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதன் மூலம் செய்துவருகிறது.

இந்த நாட்டில் ஜனநாயக அரசியலில் ஈடுபட ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் உரிமை உண்டு, அதை மீறும் எத்தகைய உரிமையும் அரசாங்கத்திற்கு இல்லை.

அரசாங்கத்தின் இயலாமை, தோல்வி மற்றும் உணர்வற்ற தன்மையை மறைக்க ஜனநாயக அரசியல் அரங்கிலுள்ள ஆர்வலர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் குடிமக்களை தண்டிக்க எந்த வகையிலும் அனுமதிக்கஷெஷமாட்டோம் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

கருத்துச் சுதந்திரம், ஜனநாயகப் போராட்டம், அரசாங்கத்தை விமர்சித்தல் போன்றவற்றுக்கான உரிமைகள் இந்த நாட்டின் அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்படுவதை இந்த அரசாங்கம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதோடு, சகோதர அரசியல் கட்சிகளுக்கு உள்ள அரசியலின் ஜனநாயக உரிமைகளை மீறுவதற்கு எதிராக சாத்தியமான மற்றும் செயற்பட முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம் என்பதையும் அரசாங்கத்திற்கு நினைவூட்ட விரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீள்அறிவித்தல் வரை புகையிரத போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே இடம்பெறும்

## அந்த திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் அறிவிப்பு

மாகாணங்களுக்கடையிலான புகையிரத போக்குவரத்துக்கு கொரோனா ஒழிப்பு தேசிய செயற்பாட்டின் மையத்தின் அனுமதி கிடைக்காமையினால் கடந்த வாரத்தில் புகையிரதங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டதைப் போன்று இன்றிலிருந்து மீள் அறிவித்தல் வரை புகையிரத போக்குவரத்து இடம்பெறுமென்று பிரதி புகையிரத பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அம்பேபுஸ்ஸ, அவிசாவளை, கொச்சிக்கடை மற்றும் அலுத்கம ஆகிய புகையிரத நிலையங்களிலிருந்து கொழும்பு கோட்டை மற்றும் மருதானை வரை 70 புகையிரத போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பிரதான வீதியில் அம்பேபுஸ்ஸ, மீரிகம, வெயான்கொடை மற்றும் கம்பஹா ஆகிய பிரதேசங்களிலிருந்து கொழும்பு கோட்டை வரை 11 புகையிரத போக்குவரத்துகளும், கரையோர வீதியில் அலுத்கம, தெற்கு களுத்துறை, வாதுவ, பாணந்துறை, மொரட்டுவை மற்றும் கல்கிஸை ஆகிய பிரதேசங்களிலிருந்து 12 புகையிரத போக்குவரத்துகளும், களனிவெளி வீதியில் அவிசாவளை மற்றும் பாதுக்கை வரை 05 புகையிரத போக்குவரத்துகளும், புத்தளம் வீதியில் கொச்சிக்கடை மற்றும் நீர்கொழும்பிலிருந்து 08 புகையிரத போக்குவரத்துகளும் என்ற அடிப்படையில் காலை கொழும்பு கோட்டை மற்றும் மருதானை ஆகிய பிரதேசங்களுக்கு புகையிரத போக்குவரத்து இடம்பெறவுள்ளது.

காலையில் ஆரம்பிக்கும் இந்த போக்குவரத்து நடவடிக்கைகளின் எண்ணிக்கை மாலையாகும்போது மீண்டும் புறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புகையிரத திணைக்களத்தினால் அவசியமற்ற சேவையில் போக்குவரத்தில் ஈடுபடும் மக்களின் வசதிக்கமைய மாகாணங்களுக்கிடையில் கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை வரை, பெலிஅத்தயிலிருந்து மருதானை வரை, மாஹவயிலிருந்து கொழும்பு கோட்டை வரை புகையிரத போக்குவரத்துக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், தேசிய கொரோனா கட்டுப்பாட்டுக்குழுவின் அனுமதி கிடைக்காமையினால், மேலும், மாகாணங்களுக்கிடையிலான புகையிரத போக்குவரத்து இடம்பெறாது. பயணிகளின் தேவைக்கேற்ப மேல் மாகாணத்தில் மேலும் சில புகையிரத போக்குவரத்துகள் இந்த வாரத்தில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்





இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. லண்டன் ஓவல் மைதானத்திற்கு எதிரில் புலம்பெயர் தமிழ் மக்களின் 'சுதந்திரத்திற்கான பறைக்குரல்' அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் இனப்படுகொலையை மறைக்க இலங்கையை அனுமதிக்க வேண்டாம், இலங்கை கிரிக்கெட் அணியை புறக்கணிப்போம் என கோஷம் எழுப்பியதுடன், சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர். குறித்த ஆர்ப்பாட்டத்தில் புலம்பெயர் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# வேவர்லி தோட்டத்தில் சிறுத்தையின் சடலம் மீட்பு!

நுவரெலியா மாவட்டத்தில் – டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேவர்லி தோட்டப்பகுதியிலிருந்து சிறுத்தையொன்றின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.



நான்கு வயது மதிக்கத்தக்க சுமார் 3 அடி நீளமான இச்சிறுத்தையின் கழுத்துப்பகுதியில் காயம் இருந்துள்ளது. எனவே, சிறுத்தை எவ்வாறு உயிரிழந்துள்ளது என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன. சிறுத்தையின் சடலம் பரிசோதனைக்காக எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

# டொல்பின்கள் – கடலாமைகளின் சடலங்கள் மீட்பு

(ஜூட் சமந்த)

மாரவில மற்றும் ஆராச்சிக்கட்டுவ கடற்கரைப் பிரதேசங்களில் உயிரிழந்த இரண்டு டொல்பின்கள் மற்றும் இரண்டு கடலாமைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டாம் திகதி மாரவில, மோதரவெல்ல கடற்கரைப் பிரதேசத்தில் டொல்பின் ஒன்றின் சடலமும், அதனை அண்மித்த பகுதியிலுள்ள தல்வில கடற்கரைப் பிரதேசத்தில் ஆமையொன்றின் சடலமும் மீட்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் ஆராச்சிக்கட்டுவ, முத்பந்திய தீவுப் பகுதியில் கடலாமையொன்றின் சடலமும், அதற்கு அருகிலுள்ள நகுலி எலிய தீவுப்பகுதியிலிருந்து டொல்பின் ஒன்றின் சடலமும் மீட்கப்பட்டுள்ளன.





இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள கடலாமைகள் மற்றும் டொல்பின்களின் சடலங்கள் வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஆனவிலுந்தாவ பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க கடற்றொழிலாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்

நாள் : 05.07.2021 திங்கட்கிழமை

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213 0714037141

**மேடம்** பழைய பிரச்சினைகள் தீரும். வருமானத்தில் நன்மை.

**ரிஷபம்** குடும்பத்தில் மகிழ்ச்சி, பிள்ளைகளின் கல்வியில் நன்மை உண்டாகும். எஞ்சிய வேலைகளில் ஈடுபட்டு முடிக்க இயலும்.

**மிதுனம்** அரசாங்கம் தொடர்பான வியாபார விடயங்களில் தடை உண்டாகலாம். உடல்நலம் சோர்வுடன் இருந்தாலும் செயல்திறன் இருக்கும்.

**கடகம்** நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களில் ஈடுபட வேண்டாம். காலத்தை வீணாக்காமல் பயன்படுத்தினால் நன்மை.

**சிம்மம்** அலுவலகத்தில் பதவியில் சிறப்பும், வணிகத்திலும், புதிய தொழில் தொடங்குவதிலும் அதிக நன்மை.

**கன்னி** குடும்பத்தில் மூத்தவர்களின் ஆசி பெறுதல் நன்மை. நம்பிக்கை அதிகரிப்பால் புதிய ஆக்கங்களுக்கான எண்ணங்கள் தோன்றலாம்.

**துலாம்** தேவையற்ற கவலைகள் வேண்டாம். வாழ்க்கைத் துணையும், இறைவனும் துணையிருப்பர். கோபத்தை தவிர்ப்பது நன்மை.

**விருச்சிகம்** பணிச்சுமை அதிகமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை உண்டாகும். சுப செய்திகள் கிடைக்கக்கூடும்.

**தனுசு** உடல்நலத்திலும், உணவிலும் கவனம் தேவை. மங்களகரமான விடயங்களில் முயற்சி உண்டாகும்.

**மகரம்** வேலைகளில் உங்கள் விருப்பங்களை நடைமுறைப்படுத்தலாம். பெண்களின் ஆரோக்கியத்துக்கு நன்மை.

**கும்பம்** வணிகர்களுக்கு புதிய வாய்ப்புகள் ஏற்படலாம். பரம்பரை சொத்துகள் கிடைக்கும். கடன்கள் வாங்குவதையும், கொடுப்பதையும் இன்று தவிர்ப்பது நன்மை.

**மீனம்** தகவல் தொழில்நுட்ப வருவாய் அதிகரிக்கும். மன அமைதி உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் நல்ல செய்தி கிடைக்கப் பெறலாம்.




### சட்டவிரோத மது உற்பத்தி, 6 பேர் கைது – பேலியகொடை

பேலியகொடை பிரிவின் குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் பேலியகொடை பொலிஸ் பிரிவில் நவநுகே பாதை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, முச்சக்கர வண்டியிலிருந்த 112.5 லீற்றர் (150 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் தகவல்களுக்கு அமைய சீதுவ பொலிஸ் பிரிவில் கெப் வண்டியிலிருந்த 187.5 லீற்றர் (250 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் கொடுகொட பிரதேசத்திலிருந்த 600 லீற்றர் ( 800 போத்தல்) சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜா – எல பொலிஸ் பிரிவில் ஏக்கல ஒதேகெலே பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சட்ட விரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட 37.5 லீற்றர் (50 போத்தல்கள்) மதுபானம், 4 ஆயிரத்து 536 லீற்றர் (24 பெரள்) கோடா, 8 கேஸ் சிலிண்டர்கள், 4 கேஸ் அடுப்புகள் மற்றும் 12 செப்பு தகடுகள் என்பவற்றுடன் ஒரு பெண் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஜா – எல மற்றும் கொடுகொட பிரதேசத்தைச் சேர்ந்த 31, 33, 38, 39, 41 மற்றும் 48 வயதுடைய ஆறு பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### ஹெரோயினுடன் இருவர் கைது – பொரளை

பொரளை பொலிஸ் பிரிவில் ஹல்கஹவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 5.50 மணியளவில் பொரளை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 10 கிராம் 850 மில்லிகிராம் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொரளை மற்றும் மாகொல பிரதேசத்தைச் சேர்ந்த 36 மற்றும் 43 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### கைக்குண்டுடன் ஒருவர் கைது – வீரகெட்டிய

வீரகெட்டிய பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் காலை 9.20 மணியளவில் வீரகெட்டிய பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது, அவர் பல மோட்டார் வாகன திருட்டுகளுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரென தெரியவந்துள்ளதுடன், 3 மோட்டார் வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். ஹகுருவெல பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### துப்பாக்கியுடன் ஒருவர் கைது – மங்கலகம

மங்கலகம பொலிஸ் பிரிவில் 40 கிராம பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 4.15 மணியளவில் மங்கலகம பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சட்டவிரோத துப்பாகியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மங்கலகம பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### மனித கொலை – பொலன்னறுவை

பொலன்னறுவை பொலிஸ் பிரிவில் நிஸ்ஸங்கமல்ல புர பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 6.15 மணியளவில் பெண்ணொருவரை அவருடைய சகோதரர் இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளார். சம்பவத்தில் படுகாமடைந்த பெண் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். நிஸ்ஸங்கமல்ல புர பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### நீரில் மூழ்கி ஒருவர் பலி – மஸ்கெலிய

மஸ்கெலிய பொலிஸ் பிரிவில் கெஸ்பியன் தோட்ட ஆற்றில் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

க்லேண்டில் தோட்டத்தைச் சேர்ந்த 75 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### வீதி விபத்து – புலஸ்திபுர

புலஸ்திபுர பொலிஸ் பிரிவில் பொலன்னறுவை சுங்காவில வீதியில் நேற்று முன்தினம் சுங்காவில நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து, பாதையை விட்டு விலகி, அருகிலிருந்த தடுப்புச்சுவரில் மோதுண்டதில் விபத்தொன்று ஏற்பட்டுள்ளது. இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார். ஓட்டமாவடி, பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### வீதி விபத்து – கிளிநொச்சி

கிளிநொச்சி பொலிஸ் பிரிவில் வவுனியா – யாழ்ப்பாணம் வீதியில் நேற்று முன்தினம் மாலை 4.10 மணியளவில் வவுனியா நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று எதிரில் சென்ற கெப் வண்டியின் பின்னால் மோதியதில் விபத்தொன்று ஏற்பட்டுள்ளது. இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

**தொகுப்பு : யோ.தர்மராஜ்**



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூலை 05 ஆம் திகதி, திங்கட்கிழமை

# தேவை உடனடி பொருளாதார மீட்சி

பெசில் ராஜபக்ஷவை நாடாளுமன்ற உறுப்பினராக்குவதால் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காணமுடியாது என்று தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அமைச்சர்களையும், இராஜாங்க அமைச்சர்களையும் பெசில் ராஜபக்ஷவே நியமித்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

பெசில் ராஜபக்ஷ அமைச்சர் பதவியேற்ற மறுநாள் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் மறைந்துவிடாது எனத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், நாடு பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளதாகவும், தாங்கள் இதனை மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அனைவரும் எதிர்கொள்ளவேண்டும் என்பதால், மக்கள் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு எவ்வாறு உதவப்போகின்றார்கள் என அரசிடம் கேட்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தயாசிறியின் இந்தக் கருத்துக்கள் இரண்டு விடயங்களை சுட்டிநிற்கின்றன. முதலாவது, ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குமிடையில் நல்ல உறவுகள் இல்லை. இரண்டாவது நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை. அரசியல் முரண்பாடுகளை பற்றி இப்போது மக்களுக்கு அக்கறையில்லை. ஆனால், நாட்டின் பொருளாதாரம் நாளுக்குள் நாள் சரிவை சந்தித்து வருவதால் தயாசிறியின் மேற்படி கருத்தை சற்று ஆழமாக நோக்க வேண்டியிருக்கிறது.

நாட்டில் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு குறைந்துள்ளதால் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு அடுத்த இரண்டு மாதங்களில் மூன்று நாடுகளிடமிருந்து 215 கோடி அமெரிக்க டொலரைக் கடனாக பெறுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்தியாவிடமிருந்து அமெரிக்க டொலர் 40 கோடியும், பங்களாதேஷிடமிருந்து அமெரிக்க டொலர் 25 கோடியும், சீனாவிடமிருந்து அமெரிக்க டொலர் 150 கோடியும் கடனாகப் பெறப்படவுள்ளன. இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளிடம் பெறும் கடன், குறுகிய காலக் கடன்களாகும். அதேசமயம் சீனாவிடமிருந்து பெறுவதை நீண்டகாலக் கடனாக வரையறுக்க அந்நாட்டிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மறுபுறம், இம்மாதம் மாத்திரம் 100 கோடி அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடன்களை செலுத்த அரசு தயாராகி வருகிறது. நாட்டின் வெளிநாட்டுக்கடன் மீள் செலுத்தும்தொகை அதிகமாக இருப்பதால் இன்னும் சில மாதங்களில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கலாமென பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொருளாதார வீழ்ச்சியின் ஓர் அங்கமாக நாட்டில் தங்கத்திற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. பாரிய தட்டுப்பாடு காரணமாக தங்கத்தின் விலையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்மைய, கொழும்பு – 11 செட்டியார் தெருவில் ஒரு பவுண் 24 கரட் தங்கத்தின் (03 ஆம் திகதி சனிக்கிழமை) விலை 127,000 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை (30) 116,000 ரூபாவாக காணப்பட்ட ஒரு பவுண் 24 கரட் தங்கத்தின் விலை ஜூலை 1ஆம் திகதி வியாழக்கிழமை 120,000 ரூபாவாக சடுதியாக அதிகரிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் (03) சனிக்கிழமை மேலும் 1,000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்படி கடந்த 11 நாட்களுக்குள் தங்கத்தின் விலை சுமார் 10 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

தங்க இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமையினால் நாட்டில் தங்கத்திற்கு பாரியவில் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இந்த திடீர் விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது.தங்க இறக்குமதிக்கு அனுமதி வழங்கும் பட்சத்தில் தங்கத்தின் விலை ஓரளவு குறைவடையும் என நம்பலாம். ஆனால், அது உடனடி சாத்தியப்படாத விடயம். ஏனெனில், இந்த திடீர் விலையேற்றம் காரணமாக தங்க வியாபாரம் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலைமை இருக்கிறது.

நாடளாவிய ரீதியில் சுமார் 5,000 தொடக்கம் 7,000 வரையான நகைக் கடைகள் காணப்படுகின்றன. இவற்றில் சுமார் 100,000 பேர் பணியாற்றுகின்றனர். இதற்கு மேலதிகமாக சுமார் 200,000 பேர் தங்க ஆபரண உற்பத்தித்துறையுடன் தொடர்புபட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்புடைய பல குடும்பங்கள் தற்போதைய விலையேற்றம் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அது மாத்திரமல்லாம் நகை வியாபாரத்துடன் தொடர்புடைய ஆயிரக்கணக்கானோர் வேலையிழக்கும் அபாயமும் உள்ளது.

மத்திய வங்கியினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 220 பில்லியன் ரூபா நாணய அச்சிடல் காரணமாகவே நாட்டில் தங்கத்திற்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்பதை சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

புதிதாக நாணய அச்சிடலை மேற்கொள்ளும்போது, அதற்கேற்ற அளவினால் தங்க இருப்பினை மத்திய வங்கி பேணுவது வழமையாகும். இதற்கமைய அண்மையில் நாட்டில் மேற்கொள்ள நாணய அச்சிடலின் போது உள்நாட்டில் காணப்பட்ட தங்கமானது மத்திய வங்கியின் இருப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையினால் தற்போது நாட்டில் தங்கத்திற்குப் பாரிய நெருக்கடி நிலவுகின்றது.

இதன் காரணமாகவே நாட்டில் தங்கத்தின் விலையில் பாரிய அதிகரிப்பு குறிப்பட்ட சில நாட்களுக்குள் நிகழ்ந்துள்ளது.இந்த நிலைமைகள் நாட்டின் எதிர்கால பொருளாதாரம் எப்படி இருக்குமென்பதை எமது கண்முன்னே கொண்டுவருகின்றன.

கடந்த நல்லாட்சியின்போது அவர்களின் செயற்பாடுகள் முறையாக இல்லாத காரணத்தினால் புதிய ஆட்சி தேவையென மக்கள் கருதினர்.புதிய மாற்றமொன்றுக்கு மக்கள் ஆணை தேவையென கூறியதால் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சுமார் 69 இலட்சம் வாக்காளர்கள் ஆதரவை வழங்கினர். அதன் பின்னர் நாடாளுமன்ற பலம் தேவையென கூறியதால் மூன்றிலிரண்டு நாடாளுமன்ற பெரும்பான்மை பலம் மக்களால் வழங்கப்பட்டது. அதன்பின்னர் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தினை மாற்ற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டு அதுவும் செய்தாயிற்று. இப்போது நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு செல்ல பெசில் ராஜபக்ஷவே தேவையென சொல்லப்படுவதால், தயாசிறியின் கூற்றில் தவறைக் காணமுடியாது.

சட்டத்தை, நீதியை இறுக்கமாகக் கடைப்பிடிப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று நாட்டின் நீதித்துறையின் தீர்மானத்தை புறந்தள்ளி மரணதண்டனைக் கைதிகளை விடுவித்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் ஈடுபட்டவர்களை தண்டிப்போமென கங்கணம் கட்டியவர்கள், அந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் மதுபான உற்பத்தியில் மீண்டும் ஈடுபட அனுமதி வழங்கியுள்ளனர். நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி அராஜகங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

பெசில் ராஜபக்ஷ சிறந்தநிர்வாகி. அரசியலிலும் அவருக்கு நன்கு அனுபவம் உள்ளது. ஆனால், இப்போதுள்ள நெருக்கடியை அவர் எவ்வாறு சமாளிக்கப் போகிறார் என்பதில்தான் கேள்வி தொக்கி நிற்கின்றது. நாடு இப்போதுள்ள நிலைமையில் எவராவது ஒருவர் உடனடியாக பொருளாதாரத்தை மீட்க நடவடிக்கைகள் எடுப்பது நல்லது. தயாசிறியின் கருத்துகள் அரசியல் முலாம் பூசப்பட்டவை என்றாலும் அதில் நியாயம் இல்லாமல் இல்லை.

# ஏழு பேர் விடுதலை எப்போது?



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சென்னை ஸ்ரீபெரும்புதூருக்கு 1991ஆம் ஆண்டு மே 21ஆம் தேதி தேர்தல் பிரசாரத்துக்கு வந்தபோது படுகொலை செய்யப்பட்டார். முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன், ஜெயக்குமார், ரவிச்சந்திரன், ரொபர்ட் பயஸ் உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டனர். பூந்தமல்லியில் உள்ள தடா நீதிமன்றத்தில் சி.பி.ஐ.யால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ஏறக்குறைய எட்டு வருடங்களுக்குப் பிறகு 1998 ஜனவரி 28ஆம் திகதி குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் தடா நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது என்று தொடங்கி, அதன் பின்னர் 1999 மே 11இல் நளினி, சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை, மற்ற மூன்று பேருக்கு ஆயுள் தண்டனை, மீதமுள்ள 19 பேருக்கு விடுதலை என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதன் பின்னர் முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் தூக்குத் தண்டனையை இரத்து செய்யக் கோரி தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் நிராகரித்தது என்று தொடங்கிய இந்த நீண்ட வழக்கு, 30 ஆண்டுகளாகப் பல்வேறு கருணை மனுக்களாலும், நீதிமன்றங்கள், ஆளுநருடைய கருணை மனுக்கள், தமிழக முதல்வர்களின் பரிந்துரைகள், குடியரசுத் தலைவரின் நிராகரிப்பு என்று எத்தனையோ துயரங்களைக் கடந்து விட்டது. ஆனால், விடுதலை என்கிற கோட்டைத் தொட முடியவில்லை.

2016 பெப்ரவரி 14இல் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவரின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அவர்களை விடுவிப்பது தொடர்பாக தமிழக அரசே முடிவு செய்து கொள்ளலாம் எனவும் உத்தரவிடப்பட்டது. தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதன் பின்னர் பல்வேறு ஏற்ற - இறக்கங்களைச் சந்தித்த ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட ஏழு பேரை விடுதலை செய்யலாம் என உயர்நீதிமன்றம் அதிரடியாக உத்தரவு பிறப்பித்தது.

அன்றைய முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மூன்று வருடங்களைத் தொடப்போகும் நிலையில், இவ்விடுதலை குறித்தான முடிவு இன்னும் புதிராகவே நீண்டு கொண்டு போகிறது. ஏழு பேர் விடுதலைக்குப் பெருமளவு ஆதரவு இருந்தாலும், அது தவறான முன்னுதாரணம் ஆகிவிடும் என்கிற குரல்களும் எழத்தான் செய்கின்றன.

சிறைச்சாலையில் கண்ணீரோடும், வேதனையோடும் கால் நூற்றாண்டைக் கடந்துவிட்டவர்கள் மீது கருணை காட்டக் கூடாதா என்பதுதான் மனிதாபிமானப் பற்றாளர்களின் எண்ணமாக இருக்கிறது. சிறையில் தண்டனை அனுபவித்தல் என்பதைத் தாண்டி அவர்கள் தங்களுடைய மறுவாழ்க்கைக்குத் தயாராவதற்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படுவதுதானே நாகரிக உலகின் கருணைப் பார்வையாக இருக்க முடியும்.

'இவர்கள் மீது காட்டப்படும் அக்கறை, கொலைக்குற்றம் செய்து சிறையிலுள்ள மற்ற குற்றவாளிகளுக்கும் காட்டப்படுமா?' என்றும், 'ராஜீவ் காந்தி கொலையாளிகளின் செயலை நியாயப்படுத்திப் பேசுவது, மனுநீதிச் சோழன் வழிவந்த தமிழர் பண்பாட்டுக்கு நியாயமா?' என்றும் காங்கிரஸ் கட்சி தனது தரப்பு வாதத்தை முன் வைக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனையிலிருந்த ஏழு பேரையும் விடுதலை செய்ய, 2014 பெப்ரவரியில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அப்போதைய மத்திய காங்கிரஸ் அரசு உயர்நீதிமன்றம் சென்று விடுதலைக்குத் தடைபெற்றது. இவ்வழக்கு தொடர்ந்து நடைபெற்று தற்போது விடுதலைக்கான எல்லையைத் தொட்டபோது, கதவு திறக்கப்படக்கூடும் என்கிற நம்பிக்கை இருந்த நிலையில், விடை தெரியாமலேயே மூன்று வருட காலங்கள் கடந்து விட்டன.

இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில், எந்த ஆயுள் தண்டனைக் கைதியும் இத்தனை ஆண்டுகள் சிறையில் இருந்ததே இல்லை. சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி, அண்ணா பிறந்த தினம் என்று எத்தனையோ கைதிகளுக்கு விடுதலை அளிக்கப்படுகின்றது. அப்போதுகூட காலம் கடந்த நிலையிலும், இவர்களின் மீது கருணைப் பார்வை கிடைக்கவில்லை.

ராஜீவ் காந்தி கொலை வழக்கைப் புலனாய்வு செய்த தலைமை புலனாய்வு அதிகாரி ரகோத்தமன், 'இவ்வழக்கின் சூழலைக் கணக்கில் கொண்டு, இந்த ஏழு பேரையும் விடுதலை செய்யலாம்' என்று கருத்து தெரிவித்திருந்தார். சாதாரணமாக எந்த வழக்கிலும் விதி 161இன் அடிப்படையில் அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆளுநர் எவ்வித மறுப்பும் இல்லாமல் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் கொடுக்க வேண்டும். ஆனால், நிலைமை கைமீறிப் போய்விட்டது.

பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் விடுதலை குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்குத்தான் இருக்கிறது என்பது ஆளுநரின் வாதமாக இருக்கிறது. மத்திய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் 'இந்த விவகாரத்தில் தமிழக ஆளுநர் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் முடிவெடுப்பார்' என உறுதியளித்தார். ஆனால், காலம் கடந்து விட்டது.

தற்போதைய தி.மு.க. தலைமையிலான தமிழக அரசின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஏழு பேர் விடுதலை குறித்து குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளார். இதில் கடந்த 2018ஆம் ஆண்டு அ.தி.மு.க. அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற கடிதம் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கு மிகவும் சிக்கலாக இருப்பதனால், சட்ட ரீதியான, அரசியல் சாசன ரீதியான, நிர்வாக ரீதியான விடயங்கள் குறித்து ஆராய வேண்டியிருக்கிறது. மேலும், இதுபோன்ற நடைமுறையை இவ்வழக்கு வருங்காலத்தில் ஏற்படுத்தி விடுமோ என்கிற ஒரு சர்ச்சையும் இதன் மீதான அழுத்தத்தைக் கொடுக்கிறது.

ஒரு மாநிலத்தின் அதிகாரத்துக்குட்பட்ட சட்டங்களில், சட்டத்துக்கு எதிராக குற்றம் புரிந்து தண்டிக்கப்பட்ட ஒருவரது தண்டனையைக் குறைக்க அல்லது விடுவிக்க அல்லது மன்னிப்பளிக்க, அவற்றை இடைக்காலமாக நிறுத்தி வைக்க அல்லது அடியோடு இரத்து செய்ய மாநில ஆளுநருக்கு உரிமை உண்டு என்றாலும், ஒருவருக்குத் தண்டனை தர வேண்டுமென்றாலும், ஒருவரை விடுதலை செய்ய வேண்டும் என்றாலும் அதை நீதிமன்றமே முடிவு செய்ய வேண்டும் என்ற அழுத்தத்தால் இவ்வழக்கு தடுமாறிக் கொண்டிருக்கிறது.

நீதிமன்றம், மாநில அரசு, மாநில ஆளுநர், உள்துறை அமைச்சகம், இந்திய குடியரசுத் தலைவர் என்று இவ்வழக்கு சுற்றிச் சுற்றி வருகிறது. ஆனால், சிறைக்கதவுகள் திறக்கப்படுவதற்கான சூழ்நிலை உருவாகவில்லை.

2018இல் அ.தி.மு.க. அமைச்சரவை நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில், இவ்வழக்கை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால், அதிகார வரம்பில் மேல் நிலை அதிகாரமே முக்கியத்துவம் வாய்ந்ததாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஏழு பேரும் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடுகிறார்கள். தண்டனையை முழுமையாகப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அவர்களின் மறுவாழ்வுக்கான மனிதாபிமான நடவடிக்கையாக விடுதலை செய்யப்படுவதையே கடந்த கால அரசும், நிகழ்கால அரசும், தமிழின உணர்வாளர்களும் தங்கள் கருத்தாகவே முன்வைக்கிறார்கள். இந்த ஏழு பேருக்கும் விடுதலைக்கான உத்தரவு வரும் வரை ஏன் அவர்களை பரோலில் விடுவிக்கக் கூடாது என்கிற எண்ணத்தை அரசு கருதிப் பார்க்க வேண்டும்.

தண்டனை பெற்று சிறையில் இருக்கும் ஒருவரை விடுதலை செய்ய அரசுக்கு இரண்டு விதமான அதிகாரங்கள் உள்ளன. ஒன்று குற்றவியல் நடைமுறைச் சட்டம் வழங்கும் அதிகாரம். மற்றொன்று, இவ்வழக்கில் தண்டனை பெற்றவர்களை மாநில அரசு விடுதலை செய்வதற்கான அதிகாரம். மாநில அரசு விரைந்து மத்திய அரசிடம் ஆலோசிக்க வேண்டும்.

குடியரசுத் தலைவரிடம் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளும் நேரில் சந்தித்து அழுத்தம் கொடுக்க வேண்டும். இவ்விடுதலை குறித்து தமிழர்களின் எண்ணங்களை மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும், இவ்விடுதலை குறித்தான கவனயீர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, இவ்விடுதலைக்கான எல்லையைத் தொடுகிற வரை ஒன்றுபட்ட குரல்கள் ஒலித்தாக வேண்டும்.

மேலும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சோனியா காந்தியும், ராகுல் காந்தியும் இவ்விடுதலை குறித்தான தெளிவான பார்வையை எடுத்து வைத்து, அவர்கள் இருவரும் குடியரசுத் தலைவரிடம் ஏழு பேரின் விடுதலை குறித்து பேச வேண்டும். இல்லையேல், இன்னும் விடுதலைக்கான கால நீட்டிப்பு அதிகமாகி விடும்.

30 ஆண்டுகளாக துன்பச் சிறையில் சிக்குண்டு முழுமையான தண்டனையைப் பெற்று வரும் குற்றவாளிகளின் விடுதலை என்பது மானுடப்பற்றின் கருணையைச் சார்ந்ததே ஆகும். இதில் சட்ட பிரச்சனையைப் பார்ப்பதிலோ அல்லது காங்கிரஸார் சொல்வதைப் போல குற்றவாளிகளை ஜாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு பார்க்காதீர்கள் என்று கூறுவதிலோ அர்த்தமில்லை.

குற்றவாளிகள் 30 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனையை அனுபவித்து விட்டனர். அவர்களின் வாழ்வுக்கான மீள்பார்வையை, அவர்கள் வாழ்தலுக்கான இருத்தலை, எஞ்சிய நாட்களை அவர்கள் வாழ்ந்து முடிப்பதற்கான சுதந்திரத்தைத் தருவதுதானே மனிதகுல நியாயமாக இருக்க முடியும்?

**வைகைச்செல்வன்**
**முன்னாள் அமைச்சர்**
**தமிழ்நாடு**

# சவால்களுக்கு மத்தியில் நிகழ்நிலையில் தடம்பதிக்கும்

## சைவ மங்கையர் வித்தியாலயம்





நாடே கொரோனாவின் கோரப்பிடியில் முடக்கப்பட்டிருந்த நிலையில், நாட்டின் அனைத்துவிதச் செயற்பாடுகளும் தடைப்பட்டிருந்தன. அந்தவகையில் எமக்குத் தடை என்பதே என்றும் இல்லை என்பதற்கிணங்க நிகழ்நிலை வழியாக கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. நிகழ்நிலைக் கல்வி முறை என்பது புதிய அறிமுகமேயாயினும் அதனை கல்விசார் சமூகம் சளைக்காமல் கையாண்டது. அனைத்துப் பாடசாலைகளும் ஒன்றிணைந்து கைகோர்த்த இந்நிகழ்நிலைக் கல்விமுறையில்



சைவ மங்கையர் வித்தியாலயம் முன்னிலையில் நிற்கத் தவறவில்லை.

ஒரு நாணயத்துக்கு எவ்வாறு இரு பக்கங்கள் இருக்கின்றதோ, அதுபோல் நிகழ்நிலைக் கல்வி முறையிலும் நன்மையும் தீமையும் இருக்கத்தான் செய்கின்றன. அதிலுள்ள நன்மையை



தன்பால்கொண்டு, வெற்றித் திசை நோக்கி சைவ மங்கையர் வித்தியாலயம் பயணிக்கின்றது. இவ்வித்தியாலய அதிபரின் ஆளுமை மிக்க சிந்தனை வழிநடத்தலின் கீழ் பாடசாலை வழமைபோல் கலைத்திட்டத்தின்படி நிகழ்நிலையிலும் தவறாது கல்வி நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் நேர்த்தியாக



மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உரிய காலப்பகுதியில் கணிப்பீடுகள், மதிப்பீடுகள் மற்றும் தவணை மதிப்பீடுகளும் சீரான முறையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன. நிகழ்நிலை வாயிலாக கல்வியை மாணவர்களுக்கு உரிய முறையில் கொண்டு சேர்ப்பதில் இவ்வித்தியாலய ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர். கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்துச்செல்வதில் ஆசிரியர்களுடன் இணைந்து மாணவர்களும் தம் பிள்ளைகளை ஊக்குவிக்கும் முகமாக பெற்றோர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

"பருவத்தே பயிர் செய்" என்பதற்கமைய பாடசாலைப் பருவத்தின் உரிய காலப்பகுதியில் அனுபவங்களைப் பெறவேண்டும், ஆளுமை செயற்பாடுகளை விருத்தி செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடனும் "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்ற முதுமொழி வாக்கிற்கேற்ப



மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் சந்தர்ப்பங்களை நழுவ விடாது, அவர்களுக்கென களமமைத்து அவர்களின் ஆற்றல்களின் படைப்பை உருவாக்க சந்தர்ப்பங்கள் வழங்கவேண்டும் என்ற நோக்கத்துடனும் அதிபர் செயற்பட்டமையாலேயே நிகழ்நிலை ஊடாக மாணவர்களின் இணைப் பாடவிதான செயற்பாடுகள் உள்ளிட்ட கலை, நுண்ணறிவுத் திறன் நிகழ்ச்சிகள் அரங்கமின்றி நிறைவேற முடிந்தது.

50 cm x 7 col

# செலான் வங்கி பீ.எல்.சீ.
# வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்
# கைவிடப்பட்ட சொத்துகள்

## கைவிடப்பட்ட சொத்துகள் தொடர்பிலானவங்கித்துறை சட்டத்தின் (பிரிவு 72-76 பகுதி IX) நிபந்தனையின் அமுலாக்கம்

- வங்கித்துறை சட்டத்தின் 72ஆம் பிரிவின் படி, பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு செயற்படாத வங்கிக் கணக்குகளில் உள்ள வைப்புகள் அல்லது ஏனைய பணங்கள் கைவிடப்பட்ட சொத்துகளில் உள்ளடங்கும்.
- வங்கித்துறை சட்டத்தின் 73(i) பிரிவின் தேவையின்படி, கைவிடப்பட்ட சொத்து என மதிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களின் கணக்கு தொடர்பான விபரங்களை இலங்கை மத்திய வங்கிக்கு நாம் கையளித்துள்ளோம்.
- கீழே பட்டியலிடப்பட்டுள்ள எமது ஏதேனும் கிளைகளில் கைவிடப்பட்ட சொத்து இருப்பதாக கருதும் எந்த வாடிக்கையாளரும், **மேலதிக விபரங்களுக்கு கிளையை தொடர்பு கொள்ளவும்.**
- வைப்பு அல்லது மீள்பெறல், விலாசம் மாறியது தொடர்பான அறிவிப்பு அல்லது கணக்கை செயற்படுவதாக மாற்றக்கோரி வங்கிக்கு கடிதம், போன்ற ஏனைய எழுத்துமூல தொடர்புகள் மூலம் இதுபோன்ற கணக்குகளை வாடிக்கையாளர்கள் புதுப்பிக்க முடியும்.
- கைவிடப்பட்டதாக பதியப்பட்டுள்ள சொத்திற்குரிய வாடிக்கையாளருக்கு, பதிவுத் தபாலில் இதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.
- கைவிடப்பட்ட சொத்து தொடர்பான தனிப்பட்ட நபரின் கணக்கு விபரங்கள், ஏனைய இதுபோன்ற தகவல்கள் சம்பந்தப்படாத நபர்கள் சொத்தின் உரிமையை கோர உபயோகிக்கப்படலாம் என்பதனால், கைவிடப்பட்ட சொத்தின் பாதுகாப்புக்காக பிரசுரிக்கப்படவில்லை.

| வங்கிக் கிளைகள் | தொலைபேசி இலக்கங்கள் | கணக்குகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | நடைமுறைக் கணக்கு | சேமிப்புக் கணக்கு | சிறுவர் | ஏனையவை |
| அம்பலாங்கொடை கிளை | 0912258010, 0912258710 | 1 | 223 | 174 | 9 |
| அம்பாறை கிளை | 0632224896, 0632224898 | 0 | 70 | 30 | 0 |
| அனுராதபுரம் கிளை | 0252224649, 0252224547 | 4 | 242 | 177 | 0 |
| அரலகன்வில கிளை | 0272257274, 0272257275 | 0 | 33 | 3 | 0 |
| அத்திடிய கிளை | 0112729696, 0112738453 | 2 | 62 | 20 | 13 |
| அவிஸ்ஸாவலை கிளை | 0362222007, 0362232265 | 2 | 207 | 114 | 27 |
| பதுளை கிளை | 0552222073, 0552223414 | 2 | 186 | 236 | 0 |
| பதுரலிய கிளை | 0342246716 | 0 | 62 | 14 | 0 |
| பலாங்கொடை கிளை | 0452287107, 0452288577 | 0 | 173 | 70 | 0 |
| பண்டாரகமை கிளை | 0382290706, 0382290460 | 1 | 83 | 37 | 18 |
| பண்டாரவளை கிளை | 0572223144, 0572231085 | 1 | 76 | 151 | 0 |
| மட்டக்களப்பு கிளை | 0652224419, 0652226395 | 1 | 198 | 230 | 0 |
| பெலியத்த கிளை | 0472243619, 0472243461 | 1 | 140 | 57 | 0 |
| பேருவளை கிளை | 0342279887, 0342279211 | 0 | 35 | 5 | 0 |
| பொகவந்தலாவ கிளை | 0522267576, 0522267765 | 0 | 149 | 33 | 3 |
| பொரளஸ்கமுவ கிளை | 0112517548, 0112517549 | 6 | 147 | 97 | 26 |
| பொரளை கிளை | 0112678190, 0112681191 | 5 | 139 | 133 | 0 |
| போவத்தை கிளை | 0322245771, 0322245752 | 0 | 17 | 2 | 0 |
| சிலாபம் கிளை | 0322222121 | 1 | 160 | 229 | 0 |
| கறுவாத்தோட்டம் கிளை | 0112694966, 0112695214 | 8 | 98 | 168 | 13 |
| கொழும்பு கோட்டை கிளை | 0112327200, 0112445840 | 4 | 57 | 469 | 0 |
| சங்கானை கிளை | 0212250025, 0212251060 | 0 | 34 | 0 | 0 |
| டாம் வீதி கிளை | 0112390980, 0112390981 | 0 | 79 | 182 | 2 |
| தெஹியத்த கண்டிய கிளை | 0272250034, 0272250269 | 0 | 213 | 150 | 99 |
| தெஹிவளை கிளை | 0112726395, 0112738843 | 8 | 156 | 207 | 0 |
| எம்பிலிப்பிட்டிய கிளை | 0472230340, 0472230341 | 3 | 182 | 184 | 0 |
| எப்பாவல கிளை | 0252249923, 0252249924 | 0 | 10 | 2 | 0 |
| வெளிநாட்டு நாணய வங்கி பிரிவு கிளை | 0112456617, 0112456619 | 10 | 0 | 0 | 3 |
| காலி கிளை | 0912232242, 0912234542 | 4 | 211 | 324 | 0 |
| கம்பாஹா கிளை | 0332222618, 0332226511 | 3 | 235 | 165 | 0 |
| கம்பளை கிளை | 0812352741, 0812352742 | 2 | 136 | 75 | 3 |
| கனேமுல்லை கிளை | 0332260230, 0332260738 | 1 | 69 | 125 | 5 |
| கொத்தடுவ கிளை | 0112410985, 0112411256 | 1 | 31 | 14 | 0 |
| கிராண்ட்பாஸ் கிளை | 0112447581, 0112447582 | 5 | 91 | 37 | 0 |
| ஹம்பாந்தோட்டை கிளை | 0472220507, 0472220518 | 0 | 71 | 35 | 0 |
| ஹட்டன் கிளை | 0512222234, 0512222347 | 2 | 196 | 142 | 0 |
| ஹவ்லொக் டவுன் கிளை | 0112596550, 0112596551 | 6 | 91 | 125 | 0 |
| ஹிங்குராங்கொட கிளை | 0272246242, 0272247596 | 1 | 98 | 91 | 0 |
| ஹோமாகமை கிளை | 0112855065, 0112894846 | 3 | 144 | 78 | 20 |
| ஹொரணை கிளை | 0342261176, 0342262963 | 4 | 153 | 121 | 17 |
| இங்கிரிய கிளை | 0342269754, 0342268390 | 0 | 47 | 6 | 0 |
| ஜா எல கிளை | 0112237421, 0112237498 | 5 | 155 | 100 | 0 |
| யாழ்ப்பாணம் கிளை | 0212223047, 0212225073 | 1 | 274 | 40 | 0 |
| கடவத்தை கிளை | 0112925594, 0112925595 | 0 | 133 | 96 | 14 |
| கல்பிட்டி கிளை | 0322260803, 0322260804 | 1 | 7 | 1 | 0 |
| களுபோவிலை கிளை | 0112822944, 0112822945 | 2 | 71 | 34 | 31 |
| களுத்துறை கிளை | 0342225035, 0342225036 | 1 | 152 | 185 | 4 |
| கம்புறுபிட்டிய கிளை | 0412292555, 0412292515 | 0 | 6 | 9 | 0 |
| கண்டி கிளை | 0812239149, 0812232767 | 15 | 424 | 799 | 10 |
| கந்தளாய் கிளை | 0262234478, 0262234479 | 0 | 10 | 0 | 0 |
| காத்தான்குடி கிளை | 0652246625, 0652247456 | 1 | 130 | 75 | 0 |
| கடுகஸ்தொட கிளை | 0812050771, 0812212870 | 0 | 32 | 6 | 0 |
| கட்டுநாயக்க கிளை | 0112251462, 0112252566 | 4 | 63 | 6 | 0 |
| கட்டுனேரியா கிளை | 0312257765, 0312255209 | 2 | 153 | 60 | 0 |
| கேகாலை கிளை | 0352222007, 0352222100 | 2 | 155 | 204 | 0 |
| கெக்கிராவ கிளை | 0252264590, 0252264591 | 2 | 81 | 92 | 0 |
| கிரிபத்கொடை கிளை | 0112914518, 0112912378 | 3 | 211 | 139 | 4 |
| கிரிந்திவல கிளை | 0332269709, 0332247316 | 0 | 28 | 1 | 0 |
| கிருலப்பனை கிளை | 0112829054, 0112829055 | 0 | 8 | 5 | 0 |
| கிளிநொச்சி கிளை | 0212285310, 0212285311 | 0 | 51 | 0 | 0 |
| கொச்சிக்கடை கிளை | 0312277661, 0312277580 | 2 | 119 | 106 | 0 |
| கொக்கல்ல கிளை | 0912283390, 0912283389 | 1 | 36 | 21 | 0 |
| கொள்ளுப்பிட்டி கிளை | 0112576910, 0112576911 | 11 | 101 | 250 | 0 |
| கொட்டாஞ்சேனை கிளை | 0112447041, 0112337911 | 0 | 37 | 5 | 0 |
| கொட்டியாகும்புரை கிளை | 0352289035, 0352289350 | 0 | 36 | 22 | 0 |
| கொட்டாவ கிளை | 0112842682, 0112842683 | 3 | 108 | 74 | 0 |
| குளியாப்பிட்டிய கிளை | 0372281450, 0372281510 | 3 | 229 | 96 | 0 |
| குருநாகல கிளை | 0372223575, 0372223581 | 3 | 303 | 231 | 0 |
| மகரகம கிளை | 0112850648, 0112850629 | 5 | 110 | 185 | 0 |
| மாலபே கிளை | 0112561415, 0112560515 | 0 | 103 | 98 | 2 |
| மன்னம்பிட்டி கிளை | 0272224455, 0272051008 | 0 | 52 | 9 | 0 |
| மருதானை கிளை | 0112473281, 0112473773 | 4 | 43 | 112 | 0 |
| மரதஹமுல்லை கிளை | 0312246377, 0312246096 | 0 | 61 | 47 | 0 |
| மஹியங்கனை கிளை | 0552258112, 0552258113 | 0 | 19 | 4 | 0 |
| மாத்தளை கிளை | 0662223241, 0662223242 | 4 | 313 | 332 | 8 |
| மாத்தறை கிளை | 0412221181, 0412221182 | 1 | 206 | 321 | 25 |
| மத்துகமை கிளை | 0342247544, 0342247545 | 0 | 247 | 178 | 0 |
| மாவனல்ல கிளை | 0352246007, 0352246988 | 1 | 143 | 157 | 0 |
| மதவாச்சி கிளை | 0252245383, 0252245384 | 0 | 9 | 0 | 0 |
| மீகொட கிளை | 0112184641, 0112830817 | 4 | 121 | 7 | 4 |
| மிலேனியம் கிளை | 0112452502, 0112452503 | 60 | 256 | 163 | 17 |
| மினுவங்கொடை கிளை | 0112299004, 0112294199 | 0 | 21 | 7 | 0 |
| மீரிகம கிளை | 0332273001, 0332273002 | 1 | 121 | 37 | 1 |
| மொரட்டுவை கிளை | 0112656902, 0112656903 | 5 | 138 | 174 | 0 |
| மானிப்பாய் கிளை | 0212255526, 0212256245 | 1 | 14 | 0 | 0 |
| மவுண்ட்லவினியா கிளை | 0112731267, 0112731266 | 6 | 135 | 112 | 12 |
| நாவலை கிளை | 0112805059, 0112807329 | 5 | 109 | 280 | 27 |
| நாவலப்பிட்டிய கிளை | 0542222056, 0542222057 | 0 | 104 | 91 | 0 |
| நீர்கொழும்பு கிளை | 0312224334, 0312224336 | 1 | 254 | 366 | 0 |
| நிட்டம்புவ கிளை | 0332295270, 0332295271 | 1 | 71 | 25 | 2 |
| நெல்லியடி கிளை | 0212262953, 0212262954 | 1 | 127 | 0 | 0 |
| நொச்சியாகம கிளை | 0252257220, 0252257501 | 0 | 13 | 0 | 0 |
| நுகெகொடை கிளை | 0112809955, 0112811180 | 7 | 166 | 180 | 48 |
| நுவரெலியா கிளை | 0522223026, 0522223593 | 3 | 144 | 133 | 6 |
| பழைய சோனக வீதி கிளை | 0112336950, 0112447539 | 4 | 72 | 130 | 13 |
| பல்லேகல கிளை | 0812423958, 0812052135 | 0 | 18 | 4 | 0 |
| பாணந்துறை கிளை | 0382233172, 0382233173 | 6 | 188 | 223 | 2 |
| பெல்மடுல்ல கிளை | 0452275625, 0452275037 | 2 | 59 | 56 | 0 |
| கோட்டை கிளை | 0112337823, 0112337824 | 4 | 88 | 44 | 0 |
| புத்தளம் கிளை | 0322265194, 0322265580 | 2 | 212 | 113 | 0 |
| ரத்தொழுகமை கிளை | 0112292778, 0112292252 | 0 | 82 | 36 | 0 |
| ரன்பொகுனுகமை கிளை | 0332282242, 0332283266 | 0 | 6 | 36 | 0 |
| இரத்தினபுரி கிளை | 0452223111, 0452223730 | 1 | 118 | 97 | 1 |
| ருவன்வெல்ல கிளை | 0362267445, 0362267446 | 0 | 59 | 20 | 0 |
| சம்மாந்துறை கிளை | 0672261284, 0672058002 | 1 | 22 | 2 | 0 |
| சரிக்காமுல்லை கிளை | 0382235265, 0382235264 | 2 | 89 | 50 | 1 |
| சொய்சாபுர கிளை | 0112622756, 0112604982 | 0 | 73 | 24 | 0 |
| தலவாக்கலை கிளை | 0522258635, 0522258638 | 1 | 120 | 100 | 55 |
| திஸ்மஹாராமை கிளை | 0472237191, 0472237162 | 1 | 312 | 365 | 0 |
| திருகோணமலை கிளை | 0262227701, 0262227702 | 2 | 202 | 72 | 0 |
| வவுனியா கிளை | 0242222633, 0242222634 | 4 | 380 | 379 | 0 |
| வரக்காப்பொலை கிளை | 0352267628, 0352267629 | 0 | 106 | 32 | 0 |
| வத்தளை கிளை | 0112933589, 0112933590 | 2 | 159 | 93 | 0 |
| வெலிமட கிளை | 0572245617, 0572245395 | 0 | 120 | 153 | 0 |
| வெலிவேரியா கிளை | 0332255021, 0332255291 | 1 | 154 | 43 | 6 |
| வெள்ளவத்தை கிளை | 0112594855, 0112594856 | 7 | 147 | 115 | 0 |
| விஜேராம கிளை | 0112803154, 0112803153 | 1 | 15 | 5 | 0 |
| யக்கல கிளை | 0332226378, 0332222492 | 1 | 123 | 40 | 0 |
| பதவிய கிளை | 0252253003, 0252253033 | 0 | 17 | 2 | 0 |
| கதிர்காமம் கிளை | 0472236348, 0472236248 | 0 | 1 | 0 | 0 |
| கதுருவெல கிளை | 0272225319, 0272225320 | 1 | 313 | 75 | 0 |
| புசல்லாவை கிளை | 0812478131, 0812478132 | 0 | 15 | 9 | 0 |
| சியம்பலாடுவ கிளை | 0552279138 | 0 | 10 | 0 | 0 |
| அக்குரஸ்ஸ கிளை | 0412284951, 0412284952 | 0 | 0 | 1 | 0 |
| பத்தரமுல்லை கிளை | 0112876102, 0112876103 | 0 | 0 | 1 | 0 |
| மொணராகலை கிளை | 0552276221, 0552276212 | 0 | 0 | 1 | 0 |
| யட்டியாங்தோட்டை கிளை | 0362271480, 0362270034 | 0 | 48 | 10 | 0 |
| மொத்தம் | | 307 | 14345 | 12518 | 551 |

# குப்பையிலிருந்து மாதத்திற்கு 40 தொன் கொம்போஸ்ட் பசளை தயாரிப்பு

## கண்டி மாநகரசபையின் விசேட திட்டம்





(கண்டி செய்தியாளர்)

விவசாயத்திற்கு காபன் பசளையைப் பயன்படுத்துவது தொடர்பான அரசின் புதிய திட்டத்திற்கு பங்களிப்பு செய்யும் வகையில் கண்டி மாநகர சபை பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளிலிருந்து இயற்கைப் பசளை உற்பத்தி செய்யும் திட்டமொன்றை கண்டி மாநகர சபை தொடங்கியுள்ளது. தற்போது மாதம் 40 மெட்ரிக் தொன் வரை உற்பத்தி செய்யப்படுகிறது.

கண்டி மாநகர சபைப் பகுதியிலிருந்து மாதாந்தம் சுமார் 100 மெட்ரிக் தொன் குப்பை சேகரிக்கப்பட்டு இவை அனைத்தும் கட்டுகஸ்தோட்டை, கோஹகோடா, தேக்கவத்த என்ற இடத்திலுள்ள குப்பை மேடுகளில் கொட்டப்பட்டு வருகின்றது.

தற்போது ஒரு சிறியளவில் உரமாக்கல் செயல்முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது, இது மேலும் விரிவாக்கப்படவுள்ளது. தற்போது மாதத்திற்கு 40 மெட்ரிக் தொன் காபன் உரத்தை உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டுள்ளது. இது தொடர்பாக மத்திய மாகாண ஆளுநர், லலித் யூ.கமகே தலைமையில் ஒரு வெளிக்கள அவதானிப்பு இடம்பெற்றது.

கண்டி நகர எல்லையில் சேரும் குப்பைகள் சுமார் 40 ஆண்டுகளாக மேற்படி இடத்தில் கொட்டப்பட்டன. கழிவுப்பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் காபன் பசளையின் தரம் விவசாயத்துறைக்கு எந்தளவு பொருந்தும் என்பது பற்றி மாகந்துரயிலுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தில் பரிசோதிக்கப்பட்டு வருவதாக ஆளுநர் இங்கு தெரிவித்தார். மேலும், இந்த உரத்தை மத்திய மாகாணத்தின் விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் கூறினார்.

மேற்படி வெளிக்கள அவதானிப்பில் கண்டி மேயர் கேசர சேனநாயக்க, கண்டி மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் சேன திசாநாயக்க, மாகாண பிரதான செயலாளர் காமினி ராஜரத்ன, கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், கண்டி மாநகர ஆணையாளர் அமில நவரத்ன உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



ஹாலிஎல பகுதியில் நேற்று முன்தினம் பெய்த அடைமழையால் கந்தெகெதர பகுதி நீரில் மூழ்கியது. (படப்பிடிப்பு: ஹாலிஎல செய்தியாளர்)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட எழுவர் பிந்தாலியவில் கைது

(ஹாலிஎல செய்தியாளர்)

ஒக்காம்பிட்டிய, பிந்தாலிய பகுதியிலுள்ள ஒரு வீட்டில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 07 பேரை ஒக்காம்பிட்டி பொலிஸார் கைதுசெய்துள்ளனர். ஒக்காம்பிட்டி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுமித் பசில் குமார தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் குழு இந்த சோதனையை மேற்கொண்டது.

இதன்போது, இவர்கள் சமூக இடைவெளியை மீறி நெருக்கமாகவும், முகக்கவசங்கள் இன்றியும் இருந்துள்ளனர். சுகாதார அறிவுறுத்தல்கள் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

## கடவளை தோட்ட மக்களுக்கு முகக்கவசங்கள் வழங்கிவைப்பு




(கினிகத்தேனை நிருபர்)

தனிமைப்படுத்தப்பட்டுள்ள கினிகத்தேனை கடவளை தோட்ட மக்களுக்கு திகா – உதயா நிவாரணத்திட்டத்தில் ஒரு தொகை முகக்கவசங்களை தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் ஆலோசனையில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில் வாகனம் உதயகுமாரின் வழிகாட்டலில் வழங்கி வைக்கப்பட்டது.

தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள கடவலை தோட்டத்தில் இரு லயன் குடியிருப்புகள் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு, ஏனையவர்களும் அங்கிருந்து வெளிசெல்லவோ, உட்செல்லவோ முடியாது. எனவே, குறித்த தோட்ட மக்களை பாதுகாக்கும் நோக்கில் குறித்த தோட்ட இளைஞர்கள் ஊடாக முகக்கவசங்களை பொறுப்பேற்று மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கூரகல விகாரையில் விசேட வழிபாடுகள்



(சிவா ஸ்ரீதரராவ்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பலாங்கொடை கூரகல நெல்லிகல பௌத்த விகாரையின் விகாராதிபதி வணக்கத்திற்குரிய வத்துரகும்புரே தம்மரதன தேரரின் ஜனன தினத்தை முன்னிட்டு கூரகல நெல்லிகல விகாரையில் கடந்த வெள்ளிக்கிழமை (2) விசேட வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, இராணுவ தளபதி ஷவேந்திர சில்வா, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தகம, மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுளா இதிகாவெல உட்பட அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி விகாராதிபதியின் பிறந்தநாளை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ கூரகல நெல்லிகல விகாரைக்கு ஆலவட்டம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கிவைத்தார்.

## பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நவநெலியகமவில் மக்கள் ஆர்ப்பாட்டம்



(கண்டி செய்தியாளர்)

உரம் வழங்குமாறும், எரிபொருட்களின் விலையைக் குறைக்குமாறும், தடுப்பூசி பெற்றுக்கொடுக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தி கலஹா, தெல்தோட்டை பிரதேச செயலகத்துக்குட்பட்ட நவநெலியகம பகுதியில் வயலில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் சாந்தினி சாந்தினி கோங்கஹகே, பிரதேச அரசியல்வாதிகள், விவசாயிகள் உட்பட பலர் இப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

தெல்தோட்டை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் நெல் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளே அதிகம். உரத்தட்டுப்பாட்டால் விளைச்சல் அழிவடைந்து வருகின்றது என சுட்டிக்காட்டும் விவசாயிகள், தமக்கு உரம் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் எரிபொருட்களின் விலையும், இதர பொருட்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் வாழ்க்கைச்சுமை உச்சம் தொட்டுள்ளது. எனவே, விலைக்குறைப்பு செய்து நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

பெருந்தோட்டப்பகுதியில் உள்ளவர்களுக்கு தடுப்பூசி வழங்க வேண்டும் என்ற பதாகையும் போராட்டத்தின்போது ஏந்தப்பட்டிருந்தது.

## அம்பகமுவ விகாரையில் 9 பிக்குகளுக்கு கொரோனா




(மனுர சுதத் செல்லஹேவா)

அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட ஸ்ரீ சுதர்ஷனாராம விகாரையில் பிக்குகள் ஒன்பது பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதன்காரணமாக விகாரையை உடனடியாக மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பிக்குமார் சுகயீனமுற்றதையடுத்து அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டபி.சி.ஆர். பரிசோதனைகளின்போதே தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவர்கள் அனைவரையும் அதே விகாரையில் தனிமைப்படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்களை அம்பகமுவ பிரதேச செயலாளர் காரியாலயத்தின் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக மாடுகளை கொண்டு சென்ற இருவர் கைது



(நோர்வூட் செய்தியாளர்)

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக இரு மாடுகளைக் கொண்டு சென்ற மூவரை நோர்வூட் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நோர்வூட் மாநெலு பகுதியில் நேற்று (04) அதிகாலை 5.50 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்திற்கிடமான முறையில் லொறியொன்று வருவதனை கண்டு சோதனை செய்தபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மஸ்கெலியா - சாமிமலை பகுதியிலிருந்து பொகவந்தலாவை பகுதிக்கு மாடுகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது .

பசு மாட்டினையும், கன்றினையும் வளர்ப்பதற்காகவே கொண்டு செல்வதாக இவர்கள் வாக்குமூலம் அளித்துள்ள போதிலும் இறைச்சிக்காகக் கொண்டு சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த இரண்டு மாடுகள் மற்றும் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்ட லொறி ஆகியன பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

## நோர்வூட்டில் ஒருவர் கொரோனாவுக்குப் பலி

(மனுர சுதத் செல்லஹேவா)

பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட நோர்வூட் நகரத்தில் ஒருவர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார். நோர்வூட்டைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொரோனாவுக்குப் பலியானதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடும் சுகயீனம் காரணமாக கிளங்கன் வைத்தியசாலையில் அந்த நபர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். அதன் பின்னர் சடலத்துக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையின்போது அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அந்த நபருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள் மற்றும் தாதியரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கலபொட தோட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தித் திட்டம் முன்னெடுப்பு

### அமைச்சர் மஹிந்தானந்த நேரில் சென்று ஆராய்வு





(கினிகத்தேனை செய்தியாளர்)

நாவலப்பிட்டி கலபொட தோட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தி வேலைத்திட்டத்தையும், கிளிசீரியா மரங்கள் வளர்க்கும் திட்டத்தையும் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று முன்தினம் பார்வையிடப்பட்டார்.

அரசாங்கத்தின் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு என்ற வேலைத்திட்டத்திற்கு அமைய தற்போது அரசாங்கத்தினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இதனடிப்படையில் சேதனப் பசளையை ஊக்குவிக்கும் முகமாக அரசாங்கத்தின் கொள்கையாக இரசாயன உரத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலையில் அரசாங்கம் இரசாயனத்திற்கு பதிலாக சேதனை பசளையினை பயன்படுத்தி விவசாயத்தை ஊக்குவிக்குமுகமாக சூழல் நேயமிக்க பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் அரசுக்கு சொந்தமான அனைத்து ஜனதா மேம்பாட்டுத் தோட்டங்களிலும் சேதன உற்பத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு சுமார் மூவாயிரத்து 500 ஹெக்டெயர் பரப்பளவில் கிளிசீரியா மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

நாவலப்பிட்டி கலபொட தோட்டத்தில் புதிதாக வளர்க்கப்பட்டு வரும் கிளிசீரியா மரங்களை பார்வையிட்டு அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர், தற்போது சேதன உற்பத்திக்குரிய கிளிசீரியா மரங்களை வளர்த்து வருகின்றோம் அதனை எமது அரசாங்கத்திற்கு சொந்தமான ஜனதா தோட்டங்களில் சென்று பார்வையிட்டு வருகின்றேன். கடந்த வாரம் ஜனதா தோட்ட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான ஹந்தான தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் இவ்வாறான வேலைத்திட்டத்தையும் பார்வையிட்டேன். அங்கும் சேதனப் பசளை உற்பத்திற்குரிய கிளிசீரியா மரம் வளர்க்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுவும் தற்போது வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லப் படுகின்றது.

இந்த தேசிய வேலைத்திட்டத்தை நாடு பூராவும் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். அதேவேளை சூற்றுப்புறச்சூழலில் சேதனப் பசளை வேளாண்மையை நடைமுறை சாத்தியமாக்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள அனைத்து முயற்சிகளையும் மிக வெற்றிகரமாக எதிர்காலத்தில் முன்னெடுத்து செல்வோம் என்றார்.

தமிழன்
www.thamilan.lk
வணிக உலகம்
Business world
GROWTH

# மக்கள் வங்கிக்கு அகவை அறுபது

இலங்கையின் நிதித்துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு ஜூலை மாதம் 1ஆம் திகதியுடன் 60 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஆறு தசாப்த காலத்தினை பூர்த்தி செய்திடும் இவ்வேளையில், வாடிக்கையாளர்களை மையப்படுத்தி அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் நன்கு விஸ்தரிக்கப்பட்டுள்ள நிதிச்சேவைகளையும் நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய சேவைகள் பலவற்றையும் அறிமுகப்படுத்திட தங்களை அர்ப்பணித்துள்ள மக்கள் வங்கியினர் மக்களின் வங்கியாக இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி அவர்களின் மனதில் கௌரவமானதோர் இடத்தினைப் பிடித்துள்ளது.

இலங்கையின் கூட்டுறவு வியாபாரம், கிராமிய வங்கி முறைமை மற்றும் கிராமிய மக்களின் வாழ்வினை கட்டியெழுப்பிடும் நோக்கத்துடன் 1961, 29ஆம் இலக்க சட்டத்தின் கீழ் மக்கள் வங்கி நிறுவப்பட்டது. முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியின் போது, அப்போதைய அரசின் வியாபாரம், உணவு, கூட்டுறவு மற்றும் கடற்படை விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சராக இருந்த டீ. பீ.இலங்கரத்னவால் அச்சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதேபோல் அப்போதைய காலகட்டத்தில் கூட்டுறவுத்துறைக்கு பாரிய சேவைகளைப் புரிந்து வந்த வின்சன்ட் சுபசிங்ஹ மக்கள் வங்கியின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கற்றோருக்கும், வசதியானோருக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வங்கிமுறைமை மக்கள் வங்கியின் தோற்றத்துடன் மாற்றப்பட்டது. அதன் விளைவாக, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வங்கியாகவும் மக்கள் வங்கி விளங்குகிறது.

அதே போல் ஆரம்ப காலகட்டத்தில் கமத்தொழில், தோட்டத்துறை பொருளாதாரம், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறைகள் மற்றும் அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்ள வெவ்வேறுபட்ட கடன் வசதித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. சாதாரண மக்களை சேமிப்புப் பழக்கத்திற்கு ஊக்குவித்திடவும் அதே வேளை தங்க நகை அடகுச் சேவை நடவடிக்கைகளுக்கும் மக்கள் வங்கி 1963ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்தது. அரச வங்கியொன்றின் பாதுகாப்புடன் சாதாரண வட்டி வீதங்களுடன் தங்க நகை அடகுச் சேவைகள் செயற்படுவதால் அதுவரையில் முறையற்ற விதத்தில் செயற்பட்ட தங்கநகை விற்பனைச் சந்தை சரியான முறையில் செயற்படத்தொடங்கியது.

இன்று மக்கள் வங்கியானது ஒரு ட்ரில்லியனுக்கும் அதிகமான சொத்துப் பெறுமதியைக் கொண்டுள்ள இலங்கையின் மிகப் பெரிய நிதி நிறுவனமாகும். நாடு முழுவதும் 741 கிளைகளுடன் வியாபித்திருக்கும் மக்கள் வங்கி, நாடு முழுவதும் 250க்கும் அதிகமான மக்கள் வங்கி சுய வங்கிச்சேவை அலகுகளையும் கொண்டுள்ளது. அவற்றினூடாக வருடத்தின் 365 நாட்களும், கிழமையின் 7 நாட்களும், நாளாந்தம் 24 மணி நேரமும் வங்கிக் கிளையொன்றுக்குச் செல்லாமலேயே மிகவும் இலகுவாக மற்றும் வினைத்திறன் மிகு வங்கி அனுபவத்தினைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. 14 மில்லியனுக்கும் அதிகமான மொத்த வாடிக்கையாளர் எண்ணிக்கையையும் கொண்டுள்ளதுடன், இது இலங்கையில் ஒரு வணிக வங்கி கொண்டுள்ள மிகப்பெரிய அளவிலான வாடிக்கையாளர் எண்ணிக்கையாகும். இவ்வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக 8000க்கும் அதிகமான ஊழியர்களையும் மக்கள் வங்கி தம்மகத்தேக் கொண்டுள்ளது.





மக்கள் வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அதன் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ கருத்து தெரிவிக்கையில்,

“1961ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் திகதி இலங்கையின் வங்கித்துறையில் ஒரு முக்கியமான மைல்கல்லினை அடைந்திடும் வகையில் நிறுவப்பட்ட மக்கள் வங்கி இன்று மிகவும் பெருமையுடன் தமது 60ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்றது.

பொறுப்புமிக்க அரச வங்கியாக மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, இந்நாட்டின் சமூக, பொருளாதார எழுச்சிக்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் சுலபமானவையன்று. அரச வங்கியாக மக்கள் வங்கி கடந்த 60 ஆண்டு காலமாக ஏற்றுமதி, கல்வி, சுகாதார, அதிவேக நெடுஞ்சாலைகள், சுற்றுலா, உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளுக்கு நிதியியல் வசதிகளைப் பெற்றுக் கொடுத்ததன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றியது.

அதேபோல் மக்கள் வங்கி இலாப நோக்க அடிப்படையில் மட்டுமன்றி, ஓர் அரச வங்கியாக தமது சமூக பொறுப்புக்களை சரியாக புரிந்து கொண்ட நிதி நிறுவனமாகவும் செயற்படுகிறது. கொவிட்-19 நெருக்கடியுடன் இலங்கை சமூகம் முன்னர் கண்டிராத புதிய சவாலுக்கு முகம் கொடுத்திடும் இத்தருணத்தில், தேசிய பொருளாதாரத்தினை நிலையாக வைத்திருக்க மக்கள் வங்கி பெரும் பங்களிப்பினை வழங்கியது.

எதிர்காலத்திலும் மக்கள் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்திடும் இலங்கையர்களின் வங்கியாக மக்கள் வங்கி இருந்திடும் என்பதுடன், வினைத்திறனுடன் நிதிச்சேவைகளை பெற்றுக் கொடுத்திடவும் தம்மை அர்ப்பணித்துள்ளது” எனத் தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு கருத்து தெரிவிக்கையில்,

“மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டதுடன் கற்றோருக்கும், வசதியானோருக்கும் மட்டும் வரையறுக்கப்பட்ட வங்கி முறைமையானது பொதுமக்களுக்கும் திறந்துவிடப்பட்டது. அன்று முதல் ஆறு தசாப்த காலமாக மக்கள் வங்கியானது தமது உற்பத்திகளையும், சேவைகளையும் மேலும் விருத்தி செய்து பல எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கும் இலங்கையர்களை நிதியியல் ரீதியாக வலுப்படுத்தியது. அதேபோல் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் மக்கள் வங்கி பெரும் பங்காற்றுகின்றது.

மக்கள் வங்கி தமது வாடிக்கையாளர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடனான வங்கியியல் மற்றும் நிதியியல் துறையில் புதிய பாணிகளையும், இயலுமைகளையும் அறிமுகப்படுத்தி உயர் கொடுக்கல் வாங்கல் அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்திட நடவடிக்கைகள் எடுத்துள்ளது. எதிர்காலத்திலும் உலகில் உள்ள இன்னும் புதிய பாணிகளுடன் நவீனமான வங்கியியல் அனுபவங்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் நாம் முன்னணி வகித்திடுவோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்” எனத் தெரிவித்தார்.

வேறுபட்ட வயதுப் பிரிவுகளிலும், வேறுபட்ட தரங்களிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான கணக்குகளை வெவ்வேறு பெயர்களில் அறிமுகப்படுத்திட மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. வெவ்வேறு கடன்வசதித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி தமது வாடிக்கையாளர்களுக்கு உயர் வாழ்க்கைத் தரத்தினை பெற்றுக் கொடுத்திடவும், வியாபார அபிவிருத்திக்குத் தேவையான சக்தியை வழங்கிடவும் மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. தனிநபர் கடன் வசதி, வீட்டுக்கடன் வசதி, தொழிற்கடன்கள், கல்விக்கடன்கள், வாகனக் கடன்கள் போன்றவை இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும். அதே போல் விவசாயிகள், மீனவ சமூகத்தினர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகள் போன்றோரை கட்டியெழுப்பிட வேறுபட்ட கடன் வசதித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல் மக்கள் வங்கி தமது வாடிக்கையாளர்களுக்கு நவீன உலகுக்கு ஏற்ற வகையிலான மிகவும் வசதியான, பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் மிக்க வங்கிசேவைகளைப் பெற்றுக் கொடுத்திடும் நோக்கத்துடன், 2015ஆம் ஆண்டு டிஜிட்டல் வங்கிச்சேவைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. அதனடிப்படையில் வங்கியின் அடிமட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை அனைத்து செயற்பாட்டுப் பிரிவுகளும் உள்ளடங்கிடும் வகையில் முழுமயான டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட திட்டமொன்று நடைமுறைப்படுத்திட நடவடிக்கை எடுத்துள்ள இலங்கையின் முதலாவது வங்கியாகவும் மக்கள் வங்கி விளங்குகிறது.

மக்கள் வங்கிக்கு சர்வதேச வங்கிகளுடனும், நிதிச் சேவை துறைகளுடனும் உயர்தரத்திலான சேவைகளை வழங்கிடக்கூடியதாக உள்ளதுடன், தமது டிஜிட்டல்மயமாக்கல் செயற்பாடுகளுக்கு தற்போது உலகிலுள்ள மிகவும் நவீனமான தொழிநுட்ப தளத்தினை மக்கள் வங்கி பயன்படுத்துகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த டிஜிட்டல் பரிவர்த்தனை செயற்பாடுகளில் பிரதான உற்பத்தியாக “People’s Wiz” விளங்குகிறது. இதன்மூலம் வங்கிக்குச் சென்று கணக்கொன்றினை ஆரம்பித்திடும் பாரம்பரிய முறைக்கு அப்பாற்பட்டு, காகித பாவனையற்ற டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் வங்கிக் கணக்கொன்றினை 10 நிமிடங்களில் மிகவும் இலகுவாக ஆரம்பித்துக் கொள்ள முடியும்.

இந்த டிஜிட்டல்மயமாக்கல் செயற்பாட்டின் கீழ் வங்கிச் சேவைகளை நாளின் எவ்வேளையும் வங்கிக் கிளைக்குச் செல்லாமல் தங்களது மொபைல் தொலைபேசியின் மூலம் செய்துகொள்ள வசதிகளை செய்து கொடுத்துள்ளது. அந்த வகையில் “People’s Wave Mobile Banking App” வசதியினை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், நாட்டில் மிக அதிகமாக பதிவிறக்கம் செய்யப்பட்ட நிதிச் சேவை App ஆகவும் இது விளங்குகிறது.

அதே போல் மக்கள் வங்கி தமது டிஜிட்டல்மயமாக்கல் செயற்பாட்டின் இன்னுமொரு பிரதான உற்பத்தியாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தனிநபர்க் கடன் மற்றும் நிறுவன ரீதியான கடன்களை 24 மணிநேரத்தினுள்

**(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)**

சீட்டிழுப்பு இலக்கம்: 4495
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
மஹஜன சம்பத
திகதி: 04.07.2021
வெற்றி எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 0 6 5 1 8 6

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 0 6 5 1 8 6 | ரூபா 2,000,000/- | 0 |
| 2ஆம் பரிசு | 6 5 1 8 6 | ரூபா 100,000/- | 6 |
| 3ஆம் பரிசு | 5 1 8 6 | ரூபா 10,000/- | 80 |
| 4ஆம் பரிசு | 1 8 6 | ரூபா 1,000/- | 782 |
| 5ஆம் பரிசு | 8 6 | ரூபா 100/- | 7754 |
| 6ஆம் பரிசு | 6 | ரூபா 20/- | 76623 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 0 6 5 1 8 | ரூபா 10,000/- | 5 |
| 8ஆம் பரிசு | 0 6 5 1 | ரூபா 1,000/- | 78 |
| 9ஆம் பரிசு | 0 6 5 | ரூபா 100/- | 741 |
| 10ஆம் பரிசு | 0 6 | ரூபா 50/- | 7646 |
| 11ஆம் பரிசு | H | ரூபா 20/- | 30757 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 5,689,400.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,370,427.00
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

சூடான செய்திகளுக்கு thamilan.lk உடன் இணைந்திருங்கள்

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு இலக்கம்: 2789 சீட்டிழுப்பு திகதி: 03.07.2021
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 12 13 26 54

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 6 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 151 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 317 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8555 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5582 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 139428 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 25320 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 179,359
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை ரூ. 5,592,740.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,655,905.60
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம்: 4494
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
மஹஜன சம்பத
திகதி: 03.07.2021
வெற்றி எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 7 2 3 1 6 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M 7 2 3 1 6 2 | ரூபா 10,864,648/- | 1 |
| 1ஆம் பரிசு | 7 2 3 1 6 2 | ரூபா 2,000,000/- | 0 |
| 2ஆம் பரிசு | 2 3 1 6 2 | ரூபா 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | 3 1 6 2 | ரூபா 10,000/- | 89 |
| 4ஆம் பரிசு | 1 6 2 | ரூபா 1,000/- | 919 |
| 5ஆம் பரிசு | 6 2 | ரூபா 100/- | 9116 |
| 6ஆம் பரிசு | 2 | ரூபா 20/- | 91381 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 7 2 3 1 6 | ரூபா 10,000/- | 7 |
| 8ஆம் பரிசு | 7 2 3 1 | ரூபா 1,000/- | 92 |
| 9ஆம் பரிசு | 7 2 3 | ரூபா 100/- | 911 |
| 10ஆம் பரிசு | 7 2 | ரூபா 50/- | 9143 |
| 11ஆம் பரிசு | M | ரூபா 20/- | 36354 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 17,750,198.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு இலக்கம்: 2790 சீட்டிழுப்பு திகதி: 04.07.2021
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 12 18 21 55

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 5 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 138 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 287 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 6974 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4631 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 114989 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 21058 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 148,083
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை ரூ. 5,666,580.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,786,156.40
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

# கிழக்கில் 20 வைத்தியசாலைகளுக்கு 100 ஒட்சிசன் சிலிண்டர்கள் – ரெகுலேட்டர்கள் வழங்க நடவடிக்கை

## AJWS நிறுவனத்தின் 7.7 மில்லியன் நிதியில் முன்னெடுப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிழக்கு மாகாணத்திலுள்ள 20 வைத்தியசாலைகளில் இயங்கும் கொரோனா அவசர சிகிச்சை பிரிவுகளுக்கு 100 ஒட்சிசன் சிலிண்டர்களையும் 100 ஒட்சிசன் ரெகுலேற்றர்களையும் வழங்கும் செயற்றிட்டம் இன்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

கொரோனா வைரஸ் 3ஆம் அலை பரவலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒட்சிசன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து அவசர சிகிச்சைப் பிரிவினை துரிதமாக இயங்கச் செய்வதன் ஊடாக மரணங்களை குறைத்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள 20 வைத்தியசாலைகளில் இயங்கும் கொரோனா அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கு 100 ஒட்சிசன் சிலிண்டர்களையும் 100 ஒட்சிசன் ரெகுலேற்றர்களையும் வழங்கும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, தற்போதைய கொவிட் 03 ஆம் அலைத் தாக்கத்தினால் அதிகமான கொவிட் நோயாளர்கள் மூச்சுத் திணறலுக்குட்படுகின்ற வேளையில் இலங்கை பூராகவும் ஒட்சிசன் தேவை அதிகமாகவுள்ளது.

இந் நிலையினைக் கருத்திற்கொண்டு கிழக்கு மாகாணத்திலுள்ள 20 வைத்தியசாலைகளுக்கு அமெரிக்க யூத உலக சேவை (American Jewish World Service -AJWS) நிறுவனத்தின் 7.7 மில்லியன் ரூபா நிதி அனுசரணையுடன் 100 ஒட்சிசன் சிலிண்டர்களும் 100 ஒட்சிசன் றெகுலேற்றர்களும் வழங்கும் வேலைத்திட்டம் இடம்பெறுகின்றது.

அந்தவகையில் நிகழ்வானது முதற்கட்டமாக திருகோணமலையில் இன்று திருகோணமலை மாவட்டத்திலுள்ள 09 வைத்தியசாலைகளுக்கு 2.1 மில்லியன் ரூபா பெறுமதியான 30 ஒட்சிசன் சிலிண்டர்களும் 25 ஒட்சிசன் ரெகுலேற்றர்களும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் ஏ.எச்.ஆர்.சி. (அகம் மனிதாபிமான வள நிலையம்) நிறுவனத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா ஊடாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டு உரிய வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படவுள்ளது.

இந்நிகழ்வானது ஏ.எச்.ஆர்.சி. (அகம் மனிதாபிமான வள நிலையம்) நிறுவனத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள, மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் டி.ஜீ.எம்.கொஸ்தா, பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர்.பிரேமானந் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

குறித்த உபகரணங்கள் மூதூர் வைத்தியசாலை, கிண்ணியா வைத்தியசாலை, ஈச்சிலம்பற்று வைத்தியசாலை, குச்சவெளி வைத்தியசாலை, கோமரங்கடவல வைத்தியசாலை, கப்பல்துறை ஆயள் வேத வைத்தியசாலை, கந்தளே சீனி பக்ரி வைத்திய நிலையம், நிலாவெளி வைத்தியசாலை, கிளிவெட்டி வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளுக்கே வழங்கப்படவுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அட்டாளைச்சேனையில் 223 பேருக்கு கொரோனா தொற்று

## 15 பேர் உயிரிழப்பு

(அட்டாளைச்சேனை)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய காரியாலயப் பிரிவில் கொரோனா தொற்று காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நபர் ஒருவர் மரணித்துள்ளதாக அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாலமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய நபர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி வைத்திய சாலையில் மரணித்துள்ளார். அட்டாளைச்சேனை பிரதேச சுகாதாரப் பிரிவில் இதுவரை மொத்தமாக 5 பேர் கொவிட் தொற்று காரணமாக மரணித்துள்ளனர். கொரோனா தொற்று காரணமாக 223 பேர் இனங் காணப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் மிக அவதானத்துடன் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முகமூடி அணியாமல் வெளியில் செல்ல வேண்டாம். வெளிச்சென்று வந்தவுடன் கைகளை நன்றாக சவர்க்காரமிட்டுக் கழுவிக்கொள்ளவும். இதன்மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தவர்களையும், நமது பிரதேசத்தையும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பது நமது அனைவரினதும் பொறுப்பாகும்.

தொடர்ச்சியாக அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் பிரதேசங்களில் பல இடங்களில் அன்ரிஜன், பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்வதன் மூலம் மறைமுகமாக உள்ள கொரோனா நோயாளர்களை இனங்கண்டு கொள்ளலாம். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை பொது விளையாட்டு மைதானங்களில்



விளையாட்டு செயற்பாட்டில் சிலர் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன. இவர்களுக்கு எதிராக இறுக்கமான சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். பொது விளையாட்டு மைதானங்களில் எந்தவிதமான விளையாட்டுகளையும் விளையாடுவதற்கு இதுவரையும் எம்மால் அனுமதி வழங்கப்படவில்லை. மைதானங்களில் விளையாடி எமது குழுவினரிடம் அகப்பட்டால் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அனைவருக்கும் உடன் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் சுகாதாரப் பிரிவினரும் ஒவ்வொரு நாளும் விளையாட்டு மைதானங்களில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் மேலும் தெரிவித்தார்.

# பசுமைப்புரட்சியை உருவாக்கும் திட்டத்தில் அக்கரைப்பற்றில் மரநடுகை நிகழ்வு

(பாலமுனை நிருபர்)

அக்கரைப்பற்று வலயக்கல்விப் பிரிவில் தேசிய பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டுள்ள பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலய வளாகத்தில் பசுமைப்





புரட்சியை உருவாக்கும் திட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட மர நடுகை நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலய அதிபர் கே.எல்.உபைதுள்ளா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர் உட்பட ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலை வழாகத்தில் நிழல் தரும் மரங்கள், கனிதரும் மரங்கள் போன்ற பல்வேறு மரக்கன்றுகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பிராந்தியத்திக்கு விரைவில் தடுப்பூசி வழங்க நடவடிக்கை; இறப்பு வீதத்தைக் குறைக்க ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தௌபீக்

(பெரியநீலாவணை நிருபர்)

கல்முனை பிராந்தியத்திற்கு விரைவில் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. கொரோனா நோயாளர்கள் மற்றும் உயிரிழப்பு வீதத்தை தொடர்ந்தும் அதிகரிக்க இடமளிக்க முடியாது. இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க





முன்வரவேண்டும் - என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்.குணசிங்கம் சுகுணன் தலைமையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இங்கு விளக்கமளித்து உரையாற்றும்போதே மாகாண பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும்போது,

மரண வீடுகளுக்கு பொதுமக்கள் அதிகளவில் செல்வது, திருமண வீடுகளில் மறைமுகமாக பலர் கலந்துகொள்வது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதனைத் தடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். கல்முனை பிராந்தியத்தின் ஒவ்வொரு பிரதேசங்களும் வெவ்வேறு பிரச்சினைகளை கொண்டதாகும். அக்கரைப்பற்றில் ஒரு நிலை காணப்பட்டால் சம்மாந்துறை பிரதேசத்தில் அது வேறு நிலையாகும். இன்னொரு பிரதேசத்தில் அது இன்னொரு நிலையாக காணப்படுகின்றன.

கிராம மட்டத்தில் சிவில் சமூகத்தவர்களின் ஒத்துழைப்புகளை பெற்று சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்போடு ஒவ்வொரு பிரதேசத்திற்குமான தனியான தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஜனாதிபதி தலைமையிலான கலந்துரையாடல் கூட்டத்தில் கல்முனை பிராந்தியத்திற்கு தேவையான தடுப்பூசிகளை வழங்குமாறு கோரியிருந்தேன். தற்போது சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்துள்ளன. அடுத்த வாரமளவில் கல்முனைக்கும் கிடைக்கப்பெறும். முதல் கட்டமாக அரச உத்தியோகத்தர்கள், கர்ப்பிணித்தாய்மார், உட்பட 65 வயதிற்கு மேற்பட்டோருக்கு இதனை வழங்கவுள்ளோம். எனவே, இதனை தவறாமல் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட அடையாளம் காணப்பட்ட எட்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் உட்பட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் உயரதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் முன்னெடுக்கப் படுகின்ற சுகாதார நடைமுறைகள் பொதுமக்கள் சார் பிரச்சினைகள் என்பன இங்கு விரிவாக ஆராயப்பட்டது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்போதைய நிலைமை தொடர்பாக வைத்திய அதிகாரி டாக்டர் கே.தர்ஷினி விரிவாக விளக்கமளித்தார். சுகாதார வைத்திய அதிகாரிகளால் தமது பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டன.

# சம்மாந்துறையில் ‘திரியபியச’ சமூர்த்தி விசேட வீடமைப்பு திட்டத்தில் புனரமைக்கப்பட்ட வீடு பயனாளியிடம் கையளிப்பு

(ஐ.எல்.எம் நாஸிம்)

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேசத்தில் சமுர்த்தி லொத்தர் நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்





“திரியபியச” சமுர்த்தி விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்திற்கான வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா தலைமையில் நடைபெற்றது.

சமுர்த்தி லொத்தர் நிதியுதவியின் கீழ் ஒரு வீட்டிற்கு தலா இரண்டு இலட்சம் ரூபா செலவில், பயனாளிகளின் பங்களிப்புடன் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மட்டக்களப்பு தரவை - 02 பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்ட பயனாளிகளுக்கே இவ்வீடு வழங்கிவைக்கப்பட்டது.

நிரந்தர வீடில்லாத, பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சமுர்த்திபெறும் ஏழைக் குடும்பங்களுக்கு அவர்களின் சொந்த இடங்களில் வீடமைத்து கொடுக்கும் அரசின் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வீடுகள் குறித்த பயனாளியின் சொந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் யு.எல்.எம்.சலீம், கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர் சுகாதார நடைமுறைகளை பேணி கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு பலசரக்கு கடையொன்றில் கொள்ளை

(காரைதீவு நிருபர்)

காரைதீவில் பலசரக்கு கடையொன்றில் இரவுவேளையில் கொள்ளைச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

காரைதீவு பிரதான வீதியின் அமைந்துள்ள பிரதேச செயலகத்திக்கு அருகாமையிலுள்ள பலசரக்குக் கடையிலேயே இக்கொள்ளைச் சம்பவம் துணிகரமாக நடந்தேறியுள்ளது.

இதன்போது கடையிலிருந்த தொலைபேசி அட்டைகள், பலசரக்குப் பொருட்கள் மற்றும் ஒருதொகை ரொக்கப்பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் கடையில் பொருத்தப் பட்டிருந்த சிசிரிவி கெமராவில் பதிவாகியுள்ளது.







அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது இளையதம்பி சமூக சேவைகள் அமைப்பின் அனுசரணையில் கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தின் கீழ் இயங்கும் சாய்ந்தமருது சமூக பராமரிப்பு நிலையத்தின் தலைவரும் சமூக சேவை உத்தியோகத்தருமான ஏ.ஏ.சபீரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுடன் ITF இளையோர் வட்ட அமைப்பினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிரமதானப் பணியொன்றை மேற்கொண்டனர். (நூருல் ஹுதா உமர்)

# கஞ்சா – ஹெரோயினுடன் காத்தான்குடியில் மூவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் 3 பேரை நேற்று சனக்கிழமை கைதுசெய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய நேற்று முன்தினம் மாலை காத்தான்குடி பிரதேசத்தில் பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது 180 மில்லிகிராம் கஞ்சாவுடன் இருவரை கைதுசெய்துள்ளதுடன், 930 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் உட்பட மூவரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யபபட்டவர்கள் 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# திருகோணமலையில் யான் ஓயா அபிவிருத்தித் திட்டத்தால் காணிகளை இழந்தவர்களுக்கான நஷ்டஈடு வழங்கிவைப்பு

## 36 பேருக்கு 40 மில்லியன் ரூபா கையளிப்பு

(அப்துல்சலாம் யாசீம்)





திருகோணமலை மாவட்டத்தின் கோமரங்கடவெல பிரதேச செயலாளர் பிரிவில் யான் ஓயா அபிவிருத்தித் திட்டம் காரணமாக காணிகளை இழந்தவர்களுக்கான நஷ்டஈடு வழங்கும் நிகழ்வு நேற்று (04) கோமரங்கடவெல பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவருமான கபில நுவன் அத்துக்கோரள தலைமையில் நடைபெற்றது.

40 மில்லியன் ரூபா பெறுமதியான நஷ்டஈடு 36 நபர்களுக்கு இதன்போது வழங்கிவைக்கப்பட்டது.

மொத்தமாக 105 பேருக்கான 96 மில்லியன் ரூபா பெறுமதியான நஷ்டஈடு வழங்க அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இவற்றுள் சுகாதார நடைமுறைகளை கருத்திற்கொண்டு குறிப்பிட்ட சிலரை வரவழைத்து இந்நஷ்டஈடுகளை வழங்க நடவடிக்கை எடுத்ததாகவும் இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோராள தெரிவித்தார்.

ஜனாதிபதி கோமரங்கடவெல பிரதேசத்திற்கு வருகை தந்ததன் பலனாக பல அபிவிருத்தித் திட்டங்கள் இப்பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றன. இதன்காரணமாக இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன், உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் ஏற்படும். இதுவரை பல மில்லியன் ரூபா இப்பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கோமரங்கடவெல பிரதேச செயலாளர் எஸ்.எம்.சி.சமரகோன், கோமரங்கடவெல பிரதேச சபை தவிசாளர் சந்தன விஜித குமார, அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# கிண்ணியாவில் கொரோனா மூன்றாம் அலையில் 369 பேருக்கு தொற்று உறுதி – 34 பேர் உயிரிழப்பு

(கியாஸ் ஷாபி)



கிண்ணியா சுகாதாரப் பிரிவில் கொரோனாவின் மூன்றாவது அலையில், இதுவரை 369 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்தார்.

கிண்ணியாவின் கொரோனா நிலை குறித்து, நேற்று (04) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மே மாதத்தோடு, ஒப்பிடுகையில், ஜூன் மாதம் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையும், மரணவீதமும் குறைவடைந்திருப்பது சற்று ஆறுதலான விடயமாக இருக்கிறது. மூன்றாவது அலைக்குப் பின்னர் 2021 மார்ச் மாதம் 18 பேரும், ஏப்ரல் மாதம் 36 பேரும், மே மாதம் 221 பேரும், ஜூன் மாதம் 94 பேரும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

கொரோனா மரணம் தொடர்பில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கருத்து தெரிவிக்கையில், கொரோனா தொற்றினால், இதுவரை 35 பேர் பலியாகியுள்ள அதேவேளை, 3 ஆவது அலையில் 34 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதில் மே மாதம் 25 மரணங்களும் ஜூன் மாதம் 9 மரணங்களும் பதிவாகியுள்ளன. இவ்வாறு மரணமானோரில் 60 வயதுக்கு மேற்பட்டோர் 33 பேர் அடங்குவதோடு, மரணமடைந்த 35 பேரில் 17 மரணங்கள் வீடுகளில் நிகழ்ந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மே மாதத்தில் தொடர்ந்து உயர் ஆபத்தான வலயமாக இந்தப் பிரதேசம் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில், ஜூன் மாதத்தில், நோயாளர் எண்ணிக்கையிலும் மரண வீதத்திலும் குறைந்து செல்லும் போக்கு காணப்படுகிறது. இதற்கு காரணம் பயணத்தடைக்கு மத்தியில் 37 நாட்களாக 10 கிராமங்கள் முடக்கப்பட்டமையும் அதற்கு பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்புமாகும்.

எனவே, சுகாதாரப் பிரிவினர் வழங்குகின்ற வழிமுறைகளை தொடர்ச்சியாக மக்கள் பின்பற்றுவதன் மூலம் இந்தப் பகுதியிலிருந்து கொரோனா தொற்றை முழுமையாக இல்லாமல் செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

# 13 வயது சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய சந்தேக நபருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பகுதியில் 13 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 43 வயதுடைய ஆண் ஒருவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் நேற்று முன்தினம் சனிக்கிழமை (03) உத்தரவிட்டார்.

குறித்த சிறுமியின் தந்தை குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்ற நிலையில், தாயாருடன் குறித்த சிறுமி வாழ்ந்து வருகிறார். தாயார் வேலைக்கு சென்ற நிலையில், சிறுமியின் வீட்டுக்கு அருகாமையிலுள்ள குறித்த சந்தேக நபர் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய சம்பவம் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபர் ஏற்கனவே இரு திருமணங்கள் முடித்துள்ளதுடன், 43 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் தெரியவருகின்றது.

இதனையடுத்து சிறுமியின் பெரிய தாயார் பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவித்ததையடுத்து, பொலிஸார் குறித்த நபரை கைதுசெய்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (03) ஆஜர்படுத்தியபோது, அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கரடியனாறில் யானை தாக்கி ஒருவர் பலி

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள குடாவெட்டை வயல் பிரதேசத்தில் மாடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்ட ஒருவர் காட்டு யானை தாக்கி உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை (03) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சித்தாண்டி பிரதேசத்தைச் சேர்ந்த கந்தன் நாகராசா (வயது 57) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வழமைபோன்று நேற்று முன்தினம் (03) காலையில் மாடு மேய்க்கச் சென்றவர் வீடு திரும்பாததையடுத்து, உறவினர்கள் தேடுதலில் ஈடுபட்டனர். இதன்போது காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளான நிலையில் குடாவெட்டை காட்டுப் பகுதியில் இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# தனிமைப்படுத்தப்பட்ட மருதமுனை பிரதேச மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை பெற்றுக்கொடுக்க ஏற்பாடு

## கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப்

(சாய்ந்தமருது நிருபர்)



மருதமுனையில் தனிமைப்படுத்தல் அமுல்படுத்தப்பட்டிருக்கின்ற மசூர் மௌலானா வீதி தொடக்கம் நூலக வீதி வரையான பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு அத்தியாவசிய சேவைகள் தங்குதடையின்றி கிடைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல், நேற்று முன்தினம் சனிக்கிழமை (03) மாலை கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஷாத் காரியப்பர், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி, மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ்.உமர் அலி, ஏ.ஆர்.அமீர், மருதமுனை ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எம்.எல்.முபாரக் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தனிமைப்படுத்தல் பிரதேசத்திற்குட்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை நடமாடும் விற்பனை ஊடாக விநியோகம் செய்தல், பொது அமைப்புகளின் ஊடாக நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொடுத்தல், அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் தவிர்ந்த மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் உலர் உணவை விரைவாகப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் நோயாளிகளுக்கு அவசர மருத்துவ சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

அதேவேளை மாட்டிறைச்சி, கோழி இறைச்சி, மீன், மரக்கறிகள், முட்டை, பேக்கரி உணவுகள் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை விற்பனை செய்வதற்கான முகவர்களை உடனடியாகத் தெரிவுசெய்து, சேவையில் ஈடுபடுத்துவது குறித்து கூடிய அவதானம் செலுத்தப்பட்டதுடன், இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாநகர முதல்வரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் மருதமுனையின் குறித்த பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

# மீனோடைக்கட்டு – அக்கரைப்பற்று பிரதேச வீதி 205 மில்லியன் ரூபா நிதியில் புனரமைப்பு

(நூருல் ஹுதா உமர்)



ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு சிந்தனைக்கு அமைய ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்திசெய்யும் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு தொடக்கம் அக்கரைப்பற்று வரையிலான ஐந்து கிலோமீற்றர் தூரம் கொண்ட வயல் பிரதேச வீதியை காபட் வீதியாக 205 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யும் வேலைத்திட்டத்தின் ஆரம்பகட்ட வேலைகளுக்கான களவிஜயம் நேற்று முன்தினம் (03) மாலை இடம்பெற்றது.

வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் யோசனைக்கமைய முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தை முன்மொழிந்த தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லாவின் பங்கேற்புடன் இடம்பெற்ற இக்கள விஜயத்தில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக மாகாண பணிப்பாளர் எம்.பி.எம்.அலியார், ஓய்வுபெற்ற பிரதம பொறியியலாளர் என்.டீ.எம்.சிராஜுதீன், நிறைவேற்றுப் பொறியியலாளர் முஹம்மட் சஜீர், பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான ஏ.எச்.முஹம்மத் நாளிர், முஹம்மட் றமீஸ், பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஏ.சி.எம்.நிஸார், அக்கரைப்பற்று பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் களநிலையை ஆராய்ந்தனர்.

# கல்முனையில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளை அபகரிப்பது இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கும்

## நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்





தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்கள் கல்முனையில் முஸ்லிம் நபர்களால் அபகரிக்கப்படுவது இன முரண்பாட்டை தோற்றுவிக்குமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அடாத்தாக அரச காணியில் மண் நிரப்பப் பட்ட இடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உள்ளிட்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் வருகை தந்து பார்வையிட்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட அரச காணியை ஆக்கிரமிக்க முற்பட்ட முஸ்லிம் நபர், அதனைத் தடுத்து நிறுத்திய கிராம சேவையாளரைத் தாக்க முற்பட்டு கல்முனை பொலிஸாரால் நேற்று முன்தினம் (03) கைதுசெய்யப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட குழாமினர் பார்வையிட்டுக் கொண்டிருந்த போது அங்கு கூடிய சில முஸ்லிம்கள் குழப் பத்தை ஏற்படுத்தினர்.

இதற்கு முன்னர் குறித்த நபரால் கடலோர பாதுகாப்பு எல்லைக்குட்பட்ட மேற் குறித்த இடத்தில் மண்ணிட்டு அபகரிக்க முற்பட்ட போது கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு மண் அகற்றப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக் கையில்,

கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கல்முனை-1 சி கிராம சேவகர் பிரிவிலுள்ள அரச காணியொன்றில் மண்ணிட்டு நிரப்பும் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கை இங்குள்ள முஸ்லிம் தனிநபரால் மேற்கொள்ளப்பட்ட விடயமாகும். இதனை கிராமசேவகர் தடைசெய்துள்ளார். கிராமசேவகர் தமது கடமையை முன்னெடுத்தபோது அவர் தாக்கப்பட்டுள்ளார். இந்த இடத்தை நாங்கள் பார்வையிட்டபோது அரச காணியொன்றின் விளம்பரப்பலகை அகற்றப்பட்டு மண் நிரப்பப்பட்டுள்ளது.

ஏற்கனவே இங்கு அவ்வாறான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டது. மீளவும் இவ்விடயம் இங்கு நடைபெற்றுள்ளது.

தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்கள் முஸ்லிம் நபர்களால் போலி ஆவணங்கள் மூலம் அபகரிக்கப்படுவதும், இங்குள்ள மக்களை சுதந்திரமாக வாழமுடியாத சூழலை உருவாக்குவதுமான செயற்பாடுகள் இங்கு இடம்பெறுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் இந்தப் பிரதேசத்தில் தொடர்ச்சியான ஒரு வன்முறையை உருவாக்குவதாகவே இருக்கின்றன. தமிழ் மக்களின் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தாமல் இழுத்தடித்து அந்தப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அரச காணியை ஆக்கிரமிக்கின்ற நடவடிக்கையை இந்த கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படக் கூடாது என்று எண்ணுகின்ற அரசியல்வாதியும், அவருடன் சேர்ந்த நபர்களுமே இவ்வாறான பணிகளைச் செய்கின்றார்கள்.

கடந்த மாதம் பெரியநீலாவணையில் இவ்வாறான சம்பவம் நடைபெற்று அது தடுத்து நிறுத்தப்பட்டது. தற்போது இங்கு இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது.

இங்கு வாழுகின்ற சமூகங்களை ஒன்றிணைக்க வேண்டுமானால் சமத்துவமான, நடுநிலையான, நியாயமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதைவிடுத்து இவ்வாறான ஆக்கிரமிப்புகள் இடம்பெறும்போது அது சமூகங்களுக்கிடையில் பாதிப்பினை ஏற்படுத்தும். இங்கிருக்கின்ற இரண்டு சமூகங்களையும் இணைக்க வேண்டுமாக இருந்தால் அவர்களுடைய சுதந்திரமான நீதியான நிர்வாக நடைமுறையைக் கையாள்வதற்குரிய அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது இந்த நாட்டின் தலைவர்களுடைய தலையாய கடமையாக இருக்கின்றது.

எனவே, இவ்வாறான ஆக்கிரமிப்புப் பணிகள் இத்துடன் நிறுத்தப்பட வேண்டும். சமூகங்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும். அரச காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும். இங்கு பொதுவான சில மக்களுக்குத் தேவையான கட்டடங்கள் அமைக்கப்படுகின்றபோது அரச காணிகள் இல்லையெனக் கூறப்படுகின்றது. எனவே, இவற்றின் உண்மைத்தன்மை கண்டறியப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நவீன வசதிகளுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு திறந்துவைப்பு






(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நான்கு முக்கிய பிரிவுகள் திறந்து வைக்கப்பட்டன.

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையின் நவீன தொழில்நுட்ப வசதி களுடன் கூடிய அதிதீவிர சிகிச்சைப் பிரிவு (ICU), விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வறை (Consultant Longue), வைத்தியசாலை நூலகம் (Hospital Library) மற்றும் உடற்பயிற்சி சிகிச்சைப் பிரிவு (Physiotherapy unit) என்பன நேற்று முன்தினம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம்.ஜவாஹிர் தலைமையில் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகியினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டன.

தேசிய காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் முழு முயற்சியினால் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையானது இப்பிராந்திய பொது மக்களின் சுகாதார, மருத்துவ, ஆரோக்கிய சேவைகளை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தத் திறப்பு விழா சிறப்பு நிகழ்வில் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை நலன்விரும்பிகள், மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வெருகல் பகுதியில் 97 பேருக்கு மலசலகூட வசதி




(கிண்ணியா நிருபர்)

வெருகல் பிரதேசத்தில் மலசலகூட வசதிகளற்ற 97 பேருக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வெருகல் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான கபில நுவன் அத்துக்கோரல மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள ஆகியோர் இதன்போது பயனாளிகளுக்கான வேலை ஆரம்பிப்பதற்கான அனுமதி கடிதத்தை வழங்கினர்.

மலசலகூடம் ஒன்றை அமைக்க பயனாளி ஒருவருக்கு அரசாங்கம் 69,500 ரூபாவை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்காக அரசாங்கம் 67,41,500 ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.பரமேஸ்வரன், திணைக் களத் தலைவர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# வெருகல் – பூநகரில் சௌபாக்கியா கிராம வேலைத்திட்டத்தின்கீழ் 100 பயனாளிகளுக்கு 15,000 கோழிக்குஞ்சுகளை வழங்க தீர்மானம்





(கிண்ணியா நிருபர்)

வெருகல் பூநகர் பிரதேசத்தில்சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின்கீழ் கோழி வளர்ப்பை ஆரம்பிப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வெருகல் பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதற்காக 100 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களை தொழில் முயற்சியாளர்களாக மாற்ற எதிர்பார்க்கப்படுகின்றது. 82 இலட்சம் ரூபா நிதியில் 15,000 கோழிக் குஞ்சுகள் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

கோழி வளர்ப்பிற்காக தெரிவுசெய்யப் பட்ட பயனாளிகளுக்கு குறித்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதிக் கடிதத்தை திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவருமான கபில நுவன் அத்துக்கோரளவுடன் இணைந்து திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரளவும் வழங்கினார்.

இத்திட்டத்தைசிறப்பாக மேற் கொள்ளும் போதுமாதமொன்றிற்கு 30,000 - 40,000இற்கு இடைப்பட்ட வருமானத்தைப் பெறமுடியும்.

வருமானம் குறைந்த மக்கள் அதிகமாக வாழும் இப்பிரதேசத்தில் எவ்வித வேறுபாடின்றி அபிவிருத்தித் திட்டங்களை கொண்டுவந்து பிரதேச அவிருத்தியை மேற் கொள்ள தேவையானஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் மக்கள் தமது பிரதேச அபிவிருத்தி யை கருத்திற்கொண்டு அரசாங்கத் தின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும்போது இன்னும் பல அபிவிருத்திகளை இப்பிரதேசத்திற்கு கொண்டு வர முடியும் என்றும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.பரமேஸ்வரன், சக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் 7500 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு




(துறைநீலாவணை நிருபர்)

மட்டு. மாவட்டத்தில் சுயதொழிலை இழந்த 7500 குடும்பங்களுக்கு பொதுஜன பெரமுன கட்சியின் அமைப்பாளர் ப.சந்திரகுமாரினால் உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் மாவட்டத்தின் தமிழ் பிரதேசங் களுக்கான அபிவிருத்திக் குழுவின் பிரதித் தலைவருமான பரமசிவம் சந்திரகுமாரின் நெறிப்படுத்தலின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சுயதொழில் வாய்ப்புகளை இழந்த சுமார் 7500 குடும்பங்களுக்கு பெறுமதியான உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

மட்டு. மாவட்டத்தில் தமிழ் பிரதேசங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களின் தேவை கருதி அமைப்பாளரின் பரிந்துரைக்கு அமைவாக குறித்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 45 வருட பழைமையான மூதூர் கட்டைபறிச்சான் பாலத்தினை புதிதாக நிர்மாணிக்க நடவடிக்கை



(கந்தளாய் நிருபர்)

மூதூர் கட்டைபறிச்சான் பாலம் நிர்மாணிக்கப் பட்டு 45 வருடங்களாகின்றன. தற்போது பாலம் சேதமடைந்து காணப்படுவதால் அப்பாலத்தினை புதிதாக அமைப்பதற்கு மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.அரூஸின் வேண்டுகோளுக்கமைய திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் முயற்சியினால் பாலத்தினை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் முதற்கட்டமாக அப்பாலத்தினை வடிவமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் எம்.ஜப்பார் ஆகியோர் குறிப்பிட்ட இடத்திற்கு நேற்று முன்தினம் விஜயம்செய்து தேவையான அளவீடுகளை மேற்கொண்டு வடிவமைப்பை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்பொழுது 3.5 மீற்றர் அகலமாக உள்ள பாலம் புதிதாக 7 மீற்றர் அகலமான பாலமாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவ்விஜயத்தின்போது மூதூர் பிரதேச சபை உறுப்பினர் ஜெயமாலா மற்றும் பிரதேச பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிக்கும் திட்டம்




(மட்டக்களப்பு நிருபர்)

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபிட்சத்தின் நோக்கு ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் சேதனப் பசளை உற்பத்தியினை ஊக்குவிக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்கீழ் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு சேத்துக்குடா கிராமசேவையாளர் பிரிவிலுள்ள இயற்கை முறையிலான கால்நடை வளர்ப்புப் பண்ணையாளர் ஜி.பிரியவரதனால் முன்னெடுக்கின்ற சேதனப் பசளை உற்பத்தி மற்றும் சேதனப் பசளை கரசல் நீர் உற்பத்தி செய்முறையினை மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் கடந்த வெள்ளிக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆலோசனை வழங்கி யுள்ளனர்.

# நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தங்கத்துரையின் அரசியல் காலம் தமிழ் மக்களுக்கான பொற்காலம்

## மூதூர் பிரதேச சபையின் உப தவிசாளர் துரைநாயகம்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தங்கத்துரையின் அரசியல்காலம் தமிழ் மக்களுக்கான பொற் காலமாக விளங்கியது. அவருடைய இழப்பு இன்றும் நிரப்பப்படாத இடைவெளியாகவே காணப்படுகின்றது - என மூதூர் பிரதேச சபையின் உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

அமரர் அருணாசலம் தங்கத்துரையின் 24ஆவது ஆண்டு நினைவு தினத்தை (05.07.2021) முன்னிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமரர் தங்கத்துரையின் அரசியல்காலம் தமிழ் மக்களால் பொற்காலமாக உணரப்படுகின்றது. ஏனெனில், அவர் அரசியலில் இருந்த காலப்பகுதியில் தான் தமிழ் மக்களின் பல பிரதேசங்கள் அபிவிருத்தி கண்டன. அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கான பல வேலைவாய்ப்புகளும், பல குடியேற்றங்கள் மூலம் பல ஏழைகளுக்கான வாழ்விடங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இவை பலமான அரசுக்கு எதிராக எதிர் வரிசையிலிருந்து சாதித்தவை என்றால் அது தங்கத்துரையின் அரசியல் சாணக்கியம் என்றுதான் கூறவேண்டும். இதனால் இன்றும் இவர் ஏழை மக்களால் கடவுளாக பார்க்கப்படுகின்றார் என்பதை அவர்களின் வீட்டுச்சுவரில் புன்சிரிப்புடன் இருக்கின்ற அவரது புகைப்படத்தைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.

தமிழ் மக்களின் எதிர்காலம் கல்வியிலும், விவசாயத்திலுமே தங்கியிருக்கிறது என்ற தூரநோக்குடன் செயற்பட்டு, தனது அரசியல் காலங்களில் அது தொடர்பான அபிவிருத்தியில் அதிக அக்கறை செலுத்தியிருந்தார். அதன் பலனாக பல கல்விச்சாலைகள் உருப்பெற்றதோடு பல குளங்களும் புத்துயிர் பெற்றிருந்தன. அந்த காலத்தில் கிண்ணியாவைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூதூர் தொகுதி



நாடாளுமன்ற உறுப்பினராகவும் தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை பிரதி அமைச்சராகவும் இருந்த ஏ.எல்.அப்துல் மஜீத் மற்றும் தங்கத்துரையும் அரசியலில் ஜாம்பவான்களாக இருந்தார்கள்.

அரசியல் ரீதியாக இருவருக்கும் இடையில் போட்டித்தன்மை இருந்தாலும் மக்களுக்கான பணியை இணைந்தே முன்னெடுத்திருந்தார்கள். அந்தவகையில் அவருடைய ஒத்துழைப்பையும் பெற்று பல சேவைகளை இனம், மதம், மொழி வேறுபாடின்றி அனைவருக்கும் வழங்கியிருந்தார். குறிப்பாக, பல இஸ்லாமிய மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் வேலைவாய்ப்பைக்கூட பெற்றுக்கொடுத்திருந்தார். இவரை இஸ்லாமிய மக்கள் தங்கத்துரை அண்ணன் எனவும் சிங்கள மக்கள் தங்கத்துரை மாத்தையா எனவும் உரிமையோடு அழைக்குமளவிற்கு முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கிடையிலான நெருக்கத்தை அவர் கொண்டி ருந்தார். இதனை மெய்ப்பிக்கும் முகமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் அமைப்பாளரான மூதூர் அனஸ்ஸினால் “தங்கத்துரைக் காவியம்” என்ற நூல் வெளியிடப்பட்டிருந்தது. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். எனவே, இதுபோன்றதொரு இன நல்லுறவுடன் மக்களுக்கு சேவையாற்றிய அரசியல் தலைவனை நாம் இழந்துவிட்டோம். அவருடைய இழப்பு மூதூர் பகுதி மக்களுக்கு பெரியதொரு வெற்றிடத்தை விட்டுச் சென்றிருக்கிறது.

# மக்கள் வங்கிக்கு...

(7ஆம் பக்கம் தொடர்ச்சி)

பெற்றுக்கொடுத்திடும் நோக்கத்துடன் “People’s Wiz Credit” இனை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கு மேலதிகமாக “People’s Wyn” என்ற பெயரில் நிறுவன ரீதி யான கொடுக்கல் - வாங்கல்களை மேற்கொள்வோருக்காகவே விசேடமான மொபைல் App ஒன்றினையும் அறிமுகப்படுத்தியுள்ளது. அதேபோல் “People’s Web” என்ற பெயரில் 2018ஆம் ஆண்டில் இணைய வங்கிச் சேவையைப் பெற்றுக்கொடுத்தது. இவ்வசதி தனிநபர் மையப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு “People’s Web Personal” என்ற பெயரிலும் நிறுவன ரீதியான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வோருக்காக “People’s Web Corporate” என்ற பெயரிலும் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதேபோல் பொறுப்புள்ள நிதி நிறுவனம் என்றவகையில் மக்கள் வங்கி நிலைத்திருதன்மை கொண்ட எதிர்காலம் தொடர்பான தங்கள் எதிர்பார்ப்புகளை அடைந்திடும் வழிகளை ஏற்படுத்திக் கொடுத்திட“People’s Green Pulse” என்ற பெயரில் வளமானதோர் சூழல் கொள்கையினையும் செயற்படுத்தியது.

மக்கள் வங்கி தமது உன்னதத் தன்மைக்கு பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருதுகளை வென்றுள்ளது. இலங்கை சந்தைப் படுத்தல் நிறுவகம் மற்றும் நீல்சன் நிறுவனத்துடன் இணைந்து வழங்கிடும் மக்கள் விருதினை தொடர்ந்தும் 15ஆவது ஆண்டிலும் பெற்றுக்கொண்டுள்ளது. சர்வதேச தரப்படுத்தல்களில் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்காக ISO/IEC 27001:2013 தரச்சான்றிதழினைப் பெற்றுள்ளது. இச்சான்றிதழைப்பெற்ற இலங்கையின் முதலாவதும், ஒரே வங்கியாகவும் மக்கள் வங்கி விளங்குகிறது.

அதேபோல் மக்கள் வங்கி தமது பயணத்தில் இன்னும் பல விருதுகளை சுவீகரித்துக் கொண் டுள்ளது. குறிப்பாக, கடந்த ஆண்டு களில் மட்டும் Asian Banker Excellence in Retail Financial Services Award, Asia Money Best Bank, World Finance, International Business Magazine போன்ற விருது வழங்கும் வைபவங்களில் மக்கள் வங்கி விசேட விருதுகளையும் வென்றுள்ளது. இதற்கு மேலதிகமாகThe Banker சஞ்சிகையினால் 2020, 2019 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் மக்கள் வங்கி உலகின் சிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாக இடம் பிடித்திருந்தது. இலங்கையின் சர்வதேச வர்த்தக சபை, பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் Daily FT ஆகியோரால் 2020, 2019 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் தொடர்ந்தும் இலங்கையின் மிகவும் புகழ்பெற்ற பெருமைமிகு 10 நிறுவனங்களுள் ஒன்றாக பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

அறுபதாண்டு காலமாக அனைத்து இலங்கையர்களையும் வலுவூட்டி, அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சௌகரியத்தினை மேம்படுத்தி, நவீன வங்கித் தீர்வுகளை வழங்கி, அவர்களது வாழ்வுக்கு மேலும் பெறுமதிசேர்த்து, இந்நாட்டு மக்களின் வங்கி என்ற உயர்நிலை யையும் நம்பிக்கையையும் மேலும் உறுதிப்படுத்திக்கொண்டு நிலைத்திருப்பதே மக்கள் வங்கியின் எதிர்பார்ப்பாகும்.



# திரைக்குப் பின்னால் இருந்தவரை முன்னிறுத்துவது பிரச்சினைகளுக்கான சிறந்த தீர்வல்ல

## நெருக்கடி நிலைமையை முடிவக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கயந்த எம்.பி. கோரிக்கை

திரைக்குப் பின்னால் இருந்தவரை முன்னால் கொண்டுவரும் முயற்சி வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தீர்வு அல்ல.

அரசாங்கம் இக்கட்டான நிலையை சந்தித்துள்ளதுடன், நாடு வேகமாக நெருக்கடி நிலையை சந்தித்து வருகின்றது. தொடர்ந்து நெருக்கடி நிலைமையை அதிகரிக்காமல் மக்களுக்கு உடனடி தீர்வுகளை வழங்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்

எதிர்க்ட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமீபத்தில் ஜனாதிபதி தேசத்துக்கு உரையாற்றுவதற்காக மேற்கொண்ட மிக நீண்ட உரைகள், நாட்கள் எடுக்கப்பட்டு, பல மணி நேரம் பதிவுசெய்யப்பட்டு ஒரு மணிநேரம் வாசிக்கப்பட்டன. ஜனாதிபதியின் முழுமையான பேச்சு சாத்தியமற்றது, போதாமை மற்றும் தோல்வி ஆகியவற்றால் நிறைந்திருந்ததை அவரின் உரையை செவிமெடுக்கும்போது அவதானித்தோம். நாட்டின் உண்மையான நிலை தனக்கு புரியவில்லை என்ற பாட்டில் உரையாற்றினார்.

கோட்டாபயவிற்கு நிர்வாகத்தின் புரிதல் மட்டுமல்லாமல், உரத்தைப் பற்றி கூட தெரியாது என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஜனாதிபதி நாடுமுழுவதும் சென்று, மக்கள் அபிப்பிராயங்களை அறியவேண்டும். அரசாங்கம் ஆட்சிக்குவந்து ஒன்றரை ஆண்டுகள் கழிந்து விட்டன. வணிகம் சரிந்தது மட்டுமல்லாது, விவசாயிகள் அழிக்கப்பட்டனர், மீனவர்கள் அனாதையாகிவிட்டனர், கல்வி அழிக்கப்பட்டு விட்டது, ரூபா வீழ்ச்சியடைந்துள்ளது, பொருளாதாரம் நொறுங்கிவிட்டது. சட்டத்தின் ஆட்சி கேள்விக்குறியாகியுள்ளது.

அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் மற்றொரு விடயம் முன்னுரிமையாக மாறப்போகின்றது. இரசாயன பதார்த்தங்கள் கடலில் ஊற்றப்படுவதால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். டொலர் இல்லாதபோது உரங்கள் தடைசெய்யப்படுகின்றன, அரிசியின் விலையைக் குறைப்பதற்கான வர்த்தமானிகள் வெற்றாக வெளியிடப்படுகின்றன. விவசாயிகளைச் சந்தித்து, இரசாயன உரங்களை தடைசெய்ய முடியுமா என்று ஜனாதிபதியே நேரடியாக மக்களிடம் கேட்கலாம். ஜனாதிபதியால் எரிவாயு தொட்டியின் எடையைக் குறைத்து எண்ணெய் விலையை அதிகரிக்க முடியுமா? என்றும் மக்களிடம் கேட்கலாம். கிராமங்களுடன் கலந்துரையாடல் கம சமக பிரிசந்தர நிகழ்ச்சியை முடியுமானால் நடத்துமாறு சவால் விடுக்கிறோம்.

முன்னாயத்தங்களின்றி நிலத்தில் வியர்த்துக் கொண்டிருக்கும் விவசாயிகளுடன் உண்மையானவர்களுடன் கம சமக பிரிசந்தர நிகழ்ச்சியை முடியுமானால் நடத்துமாறு நாங்கள் ஜனாதிபதிக்கு சவால் விடுகிறோம். அரசாங்கத்திற்கு மிகப்பெரிய டொலர் பற்றாக்குறை உள்ளது. எண்ணெய் விலை உயர்வை நேரடியாக நியாயப்படுத்துவதாக பெற்றோலிய அமைச்சர் வெளிப்படையாகக் கூறினார். நமது நாட்டுக்கு டொலர்கள் இல்லை. சிபிசி பணத்தை இழந்து வருகிறது. வங்கி முறை சரிந்து போகிறது. மாற்றாக எண்ணெய் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேயிலைத் தொழில் இப்போது தேயிலை விவசாயிகளை பெரும் சிக்கலில் ஆழ்த்தியுள்ளது. தேயிலைச் செடி இப்போது ஒரு டொலர் காலத்திற்குப் பிறகு டொலர்களைக் கொண்டு வர முடிகிறது. தேயிலை சாகுபடி போன்ற திட்டமிடப்படாத முடிவுகளால் சிலோன் தேயிலை இரண்டையும் இலங்கைக்கு அழிக்கிறது. இரசாயன உரங்களை இறக்குமதிசெய்ய வேண்டாம் என்று நாங்கள் அரசாங்கத்திடம் கூறுகிறோம். அதாவது, நடைமுறை தீர்வுகளைக் காணக்கூடிய விவசாயிகள் மற்றும் நிபுணர்களின் ஆலோசனையுடன் ஒரு நடைமுறை தீர்வைக் காணலாம்.அது செய்யப்படவில்லை.

மதுவை ஊசி மூலம் ஏற்றி பணம் சம்பாதிக்க அனுமதித்தார்கள்.

அவர்களும் மக்களும் சிங்கள - பௌத்த அரசாங்கத்தைப் பார்த்து, மரியாதைக்குரிய சங்கத்தினரும் இதை முடிவுக்குக் கொண்டுவர காத்திருக்கும் ஆட்சியாளர்கள் என்று கூறினர். இலங்கையின் வரலாற்றில் இவ்வளவு விரைவாக மோசமடைந்த ஓர் ஆட்சியாளரும் அரசாங்கமும் இருந்ததில்லை. ஒரு ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒன்றரை ஆண்டுகளில் முதல்முறையாக நாங்கள் போட்டியிட ஓர் அரசாங்க வேட்பாளரைத் தேட வேண்டியிருந்தது.

ஒரு நல்ல தலைமை தேவை என்பது ஒரு பொருட்டல்ல. திரைக்குப் பின்னால் இருந்தவரை இன்று முன்னால் கொண்டுவர முயற்சிக்கின்றனர். ஆனால், இந்த அரசாங்கத்தில் எல்லாவற்றையும் வழிநடத்திய நபரை முன்னிலைக்குக் கொண்டுவருமாறு பின்வரிசை எம்.பி.க்கள் கூச்சலிடுகிறார்கள், வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப இது ஒரு தீர்வு அல்ல என்று நாங்கள் கூறுகிறோம். அரசாங்கம் மோசமடைவது மட்டுமல்லாமல் நாடு வேகமாக மோசமடைகிறது. மக்களுக்கு உடனடி தீர்வுகளை வழங்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன் - என்று தெரிவித்தார்.

# ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் உயர்பீட ஆலோசகராக வைத்தியர் ரவூப் நியமனம்

தெகிவளையைச் சேர்ந்த சிரேஷ்ட வைத்திய அதிகாரி, வைத்தியர் ஏ.எல்.எம். ரவூப் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் உயர்பீட ஆலோசனைக்குழுவின் ஆலோசகராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இலவச வைத்திய முகாம்கள் பலவற்றை கொழும்பு மற்றும் அயல் கிராமங்கள்தோறும் நடத்திவரும் தேசப்பற்றாளர். தெஹிவளை மேற்கு ஐக்கிய சகோதர அயலவர் சங்கத்தின் ஸ்தாபகர்.

இவர் கட்சியின் நீண்டகால அபிமானியாகவும், கட்சியின் தூய கொள்கைகளை உளமார நேசிப்பவராகவும் இருக்கின்றார். மறைந்த தலைவர் அஷ்ரப்பின் ஆரம்பகால ஆதரவாளராக செயற்பட்ட இவர், முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சிக்காக பெரும் பாடுபட்டவர். அவரது மறைவுக்குப் பின்னர் கட்சி சுயநலவாதிகளால்



சீரழிக்கப்பட்டு சமூகத்துக்கு மாற்று அரசியல் கட்சியின் தேவை பற்றி உணர்ந்தபோது ஐக்கிய காங்கிரஸ் (உலமா) கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீதின் நேரிய செயற்பாடு, ஒரே கொள்கை நிலைப்பாடு, சமூகத்தை பொய் சொல்லி, உசார்படுத்தாத அரசியல் வழி காட்டல், கட்சி ஒன்றை ஸ்தாபித்து அதை வழி நடத்துகின்ற துணிச்சல் என்பதில் கவரப்பட்டு ஐக்கிய காங்கிரஸில் இணைந்துவருங்கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க இணைந்துகொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் தொடர்பில் 15 சதவீத முறைப்பாடுகள்

சிறுவர்களுக்கு எதிரான துஷ் பிரயோகங்களை முறையிடுமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வேண்டுகோள் விடுத்துள்ளது. சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 1929 என்ற துரித தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறையிட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு எதிரான துஷ் பிரயோகங்களை கண்காணிக்கும் நிறுவனங்களுக்கு 15 வீதமான முறைப்பாடுகளே கிடைப்பதாக சுட்டிக்காட்டிய அவர், தற்போதைய சூழ்நிலையில் வீடுகளிலும் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றன. இதுபற்றிய தகவல்கள் உரிய வகையில் கிடைக்காமை கவலைக் குரிய விடயம் என்றும் அவர் கூறினார்.

சிறுவர்களை துஷ்பிரயோகத்தி லிருந்து பாதுகாப்பது முழுச் சமூகத்தி னதும் பொறுப்பாகும்.

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்களை உரிய தரப் பிற்கு வழங்குமாறு சிறுவர் அதிகார சபையின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஆசிரிய ஆலோசகர் சேவை உள்ளீர்ப்புக் கடிதங்களை அனுப்பிவைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை

(நற்பிட்டிமுனை நிருபர்)

ஆசிரிய ஆலோசகர் சேவை உள்ளீர்ப்புக் கடிதங்களை துரிதமாக அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு தமற்போது மேற்கொண்டு வருகிறது.

ஜூலை முதலாம் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் இக்கடிதங்கள் அனுப்பப்படவிருப்ப துடன் இதற்கான பெயர் விபரங்களை அனுப்புமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் வலயக்கல்விப் பணிப் பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

ஒரு வலயத்தில் ஒரு பாடத்துறைக்கு 50 ஆசிரியர் எனும் வகையில் ஓர் ஆசிரிய ஆலோசகர் கணிப்பிடவேண்டுமென கல்வி அமைச்சின் செயலாளரால் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆசிரிய ஆலோசகர் சேவையில் இணைந்துகொள்வோருக்கான சுற்றுநிருபம் அனுப்பப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த அரசாங்க காலத்தில்தான் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேல் அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் தொழிற்சங்கத்தால் போராடப்பட்டு வந்த ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு நிரந்தர முடிவு காணப்பட்டதுடன், விடயம் தொடர்பாக அரசவர்த்தமானியிலும் பிரசுரிக்கப்படாடிருந்தது. இதேவேளை, இந்தப் பதவிக்கு விண்ணப் பிக்காத ஆசிரிய ஆலோசகர்கள் விண்ணப்பிக்கவும் சேவைக்கு விண்ணப்பித்தோர் விலகும் சந்தர்ப்பமும் அண்மையில் கல்வி அமைச்சு சுற்றுநிரூப மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு விண்ணப்பித்த பலர் தற்போது ஓய்வூதியம் பெறுவதற்கு விண்ணப்பித்த நிலையில் ஆசிரியர் சுயவிபரக் கோவைகள் வலயக்கல்வி அலுவலகங்களில் இல்லாததால் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கொரோனா தொற்று ஏற்பட்டு காரியாலயங்களில் குறிப்பிட்ட உத்தியோகத் தர்களே வருகை தருவதை கவனத்திற்கொண்டு ஆசிரிய ஆலோசகர் சேவை உள்ளீர்ப்புக் கடிதங் களை விரைவாக அனுப்ப கல்வி அமைச்சு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஆசிரிய ஆலோசகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பெண் ஒருவர் சடலமாக மீட்பு

(ஜூட் சமந்த)

**நாத்தாண்டிய நகரத்திலுள்ள கிராமிய வங்கிக்கு முன்னால் விழுந்து உயிரிழந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் மாரவில ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல மாரவில பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

**நேற்று முன்தினம் நாத்தாண்டிய, வளவுவத்தையைச் சேர்ந்த 75 வயதுடைய தோன பிரியட்ஜிஸ் டல்சி என்ற பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.**

**அவர் இருதய மற்றும் சுவாசநோயினால் பாதிக்கப்பட்டிருந்தமையும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.**

**மாரவில வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டவுடன் அவரின் சடலத்துக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தவுடன் பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது.**

# களிமண் ஏற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு

மாதத்திற்கு 03 கியூப் வீதம் களி மண்ணை ஏற்றுவதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்கும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மட்பாண்ட உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளை கருத்திற்கொண்டு இந்த தீர்மானத்தை எடுத்ததாக பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், தளபாடங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் விஜித்த பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இதற்கு முன்பு ஒரு கியூப் களிமண்ணுக்கும் அதிகமாக ஏற்றப்பட வேண்டுமாயின் அதற்கு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனுமதி அவசியமாகும்.

இந்த நடைமுறைகளினால் தாம் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக மட்பாண்ட உற்பத்தியாளர்கள் இராஜாங்க அமைச்சிடம் கூறியுள்ளனர்.

இதனிடையே, மாதாந்தம் 6 கியூப் களிமண்ணை ஏற்றுவதற்கான அனுமதி வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்தார்.

இந்த அனுமதி வழங்கப்படுமாயின் மட்பாண்ட உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு முழுமையான தீர்வு எட்டப்படும் - என இராஜாங்க அமைச்சின் செயலாளர் விஜித்த பண்டாரநாயக்க மேலும் கூறியுள்ளார்.




**எரிபொருள் விலை குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் ஏற்பட்டில நேற்று மொனராகலை நகரில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றிருந்தது.**



**இரண்டாம் கட்ட கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்துக்கமைய மாவத்தகம சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பறகஹதெனிய கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 15 பேருக்கு இரண்டாம் கட்டமாக சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்று வழங்கப்பட்டன. அதற்கமைய இந்தப் பிரதேசத்தில் முதலாம் கட்ட தடுப்பூசி பெற்றுக்கொண்ட சகலருக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.**

# 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட தங்க நகைகள் திருடியமை உள்ளிட்ட பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐவர் கைது

(இக்பால் அலி)

குருநாகல் பொலிஸ் பிரிவில் கடந்த எட்டு மாத காலமாக இடம்பெற்ற பெரும் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த எட்டு மாத காலமாக குருநாகல் பொலிஸ் பிரிவில் 06 வீடுகளில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட தங்க நகைகள் மற்றும் கணினி இயந்திரம் உட்பட பெறுமதியான மின்சார உபகரணங்கள் போன்றவை திருடப்பட்டிருந்தன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 05 சந்தேகநபர்கள் பூண்டுலோய பொலிஸ் பரிவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் பொலிஸார் மேலும் குறிப்பிடுகையில்,

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி திருடப்பட்ட 15 இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் கம்பளை மற்றும் பூண்டுலோயா நகைக் கடைகளில் விற்பனை செய்துள்ளன. இதேவேளை, அவர்களிடமிருந்து உருக்கப்பட்ட தங்கக்கட்டியொனறும் கைப்பற்றப்பட்டுள்ளது.

திருடப்பட்ட கணினி இயந்திரம் மற்றும் ஏனைய மின்சார இயந்திர உபகரணங்களில் ஒரு பகுதியினை கைப்பற்றியுள்ளதுடன் ஆறு வீடுகளில் திருடிய பணம் மற்றும் வீட்டுப்பொருட்களைத் திருடிய பிரதான சந்தேகநபர் உட்பட சந்தேக நபர்களுக்கிடையே பகிர்ந்தகொண்ட 20 இலட்சம் ரூபா பணம் மற்றும் வீட்டுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சந்தேகநபர் பூண்டுலோயா பொலிஸ் பிரிபிலுள்ள கும்பல்ஒலுவ கிராமத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபராவார். இதற்கு முன்னரும் திருட்டுச் சம்பத்தில் கைதுசெய்யப்பட்டு, இருண்டு வருடங்களுக்கு முன்னர் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர்கள் மீது களுத்துறை, அத்தனகல்ல, குளியாப்பிட்டிய, நாரம்மல, குருநாகல் கண்டி, மாத்தளை மற்றும் பொலன்னறுவை ஆகிய நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்புபட்டுள்ளமை மேலதிக விசாரணைகளில் தெரியவந்தள்ளது.

சந்தேகநபர்கள் கடந்த 28ஆம் திகதி பூண்டுலோயா பொலிஸ் பிரிவில் வைத்து கைதுசெய்யப்பட்டிருந்த இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குருநாகல் - புத்தளம் வீதியில் அமைந்துள்ள கோவிலின் பின்னால் மரத்தடியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 4260 மில்லிகிராம் அளவிலான ஹெரொயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இக்குழுவினர் விலை மதிக்க முடியாத புராதன மூன்று புத்தர் சிலைகளையும் திருடியுள்ளதுடன் அவற்றை குருநாகல், சாரகமகுளத்தின் அணைக்கட்டில் கருங்கல்லுக்கு அடியில் மறைத்து வைத்திருந்துள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. யன்னதம்பலாவ பிரதேசத்தில் வெளிநாட்டவர் ஒருவர் தங்கிய வீட்டில் திருடிய கணினி இயந்திரம் மற்றும் வீட்டுப் பொருட்கள் ஒரு தொகை கைப்பற்றப்பட்டுள்ளதாக குருநாகல் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எம். எச். என். புஷ்ப்பலால் தெரிவித்தார்.

குருநாகல் பொலிஸ் பிரிவில் ஆறு வீடுகளில் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைதுசெய்ததற்கு மேலதிகமாக மேலும் கொள்ளைச்சம்பவத்துடன் ஈடுபட்ட சந்தேகநபர்கள் நாரம்மல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. அவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

குருநாகல் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அனில் பிரியந்தவின் ஆலோசனையின் பிரகாரம் இரு பொலிஸ் குழுக்களை ஈடுபடுத்தி துரிதகதியில் சந்தேகநபர்களை கைது செய்யக்கூடியதாக இருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

# நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு கோரி அனுராதபுர மாநகர சபை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

## நீதி கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் எனவும் தெரிவிப்பு



(ஏ.பிர்தௌஸ்)

தம்மை நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு கோரி அனுராதபுரம் மாநகர சபை ஊழியர்கள் நேற்று முன்தினம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனால், நகரின் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக மாநகர சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நகரின் தற்போதைய சுத்திகரிப்பு நிலைமை குறித்து அனுராதபுரம் மாநகர சபையின் உயர் அதிகாரியிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனுராதபுரம் மாநகர சபையில் மிக நீண்ட காலமாக தற்காலிக அடிப்படையில் அலுவலகம் மற்றும் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடும் 200இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் தங்களை நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு கோரி தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இரண்டாவது நாளான நேற்று முன்தினமும் அனுராதபுரம் நகரின் பிரதான வீதியில் பாரிய எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் பெரும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. பல வருடங்களாக தற்காலிக சேவை செய்யும் எங்களை புறந்தள்ளிவிட்டு ஜனாதிபதியின் ஒரு இலட்சம் தொழில்வாய்ப்பு வழங்கி, அதனூடாக நியமனம் கிடைத்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்களை நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளும் நோக்கில் மாநகர சபைக்குள் அதிகளவிலானவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது ஓர் அநீதியான செயற்பாடாகும். அப்படியென்றால் நாங்கள் எங்கே செல்வது என ஆர்ப்பாட்டத்தின்போது ஊழியர்கள் கேள்வி எழுப்பினர். நாங்கள் தெரிவுசெய்த அரசாங்கமா எங்களுக்கு இப்படியான மோசமான வேலையை செய்கின்றது என இதன்போது கோஷமெழுப்பினர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்வரை தாம் பணிக்கு செல்லாது தொடர்ந்தும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோம் என ஊழியர்கள் கூறினர்.

# புத்தளம் தென்னைசார் உற்பத்தி தொழிற்சாலையொன்றில் திடீர் தீ விபத்து

## ஒரு கோடி ரூபா இழப்பு

(ஜூட் சமந்த)

புத்தளம், மதுரன்குளி, விரனோடை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுவந்த தென்னைசார் உற்பத்தி கைத்தொழிற் சாலையொன்றில் ஏற்பட்ட திடீர் தீ பரவலினால் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

புத்தளம் மற்றும் சிலாபம் நகர சபைக்குச் சொந்தமான தீயணைப்பு வாகனங்கள் தீயணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன. பிரதேச மக்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் நேற்று முன்தினமே இந்தத் தீயணைப்பு நடவடிக்கைகளை நிறைவுசெய்வதற்கு தீயணைப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்தத் தீ விபத்தினால் எவருக்கும் காயமோ அல்லது உயிரிழப்போ இடம்பெறவில்லை.

தீப்பரவலுக்கான காரணம் இது வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முந்தல் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# அரச உத்தியோகத்தரை தாக்கிய குற்றச்சாட்டில் கைதான மேஜர் ஜெனரல் பிணையில் விடுதலை

(அனுராதபுரம்)

பொலன்னறுவை மின்னேரிய தேசிய வனப்பூங்காவில் கடமையிலிருந்த வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களது கடமைக்கு இடையூறு விளைவித்தமை, மரண அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் உத்தியோகத்தரொருவரை தாக்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைதுசெய்த இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுதலைசெய்யுமாறு கெக்கிராவ நீதிமன்ற நீதவான் சமன் வெரணியகல உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் அனுராதபுரம் 21ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியான மொஹான் ரத்னாயக்கவுக்கே இவ்வாறு சரீரப் பிணை வழங்கப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ மேஜர் ஜெனரல் முதலாம் திகதி நேற்று ஹபரணை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தபோது பொலிஸார் அவரை கைது செய்து கெக்கிராவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது பிணை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

விடுதலைசெய்யப்பட்டுள்ள இராணுவ கட்டளை அதிகாரியை 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி மீண்டும் கெக்கிராவ நீதிமன்றில் ஆஜராகும்படி நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கடந்த 23ஆம் திகதி பொலன்னறுவ மின்னேரிய தேசிய வனப்பூங்விற்குள் சட்டவிரோதமான முறையில் உட்பிரவேசித்த இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான இரண்டு வாகனங்களை வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு முற்பட்டவேளை இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று கண்டி தலதா மாளிகையில் வழிபாட்டில் ஈடுபட்டார். இதன்போது பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்.**

# சிங்கப்பூரிலுள்ள இலங்கை சமூகம் வழங்கும் பங்களிப்புகள் இருதரப்பு பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகளை உருவாக்கும்

## சிங்கப்பூர் – புருனேவிலுள்ள இலங்கையர்களுடன் மெய்நிகர் சந்திப்பில் அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு





நாட்டின் அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை கடந்த ஆண்டுகளில் சிங்கப்பூரி லுள்ள துடிப்பான இலங்கைச் சமூகத்தினர் வழங்கியிருந்தனர். சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பரம் நன்மை பயக்கும் உறவுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை இந்த சிறந்த இணைப்புகள் இன்னும் வழங்கும் - என வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன நம்பிக்கை வெளியிட்டார்.

சிங்கப்பூர் மற்றும் புரூனே தாருஸ்ஸலாமிலுள்ள சமூகம் மற்றும் வணிக சங்கங்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் இலங்கையர்கள், மகா சங்கத்தினர் மற்றும் ஏனைய மதத் தலைவர்களுடன் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற மெய்நிகர் சந்திப்பில் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன உரையாடினார். இந்த அமர்வில் பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய மற்றும் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் கலந்துகொண்டனர். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் தாய்நாட்டோடு மீண்டும் இணைவதற்கான தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கும், இலங்கை மற்றும் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு இடையிலான நாடுகடந்த உறவுகளை வளர்ப்பதில் அவர்களின் முக்கிய பங்கை வகிப்பதற்குமான இந்தப் புதிய முயற்சியை வெளிநாட்டு அமைச்சர் குணவர்தனவின் வழிகாட்டுதலின்கீழ் புதிதாக நிறுவப்பட்ட வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் பிரிவு மேற்கொண்டுள்ளது.

இந்த சவாலான காலத்தில், கொரோனா தொற்றுநோய்க்கு எதிரான இலங்கையின் போராட்டத்தில் ஏராளமான வழிகளில் அவர்கள் நல்கிய கணிசமான பங்களிப்புகளுக்காக குறிப்பாக, அவசர மருத்துவப் பொருட்களை வழங்கி தொடர்ந்தும் நல்கிய ஆதரவுகளுக்காக வெளிநாட்டு அமைச்சர் குணவர்தன தனது உரையின் ஆரம்பத்தில் சிங்கப்பூர் மற்றும் புரூனே தாருஸ்ஸலாமிலுள்ள இலங்கைச் சமூகத்தினருக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

சிங்கப்பூரிலுள்ள மகா சங்கத்தினர் உள்ளிட்ட இலங்கைச் சமூகத்தினர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வளர்ப்பதில் மிகவும் பயனுள்ள பாலமாக அமைந்துள்ளனர் என்ற உண்மையை எடுத்துக்காட்டிய வெளிநாட்டு அமைச்சர் குணவர்தன, பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாசாரம் போன்ற ஒவ்வொரு துறையிலும் இலங்கையின் முன்னேற்றத்திற்கும் செழிப்பிற்கும் பங்களிப்புச் செய்யும் வகையில், தற்போதைய சூழலில் இன்னும் தீவிரமாக அதே பாதையில் தொடர்ந்தும் செயற்படுமாறு கேட்டுக்கொண்டார். குறிப்பிடத்தக்க ஆண்டுகளில் நாட்டின் அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை சிங்கப்பூரிலுள்ள துடிப்பான இலங்கை சமூகத்தினர் வழங்கியிருப்பதை நினைவுகூர்ந்த அவர், சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பரம் நன்மை பயக்கும் உறவுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை இந்த சிறந்த இணைப்புகள் இன்னும் வழங்கும் என நம்பிக்கை வெளியிட்டார்.

ஆசியான் நாடுகளுடனான பொருளாதார ஒருங்கிணைப்புக்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் இருப்பதனை தனது உரையில் வலியுறுத்திய பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, இந்த இரண்டு முக்கிய ஆசிய நாடுகளுடனான ஈடுபாட்டிலிருந்து இலங்கை முழுமையான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சிங்கப்பூர் மற்றும் புரூனே தாருஸ்ஸலாமிலுள்ள இலங்கையர்களின் திறன்கள் மற்றும் செல்வாக்கினாலான தொடர்ச்சியான ஆதரவைக் கோரினார்.

தொடக்கக் கலந்துரையாடலின்போது கருத்து தெரிவித்த வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே,

அதிகரித்த பொருளாதாரப் பங்களிப்புகள் மற்றும் சமூகத்தில் அவர்களின் விலைமதிப் பற்ற வகிபாகங்களில் தமது பங்கை வகிப்பதற் கானதொரு வழியில் முன்வருமாறு வலியுறுத்திய அதேவேளை, இலங்கையின் அபிவிருத்தி மற்றும் முயற்சிகளுக்கு முன்னெப்போதையும்விட வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களிடமிருந்தான பரந்த ஆதரவு அவசியம் என தனது தொடக்க உரையில் வலியுறுத்தினார்.

சிங்கப்பூர் மற்றும் புரூனே தாருஸ்ஸலாமில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களின் நலனைக் கவனிக்கும் அதேவேளை, தொற்றுநோயின் போது அவர்களைத் திருப்பியனுப்பும் முயற்சிகளில் உயர் ஸ்தானிகராலயத்திற்கு ஏற்பட்ட பல சவால்களை சமாளிப்பதற்கு நல்கிய விலைமதிப்பற்ற ஆதரவு மற்றும் பங்களிப்புகளுக்காக சிங்கப்பூரிலுள்ள இலங்கை சமூகத்தினருக்கு சிங்கப்பூருக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் சஷிகலா பிரேமவர்தன தனது சுருக்க உரையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார். நன்கொடைகள் மற்றும் பங்களிப்புகளை முறையாகப் பயன்படுத்துவதற்கான சிறந்த ஒருங்கிணைப்பின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

கலந்துரையாடலில் பங்கேற்ற மகாசங்கத்தினர் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள், சிங்கப்பூர் மற்றும் புரூனே தாருஸ்ஸலாமிலுள்ள 15இற்கும் மேற்பட்ட சமூக மற்றும் வணிக சங்கங்களின் பிரதிநிதிகள் தற்போதைய கொரோனா தொற்றுநோய்க்கு எதிராகப் போராடுவதிலான இலங்கையின் முயற்சிகளுக்கு தமது வலுவான ஆதரவை வெளிப்படுத்திய அதேவேளை, பலவகையான நன்கொடைகள் மற்றும் பங்களிப்புகளை நல்குவதற்கும் உறுதியளித்தனர். தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக சாத்தியமான அனைத்து வழிகளிலும் தமது முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதில் வெளிநாட்டு அமைச்சு மற்றும் சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதையும் அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

பொருளாதார விவகாரங்களுக்கான மேலதிக செயலாளர் பி.எம்.அம்சா, தூதரக விவகாரங்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் பிரிவிற்கான பணிப்பாளர் நாயகம் விஸ்வநாத் அப்போன்சு மற்றும் வெளிநாட்டு அமைச்சின் பல சிரேஷ்ட அதிகாரிகள் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுடன் ஈடுபடும் இந்தத் தொடக்க அமர்வில் பங்கேற்றனர்.

# புதையல் தோண்டிய சம்பவத்தில் கைதான ஒன்பது பேருக்கு 07ஆம் திகதிவரை விளக்கமறியல்

(அனுராதபுரம்)

புதையல் தோண்டிய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஒன்பது பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களை எதிர்வரும் 07ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி அனுராதபுரம் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஒன்பது பேரும் மஹவிளச்சிய, நொச்சியாகம, அனுராதபுரம், பொல்கஹவெல மற்றும் தலாவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 30ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் மஹவிளச்சிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் மஹவிளச்சிய பொலிஸ் பிரிவின் சூரியதமன பகுதியில் சுற்றிவளைப் பினை மேற்கொண்டு புதையல் தோண்டிக் கொண்டிருந்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்கள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவிளச்சிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலன்னறுவை வெலிக்கந்த வைத்தியசாலையின் அவசர சிகிச்சை உபகரணங்கள் வழங்கிவைப்பு





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொரோனா தொற்று சிகிச்சை மையமாக விளங்கிவரும் பொலன்னறுவை வெலிக்கந்த வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சை உபகரணங்கள் அன்மையில் கெயா ஸ்டேசன் நிறுவனத்தினால் கையளிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் கொரோனா மூன்றாவது அலை காரணமாக நோயாளிகள் அதிகரித்து வருகின்ற நிலையில் வெலிக்கந்த வைத்தியசாலையும் கொரோனா நோயாளிகளுக்காகான சிகிச்சையளிக்கும் வைத்திய நிலையமாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த வைத்தியசாலைக்கு பற்றாக்குறையாக இருக்கும் அவசர சிகிச்சை உபகரணங்களை வழங்கி உதவுமாறு அங்கு கடமையாற்றும் வைத்தியர் களான எம்.இஸ்பாக் மற்றும் சுமையா ஹம்சுதீன் ஆகியோர் கெயா ஸ்டேசன் நிறுவனத்திற்கு விடுத்த கோரிக்கைக்கமைய ஏனைய சிலரது உதவிகளுடன் சுமார் 2.3 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் திருமதி உஸ்மிலா பயாஸ் உள்ளிட்டவர்கள் வைத்தியர் களான எம்.இஸ்பாக் மற்றும் சுமையா ஹம்சுதீன் ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாக மருதானை நொரிஸ் வீதியிலுள்ள மேர்விசள்ஸ் நிறுவனத்தில் வைத்து கையளித்தனர்.



**மொரட்டுவை, எகொட உயன நலன்புரிச் சங்கத்தினூடாக காலஞ்சென்ற சுவீடன் நன்கொடையாளர் எவோர் நீவன் அம்மையாரின் நினைவாக பாணந்துறை போதனா வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு சுடுநீர் மற்றும் சுத்தமான குடிதண்ணீர் இயந்திரங்கள் 10 உள்ளிட்ட குடிதண்ணீர்ப் போத்தல்கள் உள்ளிட்ட மேலும் சில பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. சங்கத்தின் தலைவர் டட்லி பெர்னாண்டோ உள்ளிட்ட அதிகாரிகளினால் மருத்துவமனை வைத்திய அதிகாரி விசேட வைத்தியர் இந்திராணி கொடகந்த, வைத்தியர் செலசூம் சங்க ரந்தெனிய ஆகியோருக்கு வழங்கப்பட்டன.**

# யாழில் 2ஆம் கட்ட கொவிட்-19 தடுப்பூசிகள் ஏற்றும் வேலைத்திட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் கட்ட கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் பத்தாம் திகதிவரை முன்னெடுக்கப்படும்.

இதற்காக 50 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசி மருந்து கிடைத்திருப்பதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஜூலை மாதம் 5ஆம் திகதிமுதல் 10ஆம் திகதி வரை இடம்பெறும். 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள், திகதிகள் பற்றிய விபரங்கள் அந்தந்த பிரதேசங்களுக்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகளினால் அறியத்தரப்படும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகள் தொடர்பில் ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ். போதனா வைத்தியசாலையிலும், தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைகளிலும், எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிமுதல் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்படுபவர்கள், தமது பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும்.

அவ்வாறே மேற்குறிப்பிடப்பட்ட வகையில் அடங்கும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு அவர்களுடைய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிமுதல் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

தொழிற்சாலைப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை அப்பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியினால் அறிவிக்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக கடந்த மே மாத இறுதியிலும் ஜூன் மாத ஆரம்பத்திலும் 49,602 பேருக்கு முதல் தடவை கொவிட்-19 தொற்று நோய்க்கெதிரான தடுப்பூசி வழங்கப்பட்டது. இவர்களுக்கான இரண்டாவது தடுப்பு மருந்தேற்றும் பணிகள் கடந்த ஜூன் 28ஆம் திகதிமுதல் ஜூலை 3ஆம் திகதிவரை இடம்பெற்றன. இதில் 46,648 பேர் இரண்டாவது தடுப்பு மருந்தை பெற்றுக்கொண்டனர்.

முதலாவது தடுப்புமருந்தை பெற்றுக்கொண்டவர்களில் சிலர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் இருப்பதனால் அப்பிரதேசங்கள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் இவர்களுக்கான இரண்டாவது தடுப்பு மருந்து வழங்கப்படும்.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கமைவாக முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கும், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், ஆபத்துநிலை உடைய கர்ப்பிணித்தாய்மார்களுக்கும், 35 வயதிற்கு மேற்பட்ட அனைத்து கர்ப்பிணித்தாய்மார்களுக்கும், முன்களப் பணியாளர்களாக உள்ள கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் இரண்டாவது கட்ட தடுப்பூசி வழங்கப்படும்.

தொழிற்சாலை பணியாளர்களுக்கும், ஏனைய முன்களப் பணியாளர்களுக்கும் தடுப்புமருந்தை முன்னுரிமை அடிப்படையில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## செட்டிகுளத்தில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுனியா, செட்டிகுளம், கணேசபுரம் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையிலிருந்த இளம் குடும்பத் தலைவர் ஒருவரை நேற்று முன்தினம் மாலை சடலமாக மீட்டுள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், கணேசபுரம் பகுதியில் வசித்துவந்த 20 வயது இளம் குடும்பஸ்தர் ஒருவர் வீட்டில் எவரும் இல்லாத நிலையில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

வீட்டிற்கு வந்த தாயார் குறித்த இளைஞன் தூக்கில் தொங்குவதை அவதானித்து, அயலவர்களின் உதவியுடன் அவரை மீட்டு அம்பியூலன்ஸின் உதவியுடன் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பிவைத்தபோதும் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதற்கு முன்னரே அவர் மரணமடைந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பறயனாலங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சாவகச்சேரியில் இரத்த தான நிகழ்வு



(சாவகச்சேரி நிருபர்)

யாழ் மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தினதும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினதும் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மாபெரும் இரத்த தான நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் மினேஸ், செயலாளர் தர்சன் உள்ளிட்ட கழக அங்கத்தவர்கள், சாவகச்சேரி பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஜனார்த்தனன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

## நகரசபை உறுப்பினரின் நடவடிக்கையால் அகற்றப்பட்டது நீண்டகால குப்பைமேடு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சிவன் கோவிலடிப் பகுதியில் நீண்டகாலமாக வீதியில் தேங்கிக் கிடந்த குப்பைமேடு நகரசபை உறுப்பினர் நடனதேவனின் நடவடிக்கையால் உடனடியாக அகற்றப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக குறித்த பகுதியில் குப்பைகள் தேங்கிக் கிடப்பதாக பொதுமக்கள் நகரசபை உறுப்பினரின் கவனத்துக்குக்கொண்டு சென்றததையடுத்து உடனடியாக அதனை நகரசபையினர் அப்புறப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் எதிர்காலத்தில் இவ்வாறு வீதிகளில் குப்பைகளை தேக்குவோர் மீது நடவடிக்கை எடுக்கவும் நகரசபை தீர்மானித்திருப்பதாக சபை உறுப்பினர் நடனதேவன் தெரிவித்துள்ளார்.



## உளுந்து பயிர்ச்செய்கையை தாக்கும் ஒருவகை நோய்

### தோட்டச் செய்கையாளர்கள் பாதிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பல கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள உளுந்து பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்டுள்ள ஒருவகை நோய் தொற்று காரணமாக குறித்த செய்கையை முழுமையாக அழிக்கும் நிலைக்கு தோட்டச் செய்கையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாலையடி புதுக்குளம், பாலப்பெருமாள் கட்டு, குருவில் ஆகிய கிராமங்களில் மேட்டுநில பயிர்ச்செய்கையான தோட்டச்செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உளுந்து மற்றும் கச்சான் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் உரம் மற்றும் கிருமிநாசினி போன்றவற்றிற்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகள் காரணாக உளுந்து பயிர்ச்செய்கையை தாக்கிய ஒருவகை நோயைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அப்பகுதி விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் தற்போது குறித்த உளுந்து பயிர்ச்செய்கையை முழுமையாக அழிக்கும் நடவடிக்கையில் தோட்டச்செய்கையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

உரம்,மற்றும் கிருமிநாசினி போன்றவற்றிற்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகள் காரணாக தமது பயிர்களுக்கு அதனை உரிய நேரத்தில் பயன்படுத்தாத காரணத்தினாலேயே குறித்த நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதாக தோட்டச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## வடமராட்சியில் மூன்று பாடசாலைகளில் கற்றல் மத்திய நிலையங்கள் அங்குரார்ப்பணம்



(சாவகச்சேரி நிருபர்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட யா/கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி, யா/வதிரி திரு இருதயக் கல்லூரி மற்றும் யா/சிதம்பரக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் அண்மையில் பிரதேச கற்றல் மத்திய நிலையங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

கொவிட்-19 காலப்பகுதியில் இணைய வசதி இல்லாத மாணவர்களின் கல்வியை பேணும் முகமாக குறித்த கற்றல் மத்திய நிலையங்களை யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்திருந்தார்.

மேலும் நிகழ்வில் கல்வி அதிகாரிகள், பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## கைதடியில் 470 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(சாவகச்சேரி நிருபர்)

அண்மையில் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட பயணத்தடை காரணமாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட கைதடிவாழ் மக்களுக்கு கைதடி மேற்கு சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டிருந்தன.

கைதடி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கனடாபுலம்பெயர் உறவுகள் மற்றும் சமூக சேவகர்களின் நிதிப்பங்களிப்பில் கைதடியிலுள்ள 470 குடும்பங்களுக்கு இவ்வாறு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டிருந்தன.



வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## யாழ் மாநகர சபை - நல்லூர் பிரதேச சபை தவிசாளர்களை இடைநீக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் முன்னணி மனு!

யாழ் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பா.மயூரன் ஆகியோரை கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தி, உள்ளூராட்சி உறுப்புரிமையை நீக்கக் கோரி, கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மனு தாக்கல் செய்துள்ளது.

இதே கோரிக்கையை முன்வைத்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தது.

வி.மணிவண்ணன், பா.மயூரன் ஆகியோரின் அங்கத்துவத்தை நீக்கி, அவர்களின் உள்ளூராட்சி உறுப்புரிமையை இடைநிறுத்த கோரப்பட்டிருந்தது. எனினும், யாழ். மேல் நீதிமன்றம் இருவரின் உள்ளூராட்சி உறுப்புரிமைக்கும் இடைக்கால தடை விதிக்கவில்லை.

இதையடுத்து, இருவரின் உறுப்புரிமையை இடைநிறுத்தக் கோரி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## கொவிட் பரவலையடுத்து வவுனியா சதொச கிளை உட்பட எட்டு கடைகளுக்கு பூட்டு




(வவுனியா நிருபர்)

கொவிட் பரவலையடுத்து வவுனியா நகர சதொச கிளை உட்பட நவீன சந்தைப்பகுதியிலுள்ள ஏழு கடைகளும் நேற்று மாலை மூடப்பட்டன.

வவுனியா நகரில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் மாலை வெளியாகிய நிலையில், வவுனியா நகர சதொச கிளையில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கும் நவீன சந்தை தொகுதியில் 7 கடைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த ஊழியரை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்க சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அவருடன் தொடர்பைப் பேணிய சதொச கிளை மற்றும் ஏனைய கடை ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கடைகள் சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டுள்ளன.

## முகக்கவசமின்றி சென்ற இளைஞர் மீது இராணுவச் சிப்பாய் தாக்குதல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை சந்தியில் ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மீது இராணுவ சிப்பாய் ஒருவர் தாக்குதல் மேற்கொண்ட நிலையில் குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

நேற்று ஆனந்தபுரம் பகுதியிலிருந்து வைத்தியசாலைக்கு செல்வதற்காக இரணைப்பாலை சந்திக்குச் சென்ற இளைஞர் ஒருவர் முகக்கவசம் அணிந்து செல்லாத நிலையில், முகக்கவசம் அணிந்து செல்லுமாறு கூறி இராணுவச் சிப்பாய் ஒருவர் குறித்த இளைஞர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

குறித்த இளைஞர் மீது இராணுவச் சிப்பாய் தாக்குதல் நடத்திய நிலையில் அந்த இடத்தில் மக்கள் ஒன்றுகூடி இராணுவத்தினருடன் முரண்பட்ட நிலை தோன்றியுள்ளது. மாஸ்க் அணியாத காரணத்தால் ஒருவர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்த முடியுமா என குறித்த இடத்தில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் மக்களை குறித்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தியதோடு பாதிக்கப்பட்ட இளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் சென்றுள்ளார். புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியாவில் கொரோனா 3ஆம் அலை ஒக். - நவம்பரில் உச்சமடையும்

## விஞ்ஞானிகள் குழு தகவல்

கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளை முறையாக பின்பற்றாவிடில் கொரோனா மூன்றாம் அலை பாதிப்பு எதிர்வரும் அக்டோபர் - நவம்பர் மாதங்களில் உச்சத்துக்குச் செல்ல வாய்ப்புள்ளது. மேலும், இரண்டாம் அலையின்போது பதிவான தினசரி பாதிப்பில் பாதியளவு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது - என்று மத்திய அரசு சார்பில் அமைக்கப்பட்ட விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது.

கொரோனா பாதிப்பு நிலைவரத்தை கணித முறை மாதிரிகள் அடிப்படையில் முன்கூட்டியே கணிப்பதற்காக மூன்று பேர் கொண்ட விஞ்ஞானிகள் குழு, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை சார்பில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டது. கொரோனா மூன்றாம் அலை பாதிப்பு குறித்து இந்தக் குழு இப்போது கணித்துள்ளது.

அந்த முன்கணிப்பு குறித்து அந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கும் விஞ்ஞானி மனீந்திர அகர்வால், தனது சுட்டுரைப் பக்க பதிவுகளில் தெரிவித்திருப்பதாவது:

கொரோனா மூன்றாம் அலை முன்கணிப்பில், நோய் எதிர்ப்புத் திறன் மற்றும் தடுப்பூசியின் செயல் திறன் இழப்பு, புதிய உருமாறிய கொரோனா தீநுண்மி வகைகள் என்பன உள்ளிட்ட பல்வேறு காரணிகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாம் அலை தாக்க முன்கணிப்பின்போது இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை.



**காசிமேட்டில் காற்றில் பறந்த தனிமனித இடைவெளி..!**

**ஊரடங்கு தளர்வுகள் அறிவிக்கப்பட்டதையடுத்து பட்டினப்பாக்கம், சிந்தாதிரிப்பேட்டை மீன் சந்தைகளில் அலைமோதிய கூட்டம்....**

இதில் மூன்று விதமான கணிப்புகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

முதலாவதாக, 'நம்பிக்கை' அடிப்படையிலானது. அதாவது, நாட்டில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் இயல்புநிலை திரும்பும், புதிய உருமாறிய கொரோனா வகை உருவாக வாய்ப்பில்லை என்று கணிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கணிப்பு 'இடைநிலையானது'. அதில், முதலாவது கணிப்பின்படி இயல்புநிலை திரும்ப வாய்ப்புள்ளது என்பதோடு, தடுப்பூசி செயல்திறன் 20 சதவீத அளவுக்கு குறைய வாய்ப்புள்ளது என்று கணிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கணிப்பு 'கவலைக்குரிய வகை'யாக கணிக்கப்பட்டுள்ளது. அதன்படி, புதிய உருமாறிய கொரோனா வகை உருவாக வாய்ப்புள்ளது என்றும், ஒகஸ்ட் மாதத்தில் 25 சதவீதத்துக்கும் அதிகமாக பரவ வாய்ப்புள்ளது என்றும் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பாதிப்பு டெல்ட்டா மற்றும் டெல்ட்டா பிளஸ் உருமாறிய வகைகளின் பாதிப்பு அளவுக்கு இருக்காது என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை மேலும் தீவிரப்படுத்தும்போது, கொரோனா மூன்றாம் அலை அல்லது நான்காம் அலையால் பெரியளவில் பாதிப்பு இருக்காது. மூன்றாம் அலை பாதிப்பின்போது பெரும்பாலும் தினசரி பாதிப்பு அளவு 50,000 முதல் ஒரு இலட்சம் என்ற அளவிலேயே இருக்க வாய்ப்புள்ளது என்று சுட்டுரைப் பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தப் பதிவுடன் அவர் பகிர்ந்துள்ள வரைபட விவரத்தில், ''கொரோனா இரண்டாம் அலை பாதிப்பு வரும் ஒகஸ்ட் மாத மத்தியில் வெகுவாக குறைந்துவிடும். மூன்றாம் அலை பாதிப்பு அக்டோபர்-நவம்பர் மாதங்களில் உச்சத்தை அடைய வாய்ப்புள்ளது.

கொரோனா பாதுகாப்பு நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படவில்லையெனில், மூன்றாம் அலையின்போது தினசரி பாதிப்பு 1.5 இலட்சம் முதல் 2 இலட்சம் அளவுக்கு உயர வாய்ப்புள்ளது. இது இரண்டாம் அலை உச்சத்தில் இருந்த மே மாதத்தின்போது பதிவான தினசரி பாதிப்பு அளவில் பாதிக்கும் குறைவாகும். மே 7ஆம் திகதியன்று இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 4,14,188-ஆக பதிவானது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயிரிழந்ததாக கூறிய குழந்தை கல்லறையில் கண்விழித்த அதிசயம்



தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அலட்சியத்தால் உயிருடன் இருந்த குழந்தையை இறந்ததாக கூறியதால் அடக்கம் செய்ய முயன்றபோது குழந்தை கண் விழித்ததால், மீண்டும் மருத்துவமனையில் குழந்தை அனுமதிக்கப்பட்டது.

தேனியைச் சேர்ந்த பாத்திமாமேரி (வயது 30) என்ற பெண் நேற்றுமுன்தினம் (ஜூலை 03) இரவு பிரசவத்திற்கு தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நேற்று அதிகாலை 3:30 மணிக்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்தது. சிறிதுநேரத்தில் குழந்தை இறந்ததாக தெரிவித்தனர்.

காலை 8 மணிக்கு மருத்துவமனையில் பக்கெட்டில் குழந்தையை வைத்து அடக்கம் செய்ய கொடுத்துள்ளனர். இதனையடுத்து காலை 10 மணிக்கு பெரியகுளம் தென்கரை கல்லறையில் குழந்தையை அடக்கம்செய்ய குழி தோண்டியுள்ளனர். தாய்மாமன் ஏசுதாஸ், பக்கெட்டை திறந்தபோது குழந்தை கண்விழித்து, கை, கால்களை அசைத்தது. இதனால் அதிர்ச்சியடைந்த உறவினர்கள் குழந்தையை தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர்.

குழந்தையின் தந்தை பிளவேந்திரராஜா கூறுகையில், ''அரச மருத்துவமனை குழந்தை உயிரோடு விளையாடியுள்ளது. இதயத்துடிப்பு சீராகவுள்ளதா என கண்காணிக்கவில்லை. இதுபோன்ற சம்பவம் யாருக்கும் ஏற்படக்கூடாது'' என கண்கலங்கினார்.

**தீவிர சிகிச்சை**

இதுகுறித்து வைத்தியசாலையில் முதல்வர் பாலாஜிநாதன் தெரிவிக்கையில், ''பாத்திமாமேரிக்கு குறை பிரசவத்தில் 700 கிராம் எடையுள்ள பெண் குழந்தை பிறந்துள்ளது. செயற்கை சுவாசக் கருவி உதவியுடன் தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது'' என்றார்.

## இந்திய செய்திகள்

# கோவையில் 264 பேருக்கு கரும்பூஞ்சை நோய் பாதிப்பு

**30 பேர் கண் பார்வை இழப்பு**



**கோவை அரச மருத்துவமனையில் இதுவரை கரும்பூஞ்சையால் பாதிக்கப்பட்ட 264 பேர் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 110 பேருக்கு எண்டோஸ்கோபி அறுவைசிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது. தீவிர நோய்த் தொற்று பாதிப்புடைய 30 பேர் ஒரு கண் பார்வையை இழந்துள்ளனர். இதில் ஒரு சிலருக்கு கண் அகற்றப்பட்டுள்ளதென கோவை அரச மருத்துவமனை முதல்வர் நிர்மலா தெரிவித்துள்ளார்.**

**இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,**

**''ஆரம்ப நிலையில் வந்த அனைவருக்கும் உரிய சிகிச்சை அளித்ததன் மூலம் குணமடைந்துள்ளனர்.**

**எனவே அலட்சியமாக இல்லாமல் மூக்கடைப்பு, மூக்கிலிருந்து சளியுடன் ரத்தம் கலந்து வருதல், கண் வீக்கம், முக வீக்கம், கண் சிவப்பாக மாறுதல், தலைவலி, பல்வலி போன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் உடனடியாக மருத்துவரை அணுகவேண்டும். மூக்கு வழியாக செல்லும் இந்த நோய்த் தொற்று சைனஸ் வழியாக கண்ணிற்கு சென்று கண் பாதிக்கப்படுகிறது. அதேபோல் கண் வழியாக மூளையில் பாதிப்பை ஏற்படுத்தி உயிரிழப்பு வரை ஏற்படுகிறது. இதனால் நோய்த் தொற்றின் ஆரம்ப நிலையில் சிகிச்சை எடுத்துக்கொண்டால் கண் பார்வை இழப்பு, உயிரிழப்பு போன்றவற்றை தவிர்க்க முடியும்.**

**கரும்பூஞ்சை நோய்த் தொற்றுக் குறித்து மக்கள் அச்சப்படத் தேவையில்லை. முகக்கவசம் அணிவதை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். மூக்கு வழியாகவே இந்நோய்த் தொற்று பரவுவதால் முகக்கவசம் அணிவதன் மூலம் கரும்பூஞ்சை நோய் பாதிப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்'' - இவ்வாறு நிர்மலா கூறினார்.**

# கொரோனா ஒரு நீங்கா நோய்; நீடிக்கும் நோயாக மாறலாம்

கொரோனா தொற்று தொடர்ந்து குறைந்து வந்தாலும், வைரஸின் மரபணு மாற்றங்களால், எதிர்காலத்தில் அது ஆண்டு முழுதும் காணப்படும் ஒரு நோயாக மாறி விடும் - என சில மருத்துவ நிபுணர்கள் கணித்துள்ளனர்.

டில்லி அரசு LNJP மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் சுரேஷ் குமார் இது பற்றி கூறுகையில், டில்லியிலிருந்து ஒரு போதும் கொரோனா நூறு சதவிகிதம் ஒழியாது என்றும், ஆண்டு முழுதும் சில கொரோனா நோயாளிகள் இருந்து கொண்டே இருப்பார்கள் என்றும் தெரிவித்தார்.



கொரோனா mRNA அடிப்படையிலான வைரஸ் என்பதால் தொடர்ந்து வாழ்வதற்காக தனது வடிவத்தை அது தொடர்ந்து மாற்றிக்கொண்டே இருக்கும் என்பதால் அது ஒரு நீங்காத நோயாக நீடிக்கலாம் என கூறப்படுகிறது.

# அமெரிக்காவின் 245ஆவது சுதந்திர தினம்: இந்திய பிரதமர் மோடி ட்விட்டரில் வாழ்த்து




அமெரிக்காவின் 245ஆவது சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

1776ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் திகதி அமெரிக்கா சுதந்திரம் பெற்றது. இதன் 245ஆவது ஆண்டு சுதந்திர தினம் நேற்று (ஜூலை 4) கொண்டாடப்பட்டது. இதனையொட்டி உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், பிரதமர் மோடி ட்விட்டரில் வெளயிட்டுள்ள வாழ்த்து பதிவு:

245ஆவது சுதந்திர தினத்தையொட்டி ஜனாதிபதி ஜோ பைடனுக்கும், அமெரிக்க மக்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். ஆற்றல் மிகுந்த ஜனநாயக நாடுகளான இந்தியாவும், அமெரிக்காவும் சுதந்திரத்தின் மதிப்புகளை பகிர்ந்துகொள்கிறது. இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவு, உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்தது.

இவ்வாறு அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# கடலில் மீன்பிடித்த தமிழக மீனவர்களை விரட்டியடித்த இலங்கைக் கடற்படையினர்

நடுக்கடலில் மீன்பிடி வலைகளை வெட்டியும், மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்தும் இலங்கைக் கடற்படையினர் அட்டூழியத்தில் ஈடுபட்டுவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அறுநூற்றுக்கு மேற்பட்ட விசைப்படகுகளில் தமிழக மீனவர்கள் கச்சத்தீவுக்கும் தனுஸ்கோடிக்கும் இடையே கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது அங்கு ரோந்துக் கப்பல்களில் வந்த இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி மீனவர்களை விரட்டியடித்தனர்.

மீண்டும் நேற்று அதிகாலை அதே பகுதியில் மீனவர்கள் மீன்பிடித்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் பத்துக்கு மேற்பட்ட விசைப்படகுகளில் வலைகளை வெட்டிக் கடலில் வீசியுள்ளனர்.



இதனால் மீனவர்கள் மீன்பிடிக்காமல் கரை திரும்பினர். இலங்கைக் கடற்படையின் அட்டூழியத்தால் மீன்பிடி தொழில் அழியும் நிலை ஏற்பட்டுள்ளதாக இராமேஸ்வரம் மீனவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

# சைக்கிள் பயிற்சியில் முதலமைச்சர்

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோவளம்முதல் மாமல்லபுரம்வரை சைக்கிள் பயிற்சி மேற்கொண்டதுடன் மக்கள் குறைகளை கேட்டறிந்துள்ளார்.

முதலமைச்சராவதற்கு முன்பு மு.க.ஸ்டாலின் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை சைக்கிள் பயிற்சி மேற்கொண்டு வந்தார். இந்தப் பயணத்தின் இடையே அவர் மக்களை சந்திப்பதும் வழக்கம்.



இந்நிலையில், முதலமைச்சரான பின்னர் முதன்முறையாக மு.க.ஸ்டாலின் நேற்று கிழக்கு கடற்கரைச் சாலையில் சைக்கிள் பயிற்சி மேற்கொண்டார். கோவளம்முதல் மாமல்லபுரம்வரையான இந்தப் பயணத்தில் சைக்கிளிங் செய்யும் பலரும் பங்கேற்றனர்.

முதலமைச்சர் செல்லும் வழிநெடுக பொலிஸார் பாதுகாப்பு அளித்தனர். பயணத்தின் இடையே, வழியில் அவர் மக்களையும் சந்தித்துப் பேசினார். இளைஞர்கள் பலரும் அவருடன் செல்பி எடுத்துக்கொண்டனர்.

மாமல்லபுரம் வந்த அவர், ஒரு ஹோட்டலில் ஓய்வு எடுத்துக்கொண்டார். இந்தப் புகைப்படங்கள் இப்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

# உழைத்து வாழ வேண்டும்...



உழைத்து வாழ வேண்டும் என்ற கூற்றுக்கேற்ப குரங்கு ஒன்று டீக்கடையில் பாத்திரம் கழுவும் வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இன்ஸ்டாகிராம் தளத்தில் ghantaa என்பவர் தனது பக்கத்தில் இந்த வீடியோவை பகிர்ந்துள்ளார். அதில் குரங்கொன்று, தேநீர் கடையில் மனிதர்களைபோல் சமர்த்தாக அமர்ந்துகொண்டு தட்டு ஒன்றை முன்னும் பின்னுமாக திருப்பி கழுவுவதுடன், அதில் துர்நாற்றம் போய்விட்டதா என முகர்ந்து பார்ப்பதும் பதிவாகியுள்ளது.

# எத்தியோப்பியாவில் பஞ்சம்: பசியின் பிடியில் 4 இலட்சம் பேர்

உள்நாட்டுப் போர் நடைபெற்றுவரும் எத்தியோப்பியாவில் 4 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கடுமையான பஞ்சத்தில் சிக்கியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் நிவாரணப் பணிகள் பிரிவு இடைக்காலத் தலைவர் ரமேஷ் ராஜசிங்கம் தெரிவித்துள்ளதாவது:

"எத்தியோப்பியாவில் மோதல் நடைபெற்றுவரும் டிக்ரே மாகாணத்தில் கடுமையான பஞ்சம் நிலவி வருகிறது. கடந்த 2 வாரங்களில் நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது.

உள்நாட்டு யுத்தம் காரணமாக உணவுப் பற்றாக்குறையும் பட்டினியும் அபாய அளவைக் கடந்துள்ளது.

கடுமையான பஞ்சத்தைச் சந்தித்து வருவோரின் எண்ணிக்கை 4 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதுதவிர, மேலும் 18 இலட்சம் பேர் பஞ்சத்தில் சிக்கும் அபாயத்திலுள்ளனர்.

உண்மையான நிலவரம் இதைவிட மோசமாக இருக்கும் என்று சிலர் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட டிக்ரோ பகுதிக்கு உணவுப் பொருட்கள், மருந்துகள், ஊட்டச்சத்துப் பொருட்கள் மற்றும் பிற நிவாரணப் பொருட்கள் சென்று சேர்ந்தால்தான் அங்குள்ள



ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும்.

எனவே, அந்தப் பகுதிக்கு நிவாரணப் பொருட்களை நாம் கொண்டுசெல்ல வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்காக ஒரு வாரமெல்லாம் காத்திருக்க முடியாது. நாம் உடனடியாக டிக்ரே பகுதிக்கு நிவாரணப் பொருட்களை சென்றுசேர்க்க வேண்டும்" - என்றார் அவர்.

ஐ.நா. அரசியல் பிரிவுத் தலைவர் ரோஸ்மேரி டிகார்லோ கூறுகையில்,

"டிக்ரே பகுதியில் போர் நிறுத்தத்தை அரசு அறிவித்திருந்தாலும் அதனை முழுமையாக செயற்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரண உதவிகள் செய்வதை அரசு உறுதிசெய்ய வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

எத்தியோப்பியாவை ஆளும் எத்தியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி (இபிஆர்டிஎவ்) கூட்டணியில் டிபிஎல்எவ் மிக முக்கிய பங்கு வகித்து வந்தது. எனினும், 2018ஆம் ஆண்டு அபை அகமது பிரதமராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னர் மத்திய அரசுக்கும் டிபிஎல்எவ்வுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வந்தன.

அபை அகமது கொண்டுவந்த பல்வேறு சீர்திருத்தங்களுக்கு டிபிஎல்எவ் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. இந்தச் சூழலில், மத்திய அரசின் தடையையும் மீறி டிக்ரே மாகாணத்தில் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் பேரவைத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டால் அது போர்ப் பிரகடனத்துக்கு ஒப்பானது என்று டிக்ரே அதிகாரிகள் கூறினர். இது மிகப்பெரிய பதற்றத்தை ஏற்படுத்தியது.

இதற்கிடையே, கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெறுவதாக இருந்த பொதுத் தேர்தலை கொரோனா நெருக்கடியைக் காரணங்காட்டி பிரதமர் அபை அகமது ஒத்திவைத்து, தனது பதவிக்காலத்தை நீடித்துக்கொண்டார். இதற்கு டிக்ரே அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தச் சூழலில், டிக்ரே மாகாணத்திலுள்ள இராணுவ நிலையொன்றின் மீது டிபிஎல்எவ் படையினர் தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ்சாட்டிய பிரதமர் அபை அகமது, அந்தப் படையினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து டிக்ரே மாகாணத்துக்குள் நுழைந்த இராணுவம், தலைநகர் மிகேலியைக் கைப்பற்றியது. இந்தச் சண்டையில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர்; 3.5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பஞ்சத்தில் சிக்கினர்.

இந்தச் சூழலில், மிகேலி நகருக்கு வெளியே அரசு படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தீவிர மோதல் நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளியாகின. எனினும், மிகப்பெரிய படையுடன் வந்த கிளர்ச்சியாளர்கள் எதிர்பாராத வகையில் கடந்த திங்கட்கிழமை மீண்டும் தலைநகரை கைப்பற்றினர். அதையடுத்து, எத்தியோப்பிய அரசு போர்நிறுத்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

## உலக செய்திகள்

# 18.42 கோடியை கடந்த உலக கொரோனா பாதிப்பு

**"உலகம் அபாய கட்டத்திலுள்ளது" - எச்சரிக்கிறது உலக சுகாதார நிறுவனம்**

அதிவிரைவாக பரவும் டெல்டா போன்ற வீரிய கொரோனா வைரஸ் வகைகளால் உலகம் அபாய கட்டத்திலுள்ளது என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனாவால் இதுவரை 18.42 கோடிக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 39.87இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், இந்தியாவில் கண்டறியப்பட்ட உருமாறிய டெல்டா வைரஸ், தற்போது 98 நாடுகளில் பரவியுள்ளது. இது குறித்து உலக சுகாதார நிறுவனத் தலைவர் அதனோம் கேபிரியாசஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பல நாடுகளில் கொரோனாவின் உருமாறிய டெல்டா வைரஸ் அதிவேகமாக பரவி வருகிறது. தடுப்பூசி செலுத்துவதில் பின்தங்கியுள்ள நாடுகளின் மருத்துவமனைகளில் மீண்டும் நோயாளிகள் குவிந்து வருகின்றனர். இதுபோன்ற வைரஸ்கள் தொடர்ந்து உருமாறி, அதிக வீரியத்துடன் விரைவாக பரவும் தன்மை உள்ளவை என்பதால், உலகம் தற்போது அபாயகரமான கட்டத்தில் உள்ளது எனலாம். டெல்டா வைரஸை சமாளிக்க பொதுச் சுகாதார செயற்பாடுகளை முடுக்கிவிட வேண்டும்.

ஆரம்பத்திலேயே நோயை கண்டறியவும், கொரோனா பரிசோதனைகளை விரிவாக மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். கொரோனா பரவல் தடுப்பு விதிமுறைகள் பின்பற்றப்படுவதை தீவிரமாக கண்காணிக்க வேண்டும். இதுபோன்ற செயல்களால் டெல்டாபோல் மேலும் பயங்கர வைரஸ்கள் உருவாவதை தடுக்கலாம். அடுத்த ஓராண்டில் உலகில் 70 சதவீதம் பேருக்கு தடுப்பூசி செலுத்த முயற்சிக்க வேண்டும்.

குறைந்தது செப்டெம்பர் மாதத்திற்குள் ஒவ்வொரு நாடும் 10 சதவீதம் பேருக்காவது தடுப்பூசி செலுத்த வேண்டும்.



தடுப்பூசி நிறுவனங்கள் அந்தத் தொழில்நுட்பத்தை மற்ற நிறுவனங்களுடன் பகிர்ந்துகொண்டால், அதிகளவில் தடுப்பூசிகளை தயாரிக்கலாம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும்வரை) 18,42,47,551 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 39,87,466 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 16,86,26,075 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 1,16,34,010 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 77,796 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கொரோனா 3ஆவது அலையில் சிக்குண்டுள்ள ஆபிரிக்க நாடுகள்

ஆபிரிக்காவில் மக்கள் தொகையில் 1.1% பேருக்கே கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளதால் 3ஆவது அலையில் சிக்கியுள்ளது. மேலும், இந்தாண்டு இறுதிக்குள்ளாகவே ஆபிரிக்கா கொரோனாவின் 4ஆவது அலையை சந்திக்கக்கூடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆபிரிக்க கண்டத்தில் 3ஆவது அலை தாக்குதலால் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. மேலும், உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன.

## பிலிப்பைன்ஸ் விமான விபத்து: 17 பேர் பலி; 40 பேர் படுகாயம்



பிலிப்பைன்ஸில் இராணுவ விமானமொன்று விபத்துக்குள்ளாகி தீப்பிடித்து எரிந்ததில் 17 பேர் உயிரிழந்துள்ளதுடன், 40 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் 92 இராணுவ வீரர்களை அழைத்துச்சென்ற சி-130 ஹெர்குலஸ் என்ற பெயர்கொண்ட இந்த இராணுவ விமானம் தென் பகுதியிலுள்ள சுலு (Sulu) மாகாணத்தின் மணிலாவுக்கு தெற்கே 1000 கிலோமீற்றர் தொலைவில் ஜோலோ தீவு என்ற இடத்தில் இந்த சி-130 ரக விமானம் தரையிறங்க முயன்றவேளை விமானம் ஓடுதளத்தைவிட்டு விலகிச் சென்றுள்ளது. விமானத்தை மீண்டும் உயர்த்தும் விமானியின் முயற்சி பலனளிக்காமல் அது வீழ்ந்து நொறுங்கியுள்ளது.

விபத்தைத் தொடர்ந்து அங்கு விரைந்த மீட்புக் குழுவினர் ஹெலிகொப்டர்கள் வாயிலாக காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்துவருகின்றன. குறித்த விமானத்தில் மூன்று விமானிகளும் ஐந்து விமானப் பணியாளர்களும் இருந்துள்ளனர்.

இவர்களும் உயிரிழந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. சுலுவின் பிரதான நகரமாக இருக்கும் ஜோலோ மலைப் பிரதேசம். அங்கிருந்து சில தொலைவிலேதான் இந்த விமான நிலையம் அமைந்துள்ளது.

இங்கு தனிநாடு கோரி அபு சயாஃப் என்ற இஸ்லாமிய அமைப்பைச் சேர்ந்த போராளிகள் அந்நாட்டு அரசுடன் பல வருடங்களாக சண்டையிட்டு வருகின்றனர். இந்த அமைப்பை அமெரிக்காவும், பிலிப்பைன்ஸும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி தடை விதித்திருக்கின்றன. இங்கு பாதுகாப்புக்காக தான் விமானத்தில் இராணுவ வீரர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. அப்போதுதான் விபத்து நேர்ந்துள்ளது.

## புதிய விமானப் போக்குவரத்து நிறுவனம் தொடங்கும் சவூதி



எமிரேட்ஸ், கட்டார் விமான நிறுவனங்களுக்குப் போட்டியாக புதிய சர்வதேச பயணிகள் விமானப் போக்குவரத்து நிறுவனத்தை தொடங்க சவூதி அரேபியா திட்டமிட்டுள்ளது.

சவூதி அரேபியாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும் அந்த நாட்டின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக சவூதியை 5ஆவது மிகப்பெரிய விமானப் போக்குவரத்து மையமாக மாற்ற புதிய விமான நிறுவனத்தை தொடங்க அவர் திட்டமிட்டுள்ளார்.

ஏற்கனவே சவூதியா என்ற விமான நிறுவனத்தை அரசு செயற்படுத்திவரும் நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

போட்டி நிறைந்த சூழலில் சவூதி அரசு இந்த; திட்டத்தை செயற்படுத்தினால், பல ஆண்டுகளுக்கு இழப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

# ஜப்பானில் கடும் நிலச்சரிவு:

**20 பேர் மாயம்;**

**80 வீடுகள் புதைந்தன**

**35,000 பேர் வெளியேற்றம்**



ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் மேற்குப் பகுதி நகரமான அட்டாமியில் பலத்த மழையை தொடர்ந்து சனிக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய 20 பேர் காணாமல்போயுள்ளதுடன், சுமார் 80இற்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாக மண்ணுள் புதைந்துள்ளன. அத்தோடு சுமார் 35,000இற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், நிலச்சரிவு குறித்து இதுவரை முழுமையான தகவல்கள் உடனடியாக கிடைக்கப்பெறவில்லை.

ஜப்பானின் பல பகுதிகளில் இந்த வார தொடக்கத்திலிருந்து கடுமையான மழை பெய்து வருகிறது. இதனால், நிலச்சரிவு அபாயம் இருப்பதாக நிபுணர்கள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், டோக்கியோவிலிருந்து தென்மேற்கே 100 கி.மீ. தொலைவிலுள்ள அட்டாமி, ஒரு கடலோர நகரமாகும். நகரையொட்டிய ஒரு மலையின் அடிவாரத்திலிருந்து ஏற்பட்ட நிலச்சரிவானது மழைநீருடன் சேர்ந்து குடியிருப்புப் பகுதிகளை அடித்துக்கொண்டு சென்றது. இதில் சுமார் 80 வீடுகள் புதைந்தன. வழியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டன. பாலத்தின் ஒரு பகுதி உடைந்து நொறுங்கியது.

நிலச்சரிவில் சிக்கி மாயமானவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளதாக ஷிஷோகா மாகாண ஆளுநர் ஹெய்ட்டா கவாகட்ஷு தெரிவித்தார்.

பிரதமர் யோஷிகிடே சுகா அமைச்சரவையின் அவசர கூட்டத்தைக் கூட்டி, மீட்பு நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார்.

நிலச்சரிவு அபாயமுள்ள மேலும் பல பகுதிகளிலிருந்து பொதுமக்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கனடாவை வாட்டும் வெப்பம்: 7 நாட்களில் 719 பேர் பலி



கனடாவை கலங்கடித்துவரும் வெப்பத்தை தாக்குப் பிடிக்க முடியாத மக்கள் நீர்நிலைகளை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் வெப்பம் 49 டிகிரி செல்சியஸை கடந்து, அனல்காற்று வீசி வருகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கடந்த மாதம் 25ஆம் திகதி தொடங்கி 7 நாட்களில் மட்டும் 719 பேர் உயிரிழந்துள்ளனர். இது வழக்கத்தை விட 3 மடங்கு அதிகம் என்று கூறப்படுகிறது.

மேலும், கொளுத்தும் வெயில் காரணமாக லிட்டன் கிராமத்தில் ஒரே நேரத்தில் 100இற்கும் மேற்பட்ட இடங்களில் காட்டுத்தீ பற்றி எரிந்து வருகிறது. காட்டுத்தீ அந்த கிராமத்தில் பெரும் பொருட்சேதங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதனிடையே வெப்பத்தை எதிர்கொள்ளவும், உடலை குளிர்ச்சியுடன் வைத்துக்கொள்ளவும் பூங்காக்களில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நீரூற்றில், சிறுவர்கள் உற்சாகமாக குளியலிட்டு மகிழ்ந்தனர்.

## நடுக்கடலுக்கு மத்தியில் எரிமலை வெடிப்பைபோன்று ஏற்பட்ட தீப்பிழம்பு



மெக்சிகோ வளைகுடாவில் கடலுக்கடியில் செல்லும் எரிவாயு குழாயில் ஏற்பட்ட கசிவால், எரிமலை வெடிப்பை போன்று தீப்பிழம்பு சீறிய காட்சிகள் வெளியாகியுள்ளன.

அரசுக்குசொந்தமான பெமெக்ஸ் ( Pemex) என்ற எண்ணெய் நிறுவனத்துக்குச் சொந்தமான குழாயில் ஏற்பட்ட கசிவால் பயங்கர தீவிபத்து ஏற்பட்டுள்ளது. தகவலறிந்து நிகழ்விடத்திற்கு வந்த கடற்படை மற்றும் தீயணைப்புப் படையினர் 5 மணிநேர போராட்டத்துக்குப் பின் நைட்ரஜனை பீய்ச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து ஆய்வுசெய்து வருவதாக பெமெக்ஸ் தெரிவித்துள்ளது.

# Sports Diary

Last week

## திங்கள்

**★ இலங்கை வந்த தவான் படை**

தலா மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் விளையாடுவதற்கான ஷிகர் தவான் தலைமையிலான இந்திய அணி இலங்கையை வந்தடைந்தது.

**★ விம்பிள்டன் ஆரம்பம்**

டென்னிஸ் உலகின் உயரிய அந்தஸ்து கொண்ட கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் ஆரம்பமானது.

**★ வெளியேறிய நடப்பு உலக சம்பியன்**

யூரோ கிண்ண கால்பந்துத் தொடரின் நொக் அவுட் சுற்றுப் போட்டியில் சுவிட்ஸர்லாந்திடம் தோல்வியுற்ற நடப்பு பீபா உலக சம்பியனான பிரான்ஸ், தொடரிலிருந்து வெளியேறியது.

## செவ்வாய்

**★ வரலாற்றில் முதல் தடவை**

யூரோ கிண்ண கால்பந்துத் தொடரில் உக்ரைன் அணி முதல் தடவையாக காலிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

**★ கதறியழுத குழந்தை**



யூரோ கிண்ண கால்பந்துத் தொடரில் இங்கிலாந்து அணிக்கெதிரான ஆட்டத்தில் ஜேர்மனி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதால், ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு குழந்தை மைதானத்தில் கதறியழுதது.

## புதன்

**★ கண்ணீருடன் வெளியேறிய செரீனா**



23 தடவைகள் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் போட்டியில் விளையாடும் போது உபாதைக்கு உள்ளானதால் தொடரிலிருந்து கண்ணீருடன் வெளியேறினார். 8ஆவது தடவையாக விம்பிள்டன் சம்பியனாகும் அவரின் கனவு தகர்ந்தது.

**★ முதலிடத்தில் வில்லியம்சன்**

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் 901 தரவரிசைப் புள்ளிகளை பெற்று முதலிடத்திற்கு முன்னேறினார்.

## வியாழன்

**★ 12 வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம்**

ஹெங்கேரி தலைநகர் புத்தபிஸ்ட் நகரில் நடைபெற்ற உலக கிராண்ட் மாஸ்டர் சதுரங்கப் போட்டியில்



அமெரிக்காவைச் சேர்ந்த இந்திய வம்சாவளி சிறுவனான அபிமன்யூ மிஸ்ரா, 12 வயதிலேயே செஸ் விளையாட்டில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார். 12 வயது 4 மாதங்கள் 25 நாட்களில் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்று இச்சாதனையை அவர் எட்டியுள்ளார். ரஷ்யாவைச் சேர்ந்த செர்ஜி கர்ஜாகின் 12 வயது 7 மாதங்களில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றதே கடந்த 19 ஆண்டுகளாக சாதனையாக இருந்துவந்தது.

**★ பறிபோன டோக்கியோ ஒலிம்பிக்**

மகளிருக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் உலக சம்பியனான பஹ்ரைன் வீராங்கனை சல்வா ஈத் நாஸர், ஊக்கமருந்து பாவித்தமை தொடர்பான மருத்துவ சான்றைத் தவறவிட்ட காரணத்திற்காக 2 வருட தடை விதிக்கப்பட்டதால் டோக்கியோ ஒலிம்பிக்கில் விளையாடும் வாய்ப்பு அவருக்கு பறிபோனது.

**★ குழந்தைகளை அழைத்துச்செல்ல அனுமதி**

டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் தாய்ப் பாலுட்டும் வீராங்கனைகள், தங்களது குழந்தைகளை அழைத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**★ 8 வருட தடை**

ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்பு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் ஐக்கிய அரபு இராச்சிய வீரர்களான அமிர் ஹயத், அஸ்பாக் அஹமட் ஆகிய இருவருக்கும் ஐ.சி.சி. 8 வருடத் தடை விதித்தது.

## வெள்ளி

**★ இலத்திரனியல் பொருட்களில் ஒலிம்பிக் பதக்கம்**



மறுசுழற்சி செய்யப்பட்ட பழைய மடிக்கணினி, பயனற்ற ஸ்மார்ட் தொலைபேசிகள், டிஜிட்டல் கெமராக்கள் உள்ளிட்டவற்றை உடைத்து, அதிலிருந்த உலோகங்களைப் பிரித்து அவை டோக்கியோ ஒலிம்பிக் பதக்கங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**★ தடை தாண்டலில் உலக சாதனை**

நோர்வேயின் ஒஸ்லோ நகரில் நடைபெற்ற டைமண்ட் லீக் தடகளப் போட்டியில், ஆடவர் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில், நடப்பு சம்பியனான கார்ஸ்டன் வர்ஹோம் 46.70 வினாடிகளில் கடந்து 29 ஆண்டுக்கால உலக சாதனையை முறியடித்தார். கடந்த 1992 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் கெவின் யங் 46.78 வினாடிகளில் தூரத்தைக் கடந்ததே உலக சாதனையாக இருந்தது.

**★ வெளியேறிய முதல்நிலை அணி**

யூரோ கிண்ணக் கால்பந்து தொடரின் இரண்டாவது காலிறுதிப் போட்டியில் உலகின் முதல்நிலை அணியான பெல்ஜியம் அணியை 2-1 என்ற கோல்கள் கணக்கில் இத்தாலி வீழ்த்தியது. இதன் மூலம் பெல்ஜியம் அணி தொடரிலிருந்து வெளியேறியது.

**★ அடுத்தடுத்து மயங்கி விழுந்த வீராங்கனைகள்**

பாகிஸ்தான் - மேற்கிந்திய தீவுகள் மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கிடையில் ஆண்ட்டிகுவாவில் நடைபெற்ற 2ஆவது டி20 சர்வதேச போட்டியின்போது மே.இ.தீவுகள் அணியின் சினெல் ஹென்றி மற்றும் செடியன் நேஷன் ஆகிய இரு வீராங்கனைகள் அடுத்தடுத்து மைதானத்திலேயே மயங்கி விழுந்தனர். காரணம் கண்டறியப்படாத நிலையில் தற்போது அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## சனி

**★ வெளியேறிய இருமுறை சம்பியன்**

இரு தடவைகள் விம்பிள்டன் டென்னிஸ் சம்பியன் பட்டம் வென்ற பிரித்தானிய வீரரான அண்டி மரே, 10ஆம் நிலை வீரரான டெனிஸ் ஷபோலோவிடம் காலிறுதிப் போட்டியில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

**★ ஒலிம்பிக்கில் 13 வயது சிறுமி**



ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் மிக இள வயது வீராங்கனைகளில் ஒருவராக ஜேர்மனியை சேர்ந்த 13 வயதுடைய லில்லி ஸ்டோபாசியஸ் இடம்பிடித்துள்ளார். ஸ்கேட் போர்டிங் விளையாட்டு முதன்முறையாக டோக்கியோ ஒலிம்பிக்கில் இடம்பெற்றிருக்கிறது. இந்தப்போட்டிகளில் கலந்து கொள்ளும் 80 நாடுகளைச் சேர்ந்த வீராங்கனைகளில் ஒருவராக லில்லி ஸ்டோபாசியஸ் காணப்படுகிறார்.

**★ 8 போட்டிகளில் தடை**

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்துவீச்சாளரான ஒல்லி ரொபின்சன் தனது 18 மற்றும் 20 வயதிற்குள், கடந்த 2012 மற்றும் 2014 ஆண்டுகளுக்கிடையில் இனவெறி மற்றும் ஓரினச்சேர்க்கை தொடர்பில் பதிவிட்ட சர்ச்சைக்குரிய ட்வீட்கள் வெளிச்சத்திற்கு வந்ததைத் தொடர்ந்து அவர் இடைநீக்கம் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில் அவருக்கு 3 போட்டிகளில் உடனடியாகத் தடைவிதிக்கவும், 5 போட்டிகளில் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தடைவிதிக்கவும் கிரிக்கெட் ஒழுங்கு ஆணையம் அறிவித்துள்ளது. மேலும் அவருக்கு 3,200 பவுண்ட் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## ஞாயிறு

**★ டி20 தொடரை கைப்பற்றிய தென்னாபிரிக்கா**

சுற்றுலா தென்னாபிரிக்க அணிக்கும், மேற்கிந்திய தீவுகள் அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட டி20 சர்வதேச தொடரை தென்னாபிரிக்க அணி 3-2 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

**★ உலக சாதனை படைத்த மிதாலி**

ஒட்டுமொத்த சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீராங்கனைகள் வரிசையில், இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவி சார்லட் எட்வர்ட்ஸை பின்தள்ளி இந்திய அணியின் தலைவி மிதாலி ராஜ் 10 ஆயிரத்து 273 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்தார்.

**★ 29 ஆண்டுகளின் பின்னர் அரையிறுதி**

செக் குடியரசுடன் நடைபெற்ற யூரோ கிண்ண கால்பந்துத் தொடரின் காலிறுதிப் போட்டியில், கடந்த 1992ஆம் ஆண்டு யூரோ கிண்ண சம்பியனான டென்மார்க் அணி 2-1 என வெற்றி பெற்றதன் மூலம் 29 ஆண்டுகளுக்குப் பின்னர் யூரோ கிண்ணக் கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு தகுதி பெற்றது.





# ஊக்க மருந்தால் ஒலிம்பிக் பதக்க கனவு தகர்ந்தது

*(ரமணி)*

விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவரும் தமது உடல் நிலையைப் பராமரிப்பதற்காக பயன்படுத்தும் மருந்துகளில் தடை செய்யப்பட்ட மருந்துகள் சிலவேளை அளவுக்கு அதிகமாக இருப்பதே ஊக்க மருந்து சர்ச்சைக்குக் காரணமாகும். உலக தடகள மற்றும் உலக ஊக்கமருந்து எதிர்ப்பு ஏஜென்சியின் முறையீடுகளை விளையாட்டு நடுவர் நீதிமன்றம் (சி.ஏ.எஸ்.) உறுதி செய்கிறது.

ஒலிம்பிக்கில் மூன்று முறை தங்கம் வென்றவர் தான் ஜப்பானின் நீச்சல் வீரர் சன் யங். தடைசெய்யப்பட்ட மருந்து பயன்படுத்தியதால் நான்கு வருடங்களுக்கு அவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் 2024ஆம் ஆண்டு பெரீஸ் ஒலிம்பிக்கிலும் அவர் கலந்துகொள்ள முடியாத நிலை உள்ளது. இரத்தத்தில் ஊக்க மருந்து இருந்ததால் சன் யங்குக்கு எட்டு வருடத் தடை விதிக்கப்பட்டது. அவர் மேன்முறையீடு செய்ததால் நான்கு வருடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு ஊக்க மருந்து பாவித்ததால் சன் யங்குக்கு ஜப்பான் விளையாட்டு அமைப்பினால் மூன்று மாதத் தடை விதிக்கப்பட்டது. ஒலிம்பிக், உலக சம்பியன்ஷிப் ஆகியவற்றில் 11 தங்கம் வென்றவர் சன் யங். அடிக்கடி ஊக்க மருந்து சர்ச்சையில் சிக்குவதால் 2016 ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக்கில் போட்டியாளர்கள் அவரை ஒரு 'மருந்து ஏமாற்றுக்காரர்' என்று முத்திரை குத்தினர். மேலும், இரண்டு போட்டியாளர்கள் 2019 உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்க மேடைகளில் அவருடன் நிற்க மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# COPA America 2020



## அரையிறுதியில் பிரேசில் – பெரு, கொலம்பியா – ஆர்ஜென்டினா பலப்பரீட்சை

கோபா அமெரிக்க கால்பந்துத் தொடர் என அழைக்கப்படுகின்ற தென்னமெரிக்க நாடுகள் பங்கேற்கும் கால்பந்துத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு 4 அணிகள் தகுதி பெற்றுள்ளன. மூன்றாவது மற்றும் நான்காவது காலிறுதிப் போட்டிகள் நேற்று அதிகாலை நடைபெற்றிருந்தன.

இதில் ஒரு போட்டியில் உருகுவே மற்றும் கொலம்பியா ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின. வழங்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் எந்தவிதமான கோல்களையும் பெறாத நிலையில், இறுதியில் பெனால்டி முறையில் கொலம்பிய அணி 4-2 என்ற கோல்கள் கணக்கில் பலமிக்க உருகுவே




அணியை வீழ்த்தி அரையிறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை நேற்று அதிகாலை நடைபெற்ற நான்காவதும், இறுதியுமான காலிறுதிப் போட்டியில் ஆர்ஜென்டினா மற்றும் ஈக்குவடோர் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இப் போட்டியில் ஆர்ஜென்டினா 3-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. அதன்படி நாளை அதிகாலை நடைபெறுகின்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் பிரேசில் - பெரு ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ள நிலையில், நாளை மறுதினம் அதிகாலை நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொலம்பியா - ஆர்ஜென்டினா ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

EURO2020

## இத்தாலி – ஸ்பெயின், இங்கிலாந்து – டென்மார்க் அரையிறுதியில் மோதல்






24 ஐரோப்பிய நாடுகளின் பங்கேற்புடன் நடைபெற்று வருகின்ற யூரோ கிண்ண கால்பந்துத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு இத்தாலி, ஸ்பெயின், டென்மார்க் மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன. வெள்ளிக்கிழமை இரு காலிறுதிப்போட்டிகள் நடைபெற்றிருந்த நிலையில், நேற்று முன்தினம் இரு காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன.

ஒரு போட்டியில், டென்மார்க் - செக் குடியரசு ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த போட்டியில் டென்மார்க் அணி முதல் பாதி முடிவில் பெற்ற இரு கோல்களுடன் 2-1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இங்கிலாந்து – உக்ரைன் ஆகிய அணிகள் மோதிய இறுதி காலிறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணி 4-0 என்ற கோல்கள் கணக்கில் உக்ரைன் அணியை இலகுவாக வீழ்த்தி அரையிறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இதன் பிரகாரம் நாளை நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் இத்தாலி - ஸ்பெயின் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. நாளை மறுதினம் நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து - டென்மார்க் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. சம்பியனை தீர்மானிக்கும் மாபெரும் இறுதிப் போட்டியானது எதிர்வருகின்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

## இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தொழில்நுட்பம் சார் உதவி பொதுச் செயலாளராக அப்துல் மனாப்

*(எஸ்.அஷ்ரப்கான்)*



இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தொழில்நுட்பம் சார் உதவி பொதுச் செயலாளராக கல்முனை சனிமௌண்ட் விளையாட்டுக்கழக ஸ்தாபகரும், அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட சங்கத்தின் பொதுச் செயலாளருமான அப்துல் மனாப் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகத்தை தெரிவுசெய்தற்கான தேர்தல் கடந்த வாரம் மூன்று இடங்களில் நடைபெற்றது. இதில் ஜஸ்வர் உமர் தலைமையிலான குழுவினர் வெற்றிபெற்றனர். அதன் அடிப்படையில் தொழில்நுட்பம் சார் உதவி பொதுச்




செயலாளராக அப்துல் மானாப் தெரிவு செய்யப்பட்டார்.

தேசிய ரீதியில் அமைந்த இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு உதவிப் பொதுச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ள அப்துல் மனாப்பிற்கு கிழக்கு மாகாண விளையாட்டுக் கழகங்கள் சார்பில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7